REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2021 ஏப்ரல் 2 வெள்ளிக்கிழமை

89 1932 - 2021

வரு. 89 இல. 79 | April 02,Friday, 2021 | 24 பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil
கேட்டு வாங்குங்கள்...
ஏப்ரல் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!





நுவரெலியாவில் ஏப்ரல் வசந்தகாலம் 09



தமிழ் மக்களிற்கு பேரிழப்பு 12

டிரம்ப் வீடியோவை நீக்கியது பேஸ்புக் 16



இலங்கை 250 ஓட்டங்கள் குவிப்பு 24



மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை

## ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை காலமானார்



திங்கட்கிழமை மன்னாரில் நல்லடக்கம்

**மன்னார் குறூப், தலைமன்னார் விஷேட நிருபர்கள்**

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை தனது 80 ஆவது வயதில் நேற்று காலை காலமானார். 06

## தேர்தல் சீர்திருத்தங்களை ஆராய பாராளுமன்ற தெரிவுக் குழு



பிரதமர் முன்மொழிவு; திங்களன்று சபையில்

**சுப்பிரமணியம் நிசாந்தன்**

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண்பதற்கு பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பதற்கான பிரேரணை எதிர்வரும் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 06




## இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடலில் மீன் பிடிக்க அனுமதி?



வழங்கலாமென அமைச்சர் டக்ளஸ் யோசனை

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களை அனுமதிப்பதற்கான யோசனையொன்றை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியாவிடம் முன்வைத்துள்ளார்.

சில கட்டுப்பாடுகளின் கீழ் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் பிரவேசித்து, கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கும் வகையில், இந்த யோசனை 06

## யாழ். மாவட்டத்தில் மேலும் 17 தேசிய பாடசாலைகள்

அங்கஜனின் கோரிக்கைக்கு கல்வி அமைச்சர் இணக்கம்

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே 10 பாடசாலைகள் தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மேலும் 17 பாடசாலைகளை தேசிய பாடசாலையாக மாற்றுவதற்கு பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதனின் கோரிக்கையை கல்வி அமைச்சர் கலாநிதி ஜீ.எல் பீரிஸ் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

# மேலும் நால்வர் கைது





- சஹ்ரானுடன் தாக்குதல்தாரிகள் உறுதிமொழி எடுக்கும் படத்தை இணையத்தில் தரவேற்றிய ஒருவர்
- சஹ்ரானின் அடிப்படைவாத கருத்துக்களை சமூகத்தில் பரப்பிய மூவர்

**சுப்பிரமணியம் நிசாந்தன்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் சில மணி நேரங்களில் தாக்குதல் தொடர்பில் சஹ்ரான் உட்பட தாக்குதல்தாரிகள் உறுதிமொழியெடுக்கும் வீடியோவை இணையத் தளத்தில் வெளியிட்ட சந்தேகநபர் 06

## கனரக வாகனமொன்று முச்சக்கர வண்டியின் மீது விழுந்து விபத்து

மூன்று பெண்கள் ஸ்தலத்திலேயே பலி
சாரதி படுகாயம்; ஹக்கலையில் சம்பவம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



நுவரெலியா பதுளை பிரதான வீதியின் ஹக்கல பூங்காவிற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று 06

## ரஞ்சனுக்காக தனிநபர் பிரேரணைக்கு முஸ்தீபு

நியாயம் கிடைக்க மஹிந்தானந்த முயற்சி




சிறைத் தண்டனை அனுபவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்காவுக்கு நியாயம் வழங்குமாறு ஆளும் 06

உயிர்த்த ஞாயிறு பாதுகாப்பு

## ஒத்துழைப்பை கோருகிறது இராணுவ தலைமையகம்



உயிர்த்த ஞாயிறு தினத்துக்கு இணையாக பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இராணுவ தலைமையகம் சகல பாதுகாப்பு கட்டளை 06



## நேற்று முதல் ரூ1,000 பொதி ச.தொ.ச.வில்

12 அத்தியாவசிய பொருட்கள் அடக்கம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சலுகை விலையில் பொது மக்களுக்கு 06



தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சலுகை விலையில் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட 'சதொச சலுகை பொதி' வழங்கும் நிகழ்வை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தபோது...

பிணை முறி மோசடி வழக்கு;

## ரவி உள்ளிட்ட ஏழு பேரும் நேற்று பிணையில் விடுதலை



மத்தியவங்கி பிணை முறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட ஏழு பேருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 06

## பரீட்சைகள் திணைக்களம் தனியார் மயமாக்கலா?

பொய்யான செய்தி என்கிறார் ஆணையாளர்



இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தனியார் மயமாக்கப்படவுள்ளதாக சமூகவலைத்தளங்களில் வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானதென அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இதனை அறிக்கை ஒன்றினூடாக அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தின் தரவு அமைப்பு, வெளிநிறுவனம் அல்லது வெளித்தரப்பினருக்கு 06

விக்கல் வீராச்சாமி



புதுவருஷ கொண்டாட்டங்கள சனம் தவிர்த்தால் கொரோனாவையும் தவிர்க்கலாம்...

நீங்க வேற, வடக்கில நடக்கிற கோயில் திருவிழாக்களையும் கலியாண வீடுகளையும் பாத்தா கொரோனாவே பயப்படும்...!!!

Dialog HOME BROADBAND
பிற்கொடுப்பனவு Data Add-ons க்கான
டேட்டா டபுள் ஆகிவிட்டது
விரும்பிய வகையில் தெரிவு செய்து கொள்ள தினசரி, வாராந்த, மாதாந்த Data Add-on தெரிவுகள் ரூ.60/- முதல்
செயற்படுத்தல் MyDialog App, hbb.dialog.lk மூலம் அல்லது 678க்கு SMS செய்வதன் மூலம்

TRC/DBN/PRO/20/06
* வரிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது
அதிதுரித Home Broadband
Dialog எதிர்காலம் இன்றே.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 2 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
திනකරන්

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.53 |
| லுஹர் | 12.16 |
| அஸர் | 03.21 |
| மஃரிப் | 06.20 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | கஷ்டம் |
| மிதுனம் | நன்மை |
| கடகம் | சுபம் |
| சிம்மம் | வெற்றி |
| கன்னி | கௌரவம் |
| துலாம் | நிறைவு |
| விருச்சிகம் | மறதி |
| தனுசு | நஷ்டம் |
| மகரம் | போட்டி |
| கும்பம் | முயற்சி |
| மீனம் | தனம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

திண்மக்கழிவுகள் முகாமைத்துவம்;

# நிபுணர் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கை (31) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

திண்மக்கழிவு முகாமைத்துவம் உலகின் பல நாடுகளுக்கும், இலங்கைக்கும் ஒரு பெரிய பிரச்சினையாகும். முறையாக முகாமைத்துவம் செய்யப்படாத திண்மக்கழிவுகள் காரணமாக சுற்றுச்சூழல் மற்றும் நீர் மாசடைதல் மற்றும் மண்ணில் பல்வேறு இரசாயனங்கள் சேர்தல் போன்ற பல பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்களைக் கண்டறிந்து தீர்வுகளை முன்வைக்க ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் கடந்த ஜூலை மாதம் 14 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. பொறியியலாளர் ரொஹான் செனவிரத்ன அதன் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை ரொஹான் 06

# இராணுவத்தினரையும் நாட்டையும் காட்டிக் கொடுத்தவரே மங்கள

ஐ.நாவில் அதனையே இன்னும் எதிர்பார்க்கிறாரா?

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவே ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் நாட்டை காட்டிக்கொடுத்ததாக கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சதித்திட்டத்தின் கீழ்தான் நாட்டுக்கு எதிராகவும் இராணுவத்தினருக்கு எதிராகவும் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு மங்கள சமரவீர கையை உயர்த்திருந்தார். அப்போதைய பிரதமர் ரணில் விக்கரமசிங்கவிடம் மாத்திரமே கலந்துரையாடி மங்கள சமரவீர இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவளித்திருந்தார். 06

# சீன சினோபார்ம் குறித்து; அச்சமடைய தேவையில்லை

## பல நாடுகளிலும் பாவனையிலுள்ளது

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



சினோபார்ம் தடுப்பூசி தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தடுப்பூசியானது பல்வேறு நாடுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரமே இலங்கை மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

விசேட வைத்திய நிபுணர்களின் குழுவின் சிபாரிசுகளின் பிரகாரம் சீனாவால் வழங்கப்பட்டுள்ள சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். சினோபார்ம் முதலாவது தடுப்பூசியானது வழங்கப்பட்ட மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் இரண்டாவது தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்.

கர்ப்பிணித் தாய்மார்கள், 18 வயதுக்கும் குறைவானவர்கள் மற்றும் சில வகை நோய் உள்ளவர்களுக்கு இந்த தடுப்பூசியை வழங்க முடியாது. சிலர் சினோபார்ம் தடுப்பூசி தொடர்பில் அச்சம் கொண்டிருக்கக் கூடும். குறிப்பாக இந்த தடுப்பூசி எமது நாட்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாக அச்சம் கொண்டுள்ளனர். அவ்வாறு இல்லை, சினோபார்ம் தடுப்பூசியானது பல்வேறு நாடுகளில் வழங்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றகரமான தரவுகளின் அடிப்படையில்தான் 06

இந்திய அரசின் உதவியுடன்

# இலங்கையில் முன்னெடுக்கவுள்ள சுகாதார அபிவிருத்தி திட்டங்கள்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அமைச்சர் பவித்ரா, இந்திய உயர்ஸ்தானிகருடன் விரிவாக ஆராய்வு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையில் அண்மையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் பிரகாரம் இலங்கையில் விரைவாக பல சுகாதார அபிவிருத்திட்டங்களை இந்தியா மேற்கொள்ள முன்வந்துள்ளமைக்காக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் இலங்கையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சுகாதார அபிவிருத்திட்டங்கள் குறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே ஆகியோருக்கிடையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று சுகாதார அமைச்சில் நடைபெற்றது.



இதன்போதே அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்திய உயர்ஸ்தானிகரிடம் பிரதமர் மோடிக்கு தமது நன்றியை தெரிவித்ததுடன், இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் முன்னெடுக்கப்படும் சுகாதார அபிவிருத்திட்டங்கள் குறித்தும் ஆழமாக ஆராய்ந்தனர். 06

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள்

www.hcicolombo.gov.in விண்ணப்பிக்கலாம்

இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் கல்வி நிதியத்தினால் (CEWET) புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதற்காக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்தப் புலமைப் பரிசில்கள் க.பொ.த உயர்தரம், பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் மற்றும் இலங்கையின் ஏதேனும் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில்/தொழில்நுட்பக் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கானவையாகும்.

க.பொ.த சாதாரண தரத்தில் (குறைந்தது 6 திறமைச் சித்திகளுடன்) சித்தியடைந்த அல்லது உயர் தரத்தில்சித்தியடைந்த 25 வயதிற்கு குறைந்தவர்கள் இந்தப் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ், க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர் தரப்பரீட்சைப் பெறுபேற்றுத்தாள்கள், பெற்றோர்களது சமீபத்தைய சம்பளத்தாள் விபரம் மற்றும் பெற்றோரது வேலை தொடர்பாக தோட்ட அத்தியட்சகரினது அத்தாட்சி என்பவற்றின் போட்டோ பிரதிகளுடன் இணைந்ததாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் www.hcicolombo.gov.in எனும் இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை இந்திய உயர் ஸ்தானிகராலயம், 36 38 காலி வீதி, கொழும்பு 3 மற்றும் இந்திய பிரதி உயர் ஸ்தானிகராலயம், இல. 31,ரஜபிகில்ல மாவத்தை, கண்டி ஆகிய இடங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் கௌரவ செயலாளர்,CEWET மே/பா, இந்திய உயர் ஸ்தானிகராலயம், த.பெ எண் 882, கொழும்பு 03 என்ற முகவரிக்கு 2021ஏப்ரல் 30ஆம்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும் வகையில் அனுப்பப்படுதல் வேண்டும்.

# ரஞ்சனின் மனு மீதான விசாரணை ஏற்பதா? இல்லையா?

05 ஆம் திகதி தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாகுவதை தடுக்கும் வகையில் எழுத்துமூல ஆணை ஒன்றை பிறப்பிக்குமாறு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்பதா, இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 05 ஆம் திகதி தீர்ப்பு அறிவிப்பதாக மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று தெரிவித்தது.

31 ஆம் திகதி தீர்ப்பு அறிவிப்பதாக மேன் முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும் இந்த ரிட் மனு, அது தொடர்பிலான நடவடிக்கைகளுக்காக நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.



இதன்போது இத் தீர்ப்பு இன்னும் தயாராகவில்லையென அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி அர்ஜூன ஒபேசேகர மற்றும் மாயாதுன்னே கொரேயா ஆகியோர் அடங்கிய குழாம், தீர்ப்பை எதிர்வரும்05 ஆம் திகதிவரை ஒத்தி வைத்தது. அத்துடன், ரஞ்சனின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை எதிர்வரும் 05 ஆம் திகதி வரை நீடித்தது.

முன்னதாக தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, கடந்த 02 ஆம் திகதி மனுத்தாக்கல் செய்தார். மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் அவர் இந்த ரிட் மனுவை (எழுத்தாணை மனு) தாக்கல் செய்திருந்தார்.

சட்டத்தரணி தினேஷ் விதான பத்திரணவினூடாக தாக்கல் செய்த இம் மனுவில், பிரதிவாதிகளாக பாராளுமன்ற செயலாளர் 06

முல்லை சுதந்திரபுரத்திலுள்ள 15 ஏக்கர்

# தனது சொந்தக் காணியை மக்களுக்கு வழங்கிய சங்கரி



முல்லைத்தீவு, சுதந்திரபுரத்திலமைந்துள்ள தனது காணியை அரசாங்கத்திடம் கையளிக்கும் பத்திரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கையெழுத்திட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் வீ.ஆனந்தசங்கரிக்கு 15 ஏக்கர் மத்திய வகுப்பு காணியாக இருந்தது. இக் காணியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியேறி வசித்து வருகின்றனர். இந்தக் காணியை தமக்கே பகிர்ந்தளிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இக் காணியை மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு ஆனந்தசங்கரி எழுத்துமூலமான கோரிக்கையை பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபரிடம் முன்வைத்திருந்தார்.கொவிட்19 பரவல் காரணமாக இந்த நடவடிக்கை மந்த கதியில் நடைபெற்று வந்தது. காணியை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றது.

நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியிலுள்ள ஆனந்தசங்கரியின் இல்லத்துக்குச் சென்ற பிரதேச செயலக காணி அலுவலக உத்தியோகத்தர்கள் பகிர்ந்தளிப்பு செய்வது தொடர்பில் பேசியதுடன், மத்திய வகுப்பு காணியை அரசாங்கத்திடம் 06

# உடப்பு ஆண்டிமுனை மீனவர் சிறுகடலில் விழுந்து மரணம்

உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

**உடப்பு குறூப் நிருபர்**



உடப்பு, ஆண்டிமுனை பகுதியில் வசித்த ஒரு பிள்ளையின் தந்தையான கதிர்காமுத்தையா மணிநாதன் ( வயது 50)என்பவர் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை முந்தல் களப்பு பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற வேளை களப்பில் தவறி விழுந்து மரணமடைந்துள்ளார்.

அவரது சடலம் நேற்று மாலை சிறு கடல் பகுதியில் சுமார் 10 கிலோ மீற்றருக்கு அப்பால் உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவ தினம் கணவன் கரைக்கு திரும்பாத நிலையில் சந்தேகமடைந்த மனைவி உற்றார் உறவினர் உதவியுடன் ,பொலிஸ் நிலையத்தில் கணவனைக் காணவில்லையென முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து,உடப்பு பொலிஸ் மற்றும் கடற்படையினர் உதவியுடன் 31ஆம் திகதி புதன் காலை தொடக்கம் தேடுதல்கள் நடைபெற்றன. இதன்போது தோணி, மற்றும் இயந்திரப் படகுளை பயன்படுத்தி தேடுதல்கள் நடத்தப்பட்டன.

மிகவும் கஷ்டத்துக்கு மத்தியிலும் தேடுதலின் பின்னர் சடலம் நேற்று மதியம் வரையும் கண்டுபிடிக்கப் படவில்லை. அவர் மீன்பிடியில் ஈடுபட்ட படகு முந்தல் ஆற்றோரப் பகுதியில் வலை மற்றும் உபகரணங்களுடன் கரையொதுங்கியுள்ளது. நேற்று மாலை சிறு கடல் பகுதியில் சுமார் 10 கிலோ மீற்றருக்கு அப்பால் உருக்குலைந்த நிலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண் ஆளுமைக்கான விருது



கொவிட்19 காரணமாக கொழும்பு வடக்கு தொகுதி லுனுபொக்குன வட்டாரம் முடக்கப்பட்ட காலத்தில் அப்பகுதிலுள்ள நடுத்தர, வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டமை, பெண்களின் சுய தொழில் மேன்பாட்டுக்கு மாநகர சபை வழங்கும் தையல் இயந்திரங்களை வறுமையிலுள்ளவர்களை இனம் கண்டு வழங்கியமை, வட்டாரத்தில் சகல மக்களுடனும் ஒன்றிணைந்து மாநகர சபை அபிவிருத்திப் பணிகளை திறம்பட மேற்கொண்டு வருகின்றமைக்காகவும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க பெண் ஆளுமைக்கான விருதை பெற்றுள்ளார். காயத்திரி விக்கிரமசிங்கவிற்கு பிரபல அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் இலங்கை மன்றக் கல்லூரியில் வைத்து விருதை வழங்கி கௌரவித்தார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 148.92 | 154.14 |
| கனடியன் டொலர் | 155.51 | 161.53 |
| யூரோ | 230.35 | 237.68 |
| ஜப்பான் யென் | 1.7815 | 1.8344 |
| சிங்கப்பூர் டொலர் | 145.98 | 150.89 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 270.88 | 279.24 |
| சுவிஸ் பிராங்க் | 207.27 | 214.76 |
| அமெரிக்க டொலர் | 197.00 | 202.10 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 528.42 | கட்டார் ரியால் | 54.70 |
| குவைத் டினார் | 658.78 | சவூதி ரியால் | 53.10 |
| ஓமான் ரியால் | 517.45 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.23 |

54

2021

காலத்தில் மழை பெய்து பயிர் நிலங்கள் செழிப்பாகட்டும்

**2021ம் ஏப்ரல் மாதம் 4ம் திகதி காலை 7.30மணிக்கு ஜெயஸ்ரீ மகா போதி முன்னிலையில் விழா நடைபெறும்.**

புதிய அறுவடையின் முதல் பங்கை ஜெயஸ்ரீ மகா போதிக்கு வழங்குவதற்கு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கௌரவ விவசாய இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ அவர்களின் அழைப்பின் பேரில்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களின் தலைமையில்

கௌரவ விவசாய அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே மற்றும் விவசாய அமைச்சின் செயலாளர் விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளர் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் உட்பட

அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் விவசாய மக்கள், பழங்குடி மக்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறும்

அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் விவசாய மக்கள், ஆதிவாசி மக்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறும்





AGRO-S

කෘෂිකර්ම රාජ්‍ය අමාත්‍යාංශය
கமத்தொழில் இராஜாங்க அமைச்சு
**State Ministry of Agriculture**

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
**Department of Agrarian Development**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 20ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது

தான் பெற்ற உணவை பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை.

## புத்தாண்டு நெருங்கும் வேளையில் விழிப்புணர்வும் நினைவிருக்கட்டும்!

தமிழ்_சிங்களப் புத்தாண்டு பிறப்பதற்கு இன்னும் பத்து நாட்கள் உள்ளன. இலங்கை மக்களைப் பொறுத்த வரை சித்திரைப் புத்தாண்டென்பது குதூகலம் நிறைந்தது. தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் பொதுவானதொரு பண்டிகை இதுவென்பதால் எமது நாட்டின் மிகப் பெரும் பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டைக் குறிப்பிட முடியும்.

இலங்கையின் சுதேச இனங்களாகக் கொள்ளப்படுகின்ற தமிழ், சிங்கள மக்களுக்கென்று பொதுவானதொரு பண்டிகை வேறெதுவும் கிடையாது. சித்திரைப் புத்தாண்டு மாத்திரமே அத்தகையதொரு தனித்துவ பண்டிகை ஆகும். அது மாத்திரமன்றி தமிழ், சிங்கள மக்களால் பெரும் குதூகலமாகக் கொண்டாடப்படும் பண்டிகையும் இதுதான்.

சித்திரைப் புத்தாண்டு பிறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே மக்கள் மத்தியில் ஆனந்தம் களைகட்டி விடுவதுண்டு. தமிழ், சிங்கள மக்கள் இக்கொண்டாட்டத்துக்காக தங்களை தயார்படுத்தத் தொடங்கி விடுவார்கள். பெரும்பாலும் கிராமங்களில்தான் சித்திரையை மக்கள் களேபரமாகக் கொண்டாடுவது வழக்கம். மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்குவது ஒருபுறமிருக்க, குடும்பங்களிடையே உறவுகளைப் பலப்படுத்துவதற்கான வாய்ப்பாகவும் இப்புத்தாண்டு அமைந்து விடுகின்றது. புத்தாண்டு பிறந்ததில் இருந்து ஒரு வார காலத்துக்கு மேலாக கிராமங்கள் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதுண்டு.

ஆனால் கடந்த இரு வருடங்களாக சித்திரைப் புத்தாண்டு நாட்டில் சிறப்பாக அமையவில்லை. 2019ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு பிறந்ததும், ஒரு வார காலத்தில் நாட்டில் பேரனர்த்தமொன்று இடம்பெற்றது. புத்தாண்டைத் தொடர்ந்து ஏப்ரல் 21ஆம் திகதியன்று புனித உயிர்த்த ஞாயிறு தினத்தன்று, கொலைவெறிக் கும்பல் ஒன்றின் பயங்கரவாதத் தாக்குதலால் அப்பாவி மக்கள் ஏராளமானோர் பலியானது ஒருபுறமிருக்க, நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தார்கள். பயங்கரவாதிகளின் கொடிய தாக்குதலால் நாடே துயரத்தில் மூழ்கிப் போனது.

சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் ஒருபுறமும், ஈஸ்டர் ஞாயிறு கொண்டாட்டங்கள் மறுபுறமுமாக நாடு மகிழ்ச்சியில் மூழ்கியிருந்த வேளையில் இடம்பெற்ற காட்டுமிராண்டித்தனமான செயல் இது. அத்துயரத்தில் இருந்து மக்கள் படிப்படியாக மீண்டு கொண்டு வந்த வேளையில் மற்றொரு அச்சுறுத்தல் உருவெடுத்தது. சீனாவில் தொடங்கிய கொரோனா தொற்று படிப்படியாக உலகையே ஆக்கிரமிக்கத் தொடங்கியது. இலங்கையும் அதற்கு விதிவிலக்காகவில்லை.

எமது நாட்டிலும் கொரோனா தொற்று விரைவாக பரவியதன் காரணமாக 2020ஆம் ஆண்டிலும் சித்திரைப் புத்தாண்டு மாத்திரமன்றி, எந்தவொரு கொண்டாட்டமுமே சோபிக்கவில்லை.கொவிட்19 தொற்று அச்சத்தினால் மக்கள் தங்களது வீடுகளுக்குள்ளேயே முடங்கிப் போனார்கள் 2021 ஆம் ஆண்டிலாவது புத்தாண்டைக் கொண்டாடலாமென்று மக்கள் நினைத்திருந்த போதிலும், அந்த எண்ணம் கைகூடவில்லை.

நாட்டில் கொரோனா தொற்று பரவியதையடுத்து தற்போது சித்திரைப் புத்தாண்டை நாம் இரண்டாவது தடவையாக எதிர்கொள்கின்றோம். ஆனால் துரதிருஷ்டவசமாக இம்முறையும் சித்திரைப் புத்தாண்டு சோபிக்கப் போவதில்லை. ஏனெனில் கொவிட்19 அச்சுறுத்தல் எமது நாட்டை விட்டு இன்னுமே முற்றாக நீங்கவில்லை. கொவிட் தொற்றாளர்கள் புதிதுபுதிதாக இன்னுமே இனங்காணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கொரோனாவினால் சம்பவிக்கின்ற மரங்களும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டம் இம்முறையும் நாட்டில் களைகட்டவில்லை. கடந்த வருடத்தைப் போன்று இம்முறையும் மக்கள் தத்தமது வீடுகளில் இருந்தபடியே அமைதியான முறையில் இப்புத்தாண்டைக் கொண்டாடப் போகின்றனர். உறவினர்களுடன் ஒன்றுசேர்ந்து கூடிக் களிப்பதோ, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதோ இவ்வேளையில் உசிதமானதல்ல. அவ்வாறு மக்கள் ஒன்றுகூடுவது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

புத்தாண்டு கால கொண்டாட்டங்கள் தொடர்பாக அரசாங்கம் ஏற்கனவே நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கின்றது. புத்தாண்டு காலத்தில் ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறும், முடிந்த வரை கொண்டாட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் மக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கொரோனா அச்சுறுத்தல் படிப்படியாக தணிவு நிலைமைக்கு வந்து கொண்டிருக்கின்ற இவ்வேளையில், மூன்றாவது அலைத் தாக்கத்துக்கு நாடு சென்று விடக் கூடாதென்பதற்காகவே மக்களுக்கு இவ்வாறான ஆலோசனை கூறப்படுகின்றது.

சித்திரைப் புத்தாண்டு நெருங்கும் வேளையில் பஸ்கள் மற்றும் ரயில்களில் மக்கள் முண்டியடித்துச் செல்வதை அவதானிக்க முடியும். கிராமங்களில் பல்வேறு விதமான கேளிக்கை நிகழ்ச்சிகளுடன் மக்கள் ஒன்றுகூடுவதும் வழக்கம். இவையெல்லாம் மக்களின் மகிழ்வுக்குரிய விடயங்களாகும். ஆனாலும் மற்றொரு புறத்தில் இக்காலப் பகுதியில் கொரோனா ஆபத்தும் ஒளிந்துள்ளதென்பதை மறந்து விடலாகாது.

கொவிட் அச்சுறுத்தலில் இருந்து நாம் முற்றாக மீளும் வரை சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை மாத்திரமன்றி எந்தவொரு பண்டிகையையும் அமைதியான முறையில் கொண்டாடுவதே பொருத்தமானதாகும். விழிப்புணர்வையும் சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் தொடர்ந்து பேணினாலேயே எதிர் வரும் காலத்தில் நிம்மதியுடன் கொண்டாட்டங்களில் ஈடுபட வழியேற்படும்.

editor.tkn@lakehouse.lk

# பிறருக்கு ஒளி கொடுத்து தியாகத்தின் சின்னமாக அனைவரும் வாழ்வோம்!



## இன்று புனித வெள்ளி

ஒவ்வொரு மதத்திலும் திருவிழாக்கள் உள்ளன. கடவுள் தீமைகளை அழித்து நன்மை செய்வார், தன் மக்களை பாதுகாப்பார் என்று பார்க்கிறோம். கடவுள்கள் தீமைகளை அழிக்க அவதாரம் எடுத்திருக்கின்றார்கள் என்று பார்க்கின்றோம். ஆனால் கடவுள் மனிதனாக பிறந்தார் என்று எங்கும் பார்ப்பதில்லை.

கிறிஸ்து மட்டுமே நம்மைப் போல மனிதனானார். இந்த கடவுளின் மனித நிலை என்பது சாதாரண மனித நிலையேதான். பவுலடியார் கூறுவது போல,“இவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்” என்றுபார்க்கின்றோம் பிலிப்பியருக்கு எழுதிய மடலிலே. பிலி 2;:78

ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே கைக்குழந்தை ஒன்று வீட்டுக்கு வெளியில் விளையாடிக் கொண்டு இருந்தது. தாய் வீட்டு வேலையை பார்த்துக் கொண்டு இருக்கின்றாள். திடீரென்று ஒரு கழுகு பறந்த வந்து அந்தக் குழந்தையை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த ஒரு மலையில் கொண்டு போய் வைத்து அந்த குழந்தையை கொத்தி தின்ன காத்துக் கொண்டு இருக்கின்றது.

குழந்தையை தூக்கிக் கொண்டு பறப்பதை பார்த்த மக்கள் கத்துகிறார்கள். விரட்டப் பார்க்கிறார்கள். அங்கே ஒரு துறவி நின்றார். மக்கள் அவரிடம் சுவாமி "எப்படியாவது இந்தக் குழந்தையை காப்பாற்றுங்கள்" என்றார்கள்.

அவரோ "எனக்கு மலையேறத் தெரியாது. என்னால் ஏற முடியாது" என்று கைவிரித்து விட்டார். அங்கே நின்ற மற்றவர்களை கேட்டுப் பார்த்தார்கள். அவர்களும் ஏற மறுத்து பல காரணங்களைச் சொன்னார்கள்.

இவர்கள் பேசிக் கொண்டு இருக்கும் போது மலை மீது ஒரு பெண் துணிவோடு ஏறிக் கொண்டு இருக்கின்றாள். மக்கள் கீழே இருந்து "பார்த்து ஏறு, கவனம்" என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள். அவளுக்கு சறுக்குகின்றது. கீழே விழுகின்றவள், எதையோ பிடித்துக் கொண்டு மீண்டும் மேலே ஏறுகின்றாள். மலைஉச்சியை அடைந்து அந்தக் கழுகு மீண்டும் குழந்தையை தூக்கிப் போகாதபடி அடித்து விரட்டி அந்தக் குழந்தையை காப்பாற்றி பத்திரமாக கீழே வருகின்றாள்.

அப்போது அந்த மக்கள் கேட்டார்கள். என்னே உன் தைரியம்! "எப்படி இந்த துணிச்சலான காரியத்தை நீ செய்தாய்?" என்று கேட்ட போது "அது என் குழந்தை. என் குழந்தையை காப்பாற்ற என் உயிரையும் கொடுக்கத் தயங்க மாட்டேன்" என்றுசொன்னாள்.

அதுதான் உண்மை. சில பேருக்கு சந்தேகம் வரலாம். ஒரு கழுகு குழந்தையை தூக்க முடியுமா என்று? நான் ஒரு காணொளி காட்சி கண்டேன். அதில் மேய்ந்து கொண்டு இருந்த ஒரு ஆட்டையே கழுகொன்று தூக்கிக் கொண்டு பறந்தது. ஆக இந்தத் தாய் தன் குழந்தையை காப்பாற்ற யாரையும் எதிர் பார்க்கவில்லை. அவர்கள் யாரை அனுப்பலாம், யார் போவார்கள் என்று கலந்து ஆலோசிக்கும் பொழுதே இந்தத் தாய் அந்த மலை மீது ஏறி தன் குழந்தையை காக்க முற்பட்டாள்.

அதுதான் இந்த தியாக திருவிழா என்பது. இந்த உலகம், இந்த மக்கள் பாவம் என்னும் கழுகால் கொத்தித் தின்ன அழிக்கப்பட காத்துக் கொண்டு இருந்த போது இறைவன் யார் போவார் என் மக்களை மீட்க என்று காத்திருக்காமல் தான் அன்பு செய்த ஒரே மகனையே அனுப்பி இந்த மானிட சமுதாயத்தை காத்த விழாதான் இந்த புனித வெள்ளி.

எவ்வாறு காத்தார்? தன் உயிரை கையளித்து தன் இரத்தம் சிந்தித்தான் காத்தார். தன் இரத்தத்தை சிந்தி உயிரை கொடுத்து இந்த மானுடத்தை காத்த தினத்தைத் தான் அகில உலகமெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் புனித வெள்ளியாக கொண்டாடுகின்றார்கள். யோவான் கூறுகின்றார்,“தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வை பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்”. யோவான் 3:16.

இவரே பாவ பரிகார பலியாக தன்னையே ஒப்புக் கொடுக்கின்றார். பழைய ஏற்பாட்டிலே மக்களுடைய பாவங்களை போக்க ஆடு ஒன்றின் மீது பாவங்களை சுமத்தி பாலை நிலத்திற்கு அனுப்பி விடுவார்கள் என்று லேவியராகமத்தில் பார்க்கின்றோம். 16:2022 இல்,“இவ்வாறுஅவன் தூயகத்திற்கும்,சந்திப்புக் கூடாரத்திற்கும்,பலிபீடத்திற்கும் கழுவாய் நிறைவேற்றிய பின், உயிரோடிருக்கிறஆட்டுக்கடாவைக் கொண்டு வருவான் . ஆரோன் இரு கைகளையும் உயிரோடிருக்கும் அந்தக் கடாவின் மேல் வைத்து, இஸ்ரயேல் மக்களின் எல்லாக் குற்றங்களையும் தவறுகளையும் பாவங்களையும் அறிக்கையிட்டு அதன் தலை மேல் சுமத்தி,அதைப் பாலைநிலத்துக்குக் கொண்டு செல்ல நியமிக்கப்பட்ட ஆள் மூலம் அங்கு அனுப்பி விடுவான். அந்த வெள்ளாட்டுக் கடா அவர்களின் பாவங்களைச் சுமந்து கொண்டு தனிமையான இடத்திற்குச் செல்லும்; அந்த ஆள் அதைப் பாலை நிலத்தில் விட்டு விடுவான்.” இந்த செம்மறியைப் போலத்தான் மீட்பர் இயேசுவும் அனைத்து மக்களின் பாவங்களை போக்க அந்த செம்மறி போல தன் மேல் சுமந்து கொண்டு இந்த உலக மாந்தர்கள் அனைவரையும் அவர் மீட்டு விடுதலை கொடுத்திருக்கின்றார்.

அது போல பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று வந்து கொண்டு இருந்த வேளையில் விடுதலை கொடுத்த கடவுளை மறந்து தங்களுக்கு சுவையான உணவில்லை, சாப்பிட மாமிசம் இல்லை. எங்களை அழிக்கவா எகிப்திலிருந்து அழைத்து வந்தீர் என்று கடவுளுக்கும் மோயீசனுக்கும் எதிராக அவர்கள் முணுமுணுத்தனர். எனவே அவர்களை கொல்ல கடவுள் கொள்ளிவாய் பாம்புகளை அனுப்பி கடிக்க வைத்து பாலை வனத்தில் மக்கள் கொத்து கொத்தாக மடிந்து கொண்டு இருந்தார்கள்.

அப்போது அவர்கள் மோயீசனிடம் ஓடி வந்து எங்களைக் காப்பாற்றும் நாங்கள் மடிகின்றோம். நாங்கள் உனக்கெதிராகவும் கடவுளுக்கு எதிராகவும் பேசி விட்டோம். எங்களுக்காக இறைவனிடம் பரிந்துபேசும் எங்களை காப்பாற்றும் என்று மோயீசனிடம் அம்மக்கள் மன்றாடினார்கள். அப்போது இறைவன் அவர்கள், உயிர் பிழைக்க வேண்டும் என்றால் மோயீசனை வெண்கலத்தால் பாம்பு ஒன்றைச் செய்து ஒரு கோலில் உயர்த்திப் பிடித்துஅதை கடியுண்டவர்கள் கண்டால் அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்று கூற மோயீசனும் அவ்வாறேசெய்தார்.

அதைப் பார்த்த கடியுண்ட மக்கள் உயிர் பிழைத்தார்கள் என்று எண்ணாகமத்திலே பார்க்கின்றோம். எண்ணாகமம் 21:89,“ஆண்டவர் அவரை நோக்கி: வெண்கலத்தால் ஒரு பாம்பின் உருவம் செய்து, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வை. கடியுண்டவன் அதை உற்று நோக்கினால் உயிர் பிழைப்பான் என்று திருவுளம் பற்றினார்.

அவ்வாறே மோயீசன் வெண்கலப் பாம்பைச் செய்து அதை ஒரு கம்பத்தில் கட்டித் தூக்க, கடியுண்டவர்கள் அதைப் பார்த்து நலமடைந்தார்கள்” என்று பார்க்கின்றோம். அதனைத்தான் இயேசுவின் வாழ்விலும் பார்க்கின்றோம். கடவுளுக்கு எதிராக மக்கள் போகின்ற போது பாவம் என்ற சாத்தான் அன்று ஆதாம் ஏவாளை ஏமாற்றிய சாத்தான் இன்று பல மக்களையும் ஏமாற்றி அவர்களை பாவம் செய்ய வைக்கின்றது. பாவம் என்ற பாம்பு அவர்களை கடித்து கொன்று கொண்டு இருக்கின்ற வேளையில் அவர்களை விடுவிக்க தன் மகனை சிலுவையில் தொங்க விடுகின்றார்; யார் ஒருவர் இந்த சிலுவையை உற்றுப் பார்க்கின்றார்களோ அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்கிறார்.

அவ்வாறு தொங்க விடப்பட்ட நாளைத்தான் கிறிஸ்தவர்களாகிய நாம் புனித வெள்ளியாக கொண்டாடுகின்றோம். இவ்வாறு நம்மை அன்பு செய்த கடவுளின் மகனாகிய இயேசுவிற்கு நாம் கொடுத்த பரிசுதான் இந்த சாவு.

இந்த சமுதாயம் நல்லவர்களை என்றும் வாழ விடுவதில்லை. நல்லவர்களை எப்போதும் எதிரிகளாகவே பார்க்கின்றது. எனவேதான் நல்லவர்களின் வாழ்வை விரைவாக முடித்து விடுகின்றார்கள் அல்லது நாம் முடித்து விட பார்க்கின்றோம். இயேசு சென்ற இடமெல்லாம் நன்மைகள் செய்து கொண்டேசென்றார். எனவேதான் அவருக்கு காலில் ஆணிகளை அந்த சமுதாயம் பரிசாக கொடுத்தது. இயேசு எல்லா க்களுக்கும் உதவி செய்தார். எல்லா மக்களையும் ஆசீர்வதித்து அவர்களுக்கு புதுவாழ்வை கொண்டு வந்தார். பலரை தொட்டுக் குணமாக்கினார். எனவேதான் அவர் கைகளை விரித்து வைத்து அதிலே ஆணிகளை பரிசாக கொடுத்தார்கள்.

அவர் இதயம் முழுவதும் அன்பால் நிறைந்து இருந்தது. துன்பப்பட்டவர்களுக்காக கண்ணீர் விட்டார். சுமையால் சோர்ந்து போய் இருந்தவர்களைப் பார்த்து,"என்னிடம் வாருங்கள், நான் உங்களை இளைப்பாற்றுவேன்" என்றார். எந்தநிலையில் இருந்தாலும் நான் உங்களை விட்டு விலக மாட்டேன், கைவிடவும் மாட்டேன்" என்றார்.

அதனால்தான் அவருடைய இதயம் ஈட்டியால் குத்தி கிழிக்கப்பட்டது. இவ்வாறுஅவர் நம்மை மீட்பதற்காக தன் கடைசி துளி இரத்தத்தையும் சிந்தினார். நம்மை மீட்க தன் உயிரையும் இழக்க அவர் தயாரானார். எவ்வாறு அந்த தாய் தன் குழந்தையை அந்த கழுகிடம் இருந்து காப்பாற்ற தன் உயிரையும் பொருட்படுத்தாமல் மலை மீது ஏறி காப்பாற்றினாரோ அது போலத்தான் வானகத் தந்தையும் நம்மை அன்பு செய்த ஒரே காரணத்தினால்தான் அன்பு செய்ததன் ஒரே மகனையும் கையளிக்கத் துணிந்தார், கையளித்தார். அந்த நாளைத்தான் நாம் நினைவு கொண்டு கொண்டாடுகின்றோம்.

இயேசு கொண்டு வந்த மீட்பு என்பது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, அவர் மீது நம்பிக்கை கொண்ட அனைத்து மக்களுக்காகவும் தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவருடை மீட்பு என்பது இனம் சார்ந்தோ, மொழி சார்ந்தோ நாடு சார்ந்தோ அல்லது கலாசாரம் சார்ந்தோ வந்த ஒன்று அல்ல மாறாக எதுவுமே பார்க்காமல் மனிதத்தை மட்டும் பார்த்து கொடுக்கப்பட்ட ஒன்று. ஆக இந்த விழா என்பது அனைத்து மக்களாலும் இணைந்து கொண்டாடப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

எவ்வாறு இயேசு தன் வாழ்க்கையை அழித்து பிறருக்கு வாழ்வு கொடுத்தாரோ அது போல கிறிஸ்தவர்களாகிய நாமும் நம் தலைவனாம் இயேசுவைப் பின்பற்றி பிறர் வாழ நம் வாழ்க்கையை கொடுக்கின்ற மக்களாக மாறுகின்ற போது நாமும் மறு கிறிஸ்துவாக மாறுகின்றோம் என்ற உண்மையை உணர்ந்து வாழ முயற்சி எடுப்போம். நாமும் எரியும் திரி தன்னை அழித்து பிறருக்கு ஒளி கொடுப்பது போல நம்வாழ்வும் பிறருக்காக எரிந்து வாழ்வு கொடுக்கும் திரியாக, தியாகத்தின் சின்னமாக வாழ்வோம்.

**அருட்தந்தை ஜோசப் கென்னடி**

# இறக்காமம் பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்

இறக்காமம் பிரதேசம் பல கிராமங்களைக் கொண்டுள்ளதனால் அங்கு வாழும் மக்களுக்கு பாதை அபிவிருத்தித் திட்டங்கள் பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றன. காலத்திற்கு காலம் பொதுமக்களின் பெருக்கத்திற்கேற்ப பரவலான குடியமர்வுகளுக்கு பாதை அவசியமாகும். இதற்கு அரசாங்கம் கொண்டு வந்துள்ள சுபீட்சத்தின் நோக்கு கருப்பொருளிலான ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி சிறந்த திட்டமாக அமைகின்றது.

அதேபோன்று சௌபாக்கியா இல்லம், கிராமத்திற்கு ஒரு வீடு, காணித்துண்டுகள் வழங்கும் திட்டம் என்பன அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. சௌபாக்கியா இல்லம் வேலைத் திட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கு வீடு, வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் மரக்கறி கன்றுகள், நிழல் தரும் மரங்கள், தென்னங்கன்றுகள் என்பன வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

அதேபோன்று கிராமத்திற்கு ஒரு வீடு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வீடு அமைக்கப்பட்டு வருகின்றது. இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் வேலைத் திட்டம் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் வேலைத்திட்டங்களை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களில் பொதுமக்களின் பங்களிப்பும் முக்கியமானதாக காணப்படுகின்றது. சுபீட்சத்தின் நோக்கு கருப்பொருளுக்கமைய ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலை திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 20 கிலோமீற்றர் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.





இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜே.கலீலுல் றஹ்மானின் வேண்டுகோளின் பேரில் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் இவ்வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காபட் வீதிகளும், கொங்கிறீட் வீதிகளும் இவ்வேலைத் திட்டத்தில் அடங்குகின்றன. இதற்காக சுமார் 30 கோடி ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

இறக்காமம் மாணிக்கமடு வீதி, தேசிய பாடசாலை வீதி என்பன காபட் வீதிகளாகவும், நியுகுண வீதி, இலுக்குச்சேனை வீதி, வட்டிச்சேனை வீதி, ஆப்தீன் வீதி, மையவாடி வீதி, வாழைக்காலை வீதி, அறபாநகர் வீதி, தென்னை கிராம வீதி, சந்தை வீதி, ஜபல் விலேஜ் வீதி, குடிவில் வீதி, குளத்தாவடி வீதி, புதுநகர் வீதி என்பன கொங்கிறீட் வீதிகளாகவும் புதுப்பொலிவு பெற்று வருகின்றன.

சில வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு நிறைவு பெற்றுள்ளதுடன், ஏனைய வீதிகள் கொங்கிறீட் மற்றும் காபட் இடப்பட்டு வருகின்றன.

**எம்.எல்.சரிப்டீன்...**
**(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)**

# தமிழ் மக்களின் துயர் துடைக்க வாழ்வை அர்ப்பணித்த இராயப்பு யோசேப்பு ஆண்டகை

**மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் 01.04.2021 வியாழக்கிழமை அன்று தனது 80வது வயதில் இறைபதமடைந்தார்.**

மன்னார் மறைமாவட்டத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஒளிவிளக்கு இப்போது அணைந்து விட்டது. நலிந்த மக்களுக்காக ஓங்கி ஒலித்த குரல் இன்று அமைதியடைந்து விட்டது. மனித உரிமைகளின் காவலராக விளங்கிய துணிவுமிக்க ஒரு தலைவர் இன்று நீங்காத் துயில் கொண்டு விட்டார். அன்னாருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம். அவரது ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக!

இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டம் சார்ந்த தனது சமயக் கடமைகளை செவ்வனே நிறைவேற்றினார். ஒரு மறைமாவட்டத்தில் ஆயர் செய்ய வேண்டிய பணிகளை அவர் முழுமையான உற்சாகத்தோடு செய்தார். திருப்பலி, திருவிழாக்கள், பங்குத்தரிசிப்புக்கள், ஆலோசனைகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆலய மற்றும் பங்குமனைக் கட்டுமானங்கள், ஏழைகளுக்கான உதவிகள் என அவர் தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்தார்.

இவர் மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்ற பின்னர் மறைமாவட்டத்தை ஆன்மீக, ஒழுக்க, சமூக, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்ற பல்வேறு புதிய முயற்சிகளை முன்னெடுத்தார். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடுகளைக் கூட்டி குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என அனைத்துத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று, திட்டங்களைத் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சித்தார்.

இவருடைய காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் பல புதிய பங்குகள் உருவாக்கப்பட்டன. இவர் மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுத்தபோது 15 பங்குகள் இருந்தன. இவர் ஓய்வுபெறும்போது 38 பங்குகளாக அவை அதிகரித்திருந்தன.

யுத்த சூழ்நிலையில் பல ஆலயங்கள், பங்குமனைகள் அழிக்கப்பட்டன அல்லது சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. பல ஆலயங்கள் மற்றும் பங்குமனைகள் கால நீட்சியினால் பழுதடைந்த நிலையில் இருந்தன. இவ்வாறான நிலையில் பல்வேறு தரப்பிலிருந்து உதவிகளைப் பெற்று புதிய ஆலயங்களை, புதிய பங்குமனைகளைக் கட்டி எழுப்ப இவர் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்.

பம்பைமடுவில் அன்னை திரேசாவின் அருட்சகோதரிகளை வரவழைத்து முதியோர் மற்றும் கைவிடப்பட்டவர்களைப் பராமரிக்க ஒரு இல்லத்தை ஆரம்பித்தார். முருங்கனில் டொன் பொஸ்கோ குருக்களை வரவழைத்து இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்க ஆவன செய்தார். அடம்பனில் இயேசு சபைக் குருக்களை வரவழைத்து அவர்களின் பணி மறைமாவட்டத்திற்கு கிடைக்க வழி செய்தார்.

இந்தியாவில் இருந்து பல புதிய பெண் துறவற சபைகளை மன்னார் மறைமாவட்டத்திற்கு வரவழைத்து இந்திய அருட்சகோதரிகளின் பணியை மக்கள் பெற வழிவகுத்தார். புதிதாக உருவாக்கப்பட்ட பங்குகளில் புதிய கன்னியர் மடங்களையும் ஏற்படுத்தி மக்களை ஆன்மீகத்திலும், ஒழுக்கத்திலும் வளர்க்கப் பாடுபட்டார். மடுத்திருப்பதியில் தியான இல்லம் ஒன்றைக் கட்டியெழுப்பி அதன் மூலம் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஏனைய மறைமாவட்டத்தவர்களும் பயன்பெற வழிகோலினார்.

குருக்கள் துறவியர் நலனில் அக்கறையோடு செயற்பட்டார். பொதுநிலையினரின் உருவாக்கத்தில் அதிக கரிசனை எடுத்தார். திருச்சபையின் திருவழிபாடுகளை திருச்சபை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப நடத்தவேண்டுமென்பதை வலியுறுத்தினார். இவ்வாறு ஓர் ஆயர் என்ற வகையில் தனது மறைமாவட்டம் சார்ந்த கடமைகளில் அவர் அதிக ஈடுபாட்டோடு, அர்ப்பணிப்போடு உழைத்தார். இதை விட இலங்கை ஆயர் பேரவையில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பாகச் செய்தார்.

கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்துநின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும்பாடுபட்டார். சிறைகளில் வாடும் கைதிகளை அவர் அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமல் போனோர் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார். யுத்தத்தால் தமது இடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார்.யுத்தத்தால் தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்கள் தொழில்களை ஆரம்பிக்க வேண்டிய உதவிகளைச் செய்தார்.

யுத்தத்தால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு வாழ்வுதய நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவு மூலம் உதவிகளைப் புரிந்தார். வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வரோட் நிறுவனத்தின் ஊடாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்காகப் பாடுபட்டார். யுத்தத்தாலும், சுனாமியினாலும் பெற்றோரை இழந்து ஆதரவற்று நின்ற பெண் சிறார்களுக்கு வவுனியாவில் சலேசிய அருட்சகோதரிகளின் பராமரிப்பில் ஒரு இல்லத்தை ஆரம்பித்தார். அதேபோல் மன்னாரிலும் ஆண் சிறார்களுக்கான ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இன்னும் பல துயர்துடைப்புப் பணிகளை முன்னெடுத்தார்.

விமானக் குண்டுத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல்கள் என எப்படியான அனர்த்தங்கள் இடம்பெற்றாலும் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற முதல் ஆளாக களத்திற்கு விரைந்து சென்றார். காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். இழப்பின் சோகத்திலும், அச்சத்திலும், ஆபத்திலும் இருந்த மக்களுக்கு தனது



## மக்கள் பணிக்காக இறுதித் தறுவாய் வரை பிரகாசித்த ஒளிவிளக்கு

பிரசன்னத்தினால் ஆறுதலைக் கொடுத்தார். இதுபோன்று பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள்மேல் அக்கறையுள்ள ஓர் நல்ல ஆயனாக, அவர் அனர்த்தங்களின் செய்தியை அறிந்து ஆபத்துக்கள் மத்தியில் களத்திற்கு விரைந்து சென்றார். போர்ச் சூழல் நிலவிய காலத்தில் ஆயர் யோசேப்பு ஆண்டகை குரலற்ற தமிழ் மக்களின் குரலாக ஒலித்தார். உண்மைகளை எடுத்துக்காட்டிய, நீதியை வலியுறுத்திய அவருடைய குரல் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஓங்கி ஒலித்தது.

ஆட்சியில் இருந்த அரசுத் தலைவர்களை, அமைச்சர்களை மற்ற ஆயர்களுடனும், தனியாகவும் காலத்துக்குக் காலம் சந்தித்து மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தார். தன்னைச் சந்திக்க வரும் அரசாங்க அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐக்கியநாடுகள் சபையின் பல்வேறு பிரிவைச் சார்ந்த பிரதிநிதிகள் போன்றவர்களுக்கு களநிலைமைகளை தெளிவாக விளங்கப்படுத்தினார். இவ்வாறு அவர் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தார்.

ஆயர் யோசேப்பு ஆண்டகை இயல்பாகவே இறைவாக்கினருக்குரிய துணிவைப் பெற்றிருந்தார். துன்புறும் மக்களுக்காக இரங்கும் இரக்க உள்ளத்தையும் அவர் பெற்றிருந்தார். இவை அனைத்திற்கும் மேலாக காலத்தின் தேவைக்கு பதில் அளிக்க வேண்டிய ஒரு நல்ல திருச்சபைப் பணியாளனுக்குரிய தெளிவையும் அவர் கொண்டிருந்தார்.

தன் ஆடுகளுக்காக உயிர் கொடுத்த நல்லாயன் இயேசுவை அவர் தன் கண்முன் கொண்டிருந்தார். ஆயர் யோசேப்பு ஆண்டகை பணி செய்த காலம் ஓர் இக்கட்டான காலம். இப்படியான உயிராபத்து மிக்க ஒரு காலகட்டத்தில்தான் ஆயர் யோசேப்பு ஆண்டகையின் பணி நடைபெற்றது.

ஆயர் அவர்கள் மக்களின் அடிப்படைத் தேவைகள், நிவாரணம் வழங்கல், மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயலாற்றினார். விடுதலைப் புலிகள், தமிழ் அரசியல் தலைவர்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினருடனும் அவர் தொடர்பாடல்களை மேற்கொண்டிருந்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் பல்வேறு தொடர்பாடல்களை, கலந்துரையாடல்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து ஆலோசித்தார். அதேபோன்று அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களோடும் நெருங்கியவிதமாகச் செயலாற்றினார். இதன் காரணமாக பல்வேறு தரப்பினரிடமிருந்து எதிர்ப்புக்களை, விமர்சனங்களை, கண்டனங்களை எதிர்கொண்டார்.

1992ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடுப் பகுதியில் அவர் சுகவீனமடையும் வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக இயங்கி வந்தார். திருச்சபையின் ஒழுங்குவிதிக்கு அமைய 75 வயது நிறைவில் தான் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1 இற்கு அமைவாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு அறிவித்தார். 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி இவருடைய பணி ஓய்வுக்கான கோரிக்கையை திருத்தந்தை ஏற்றுக் கொண்டார்.

ஆயர் அவர்கள் மக்கள் பணியில் தன்னை முழுமையாகக் கரைத்துக் கொண்டார். இரவு பகல், மழை, வெயில் பாராது நீண்ட பயணங்களை மேற்கொண்டார். கண் துஞ்சாது, பசி நோக்காது கருமமே கண்ணாகச் செயற்பட்டார்.

2014ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வின் போது மன்னார் தமிழ்ச் சங்கம் 'இனமான ஏந்தல்' என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. 2015ஆம் ஆண்டு கொழும்புக் கம்பன் கழகம் இவருக்கு கம்பன் புகழ் விருதினை வழங்கிக் கௌரவித்தது.

ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபை, இன்னும் குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயர் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற விழைய வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். ஆயர் யோசேப்பு ஆண்டகையின் வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும்.

**அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார்**

# நலிவுற்ற மக்களுக்காக ஒலித்த குரல் ஓய்ந்தது!



**மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் பேரருட்திரு. கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக தனது 80 ஆவது வயதில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.**

நீண்ட நாட்களாக உடல் சுகவீனம் காரணமாக ஓய்வு நிலையில் இருந்த மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர், யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.


மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் பேரருட்திரு. இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் தனது ஆயர் பணியில் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளி விழா கண்டுள்ளார்.

இவர் மன்னார் மறை மாவட்டத்தின் இரண்டாவது ஆயராக 1992ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார். அவர் 16.04.1940 அன்று யாழ்ப்பாணம், நெடுந்தீவில் பிறந்தார். நெடுந்தீவு ரேகா பாடசாலை , முருங்கன் மகாவித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியை தொடர்ந்தார்.

கண்டி தேசிய குருமடம் , திருச்சி புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று, 13.12.1967 ஆம் ஆண்டு முன்னாள் யாழ் ஆயர் எமிலியான்ஸ் பிள்ளை ஆண்டகையினால் யாழ் மரியன்னை பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1992ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி முன்னாள் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் மன்னார் மாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்று, 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உட்பட இலங்கையின் ஏனைய ஆயர்கள் புடை சூழ மருதமடு அன்னையின் ஆலயத்தில் ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டார்.

முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மறை மாவட்டம் மத்தியிலான தமது கடமைகளை



செவ்வனே நிறைவேற்றி வந்தார். நாட்டில் நிலவிய கொடூரமான யுத்த சூழலில் துன்பங்களைச் சுமந்த மக்களின் துயரங்களைத் துடைக்க அரும் பாடுபட்டார். மக்களின் பிரச்சினைகளை சர்வதேச ரீதியில் வெளிக் கொண்டு வரவும் பாடுபட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களையும், கடத்தப்பட்டவர்களையும் கண்டு பிடிப்பதற்காக குரல் கொடுத்தார். மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தினார். குறிப்பாக மக்களின் காணி அபகரிப்பு, மீனவர்களின் பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்தார்.

தமிழ் இனத்தின் துன்பங்களைத் தீர்க்க குரல் கொடுத்தமையால் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். பல விசாரணைகளுக்கும் முகம் கொடுத்தார். 2013 ஆம் ஆண்டு வடமாகாண தேர்தல் அறிவிக்கப்பட இருந்த நேரத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஏற்பட்ட பிளவுகளை சரி செய்து, தமிழ் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து சி.வி .விக்னேஸ்வரனை முதல்வர் வேட்பாளராக்குவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

இறுதியாக 2015இல் திருந்தந்தையின் இலங்கை பயணத்திற்கான முதலாவது அட்டவணை வெளியிட்டப்பட்ட போது, அதில் தமிழ் மறை மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்து போராடி இறுதியில் திருத்தந்தையை மறைசாட்சிகளின் பூமியாம் மன்னாருக்கு அழைத்து வந்தது மட்டுமன்றி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை முன் கதிரைகளில் அமர வைத்து அவர்களின் வேதனைகளை திருத்தந்தைக்கு தெளிவுபடுத்தினார்.

1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை, அதாவது அவர் சுகயீனம் அடையும் வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக பணி செய்து வந்தார். அவர் கடந்த 2015 ஆண்டு நடுப்பகுதியில் திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் ஆயர் தனது ஓய்வை அறிவித்தார்.

இவருடைய பணி ஓய்வுக்கான கோரிக்கையை பாப்பரசர் ஏற்றுக் கொண்டார்.இந்த நிலையில் சிறிது காலம் ஆயர் இல்லத்தில் இருந்து மக்களுக்காக தனது பணியை மேற்கொண்டார். எனினும் சுகவீனம் காரணமாக தொடர்ந்தும் அவர் மக்களுக்காக பணி செய்ய முடியாத நிலையில் காணப்பட்டார்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்த ஓய்வு நிலை ஆயர் அவர்கள், யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் மருத்துவ நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் இவ்வுலகை விட்டு பிரிந்தார். இவரது பிரிவு விசேடமாக உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு பேரிழப்பு ஆகும்.



**எஸ்.றொசேரியன் லெம்பேட்...**
**(மன்னார் குறூப் நிருபர்)**

# பேராயரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது

## பே.யோகராஜ் இரங்கல்

மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை பேராயர் பேரருட்திரு இராயப்பு ஜோசப்பின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகுமென புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடகச் செயலாளர் பே.யோகராஜ் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இலங்கையில் ரோமன் கத்தோலிக்கத்தை பின்பற்றுபவர்களுக்கும் வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கு உன்னதமான சேவையை செய்துள்ள மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப்புக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

## நிபுணர் குழுவின் அறிக்கை... (02ஆம் பக்கத் தொடர்)

சென‌விரத்ன ஜனாதிபதியிடம் கையளித்தார். நிபுணர் குழு அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பில் முழுமையானதொரு பின்தொடரல் செய்யப்பட வேண்டியதன் முக்கியத்துவம் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கழிவு முகாமைத்துவத்தில் வெளிச் சுற்றுச்சூழல் காரணிகள் தொடர்பில் அக்கறையில்லாத காரணத்தினால் மக்கள் எதிர்ப்புகள் ஏற்படுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி , ஈக்கள் மற்றும் நுளம்புத் தொல்லையையும் துர்நாற்றம் ஏற்படுவதையும் தடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

## இராணுவத்தினரையும்... (02ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையில் எவ்வித அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை.

மங்கள சமரவீர ஜெனிவா சென்று இவ்வாறு காட்டிக்கொடுத்ததன் காரணமாகவே இராணுவ வீரர்களை வரிசையாக சிறையில் அடைத்தனர். புலனாய்வுப் பிரிவை சீர்குலைத்தனர். அதனையா மங்கள சமரவீர எம்மையும் செய்ய சொல்கிறார்? அதற்காகதான் எமது அரசாங்கத்தை மக்கள் கொண்டுவந்தனரா? மங்கள சமரவீரவின் பாதையில் பயணிக்கவா 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்தனர்? இது மேற்கத்தேயே அடிமை முறைக்கு எதிராக செயற்படும் அரசாங்கமாகும்.

மேற்கத்தேய நாடுகள் கூறும் சமாதான வழியில் சென்று நாட்டை பிரித்துக்கொடுத்திருந்தால் சமாதானத்துக்கான நோபால் பரிசுதான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்திருக்கும். அவர் நோபல் சமதான பரிசை பெற்றுக்கொள்ள நாட்டை காட்டிக்கொடுப்பதற்கு மாறாக தீவிரவாதத்தை ஒழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் வழியை பின்பற்றியதால்தான் இன்று அனைத்து இனங்களும் நாட்டில் சுதந்திரமாக வாழ்கின்றன என்றார்.

## சீன சினோபார்ம் குறித்து;... (02ஆம் பக்கத் தொடர்)

எமது நாட்டில் அவசரகால பயன்பாட்டுக்கு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இதுவரை முதல் டோஸ் ஆக 9,19,753 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் இரண்டாவது தடுப்பூசியை வழங்கும் செயற்பாடும் எதிர்காலத்தில் இடம்பெறும் என்றார்.

## இலங்கையில் முன்னெடுக்கவுள்ள... (02ஆம் பக்கத் தொடர்)

இரத்தினபுரி போதனா மருத்துவமனையில் இருதயவியல் பிரிவை நிறுவுதல், யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் மகப்பேறு வளாகத்தை அமைத்தல், தங்காலை வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சை வளாகத்தை அமைத்தல் மற்றும் தெஹியத்தக்கண்டி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர். இந்த சந்திப்பின் போது, இலங்கையில் சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய பிரதமரின் ஒத்துழைப்புகளுக்கு சுகாதார அமைச்சர் அரசாங்கத்தின் சார்பில் தனது நன்றியைத் தெரிவித்ததுடன், இந்த திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கு விளக்கமளித்தார்.

## ரஞ்சனின் மனுமீதான... (02ஆம் பக்கத் தொடர்)

மற்றும் சட்ட மாஅதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இம் மனுவில், கடந்த ஜனவரி 12 ஆம் திகதி, நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக தனக்கு 04 வருட கடூழிய சிறைத் தண்டனையை உயர் நீதிமன்றம் விதித்துள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார். அவ்வாறான பின்னணியில், தனக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதி இல்லை என சட்ட மா அதிபர் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளதாக கடந்த ஜனவரி 19 ஆம் திகதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும், எனினும் பாராளுமன்ற செயலாளர் இதுவரை தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லையென நம்பகரமான தகவல்கள் ஊடாக தான் அறிந்துகொண்டதாகவும் மனுவில் ரஞ்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு ரிட் மனுவூடாக ரஞ்சன் கோரியுள்ளார்.

## தனது சொந்தக் காணியை... (02ஆம் பக்கத் தொடர்)

கையளிப்பதற்கான ஆவணத்தையும் வழங்கியிருந்தனர்.

ஆவணத்தில் கையொப்பமிட்ட ஆனந்தசங்கரி, அவற்றை உரிய முறையில் மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். காணிகள் அரச காணியாக்கப்பட்டதன் பின்னர் அப்பகுதியிலுள்ள மக்கள் மற்றும் காணியற்ற மக்களுக்கு பகிர்நதளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், 03 மாத காலத்துக்குள் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

காணி பகிர்நதளிப்பு நடவடிக்கையை துரிதப்படுத்தி, மத்தியவகுப்பு காணி என்பதற்காக வீட்டுத்திட்டங்களை இழந்து நிற்கும் மக்களுக்கு வீடுகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும், இயலுமான வரை மக்களின் கரங்களுக்கு காணி விரைவாக கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறும் கோரிக்கையை அவர் முன்வைத்திருந்தார்.

## இந்திய மீனவர்களுக்கு...

முன்வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கட்டணம் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி, இலங்கை கடற்பரப்பினுள் பிரவேசிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்க யோசனை முன்வைத்ததாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

## பரீட்சைகள் திணைக்களம்...

எந்த விதத்திலும் வழங்கப்பட மாட்டாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தில் புள்ளிகளை கணினிமயப்படுத்தும் நடவடிக்கை, அதன் உள்ளக பணிக் குழாமின் ஊடாக நடைபெறும்.

இந்த நடவடிக்கைக்காக எந்தவொரு தனியார் நிறுவனமோ அல்லது வேறு தரப்பினரோ தொடர்புபட மாட்டார்கள்.

எண்மான செயற்பாடுகளின் கீழ் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களும், திணைக்களத்தின் உள்ளக அதிகாரிகளாலேயே மேற்கொள்ளப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரவி உள்ளிட்ட ஏழு பேரும்...

எட்டுப் பேர் கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு, கொழும்பு விசேட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிபதிகளான அமல் ரணராஜா, நாமல் பலல்லே மற்றும் ஆதித்யா பதபெண்டிக ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான ரொக்கப்பிணையிலும், தலா 10 மில்லியன் பெறுமதியான இரண்டு சரீர பிணையிலும் விடுவிக்கப்படுவதாக மூவரடங்கிய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## மன்னார் ஓய்வு நிலை ஆயர் மறைவு;

# வட மாகாண ஆளுநர் ஆழ்ந்த அனுதாபம்

மன்னார் மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்பு ஆண்டகை இறையடி சேர்ந்த செய்தி அறிந்து மிகவும் அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்தேன்.

நல்லதொரு ஆன்மீக தலைவரை வட பகுதி இன்று இழந்து நிற்கிறது. இன, மத, குல பேதங்களை கடந்த இவரின் இழப்பு வடபுல மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.அதிவணக்கத்துக்குரிய ஆண்டகை இராயப்பு ஜோசப்பு அடிகளாரின் மறைவினையொட்டி ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா இறைவனில் அமைதியடைய பிரார்த்திக்கின்றேன். அனைத்து மக்களுக்கும் உள, புற தேவைகளை நிறைவேற்றுவதில் அவர் ஆற்றிய பணி அளவிடற்கரியது.

ஆண்டகை 2015 நடுப்பகுதியில் சுகயீனமுற்ற காரணத்தால் தனது ஆயர் பதவியை துறந்தார். தனது உயரிய சேவைகளால் மக்கள் மனதில் நிறைந்து இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் பரிசுத்த வாரத்தில் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்ற ஆண்டகை இராயப்பு ஜோசப்பு அடிகளாருக்கு ஆழ்ந்த இரங்கலையும் குடும்பத்தாருக்கு எனது அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆயர் இராயப்பு ஜோசப்...

நீண்ட காலம் சுகவீனம் காரணமாக ஓய்வு நிலையில் இருந்த மறைமாவட்ட ஆயர் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கண்ணியர் மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் உயிரிழந்ததாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.விக்டர் சோசை அடிகளார் அறிவித்தார்.

அவரது இறுதி நல்லடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்கத்துக்கான சகல ஏற்பாடுகளும் மன்னார் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார். மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை (1) காலை 11 மணியளவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டு ஆயர் அவர்கள் நோய்வாய்ப்பட்டதினால் அதன் பின்னர் பல சிகிச்சைகள் பெற்று வந்தார்.கடந்த இரண்டு மாதங்களாக அவர் நோய்வாய்ப்பட்ட நிலையில், அவரை யாழ்ப்பாணம் திருச்சிலுவை கண்ணியர் மட வைத்தியசாலையில் அனுமதித்திருந்தோம்.

அங்கே சிகிச்சை பெற்று வந்த ஆயர் நேற்று வியாழக்கிழமை(1) காலை எம்மை விட்டு பிரிந்தார். அவருடைய இறுதி நல்லடக்கத்துக்கான சகல ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் மறைமாவட்டத்தில் ஆலோசனைக்குழு குருக்களுடன் கலந்தாலோசித்து ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆயர் அவர்களின் திருவுடல் யாழ் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைக்கப்படும். இன்று வெள்ளிக்கிழமை(2) காலை யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் மறை மாவட்டத்திற்கு பவனியாக எடுத்து வரப்படும்.

பின்னர் மன்னார் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் இன்று பெரிய வெள்ளி அன்று சிற்றாலயத்தில் மதியம் 02 மணியில் இருந்து அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மக்கள் வந்து இறுதி அஞ்சலியை செலுத்த முடியும். ஞாயிற்றுக்கிழமை மாலை 03 மணியளவில் பவனியாக அவரது பூதவுடல் ஆயர் இல்லத்திலிருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.அங்கு ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் திங்கட்கிழமை மதியம் 02 மணி வரை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.அதனைத் தொடர்ந்து திங்கட்கிழமை மாலை 03 மணியளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பூதலுடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படும். இறுதி சடங்கு சுகாதார விதிமுறைகளுக்கமைய கட்டுப்பாட்டுடன் நடைபெறவுள்ளமையினால் மக்கள் அதற்கு முன்னதாக உங்களின் இறுதி அஞ்சலியை மன்னார் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அல்லது பேராலயத்தில் செலுத்திக் கொள்ள முடியும்.இறுதி அடக்க திருப்பலியில் அனைவரும் ஒன்று கூடக்கூடிய சந்தர்ப்பம் இல்லை.

கொரோனா தொற்று நோய் காரணத்தினால் சுகாதார கட்டுப்பாடுகளுடன் திருப்பலி நடைபெறவுள்ளது. எனவே நேரத்துடன் வந்து ஆயருக்கு இறுதி அஞ்சலியை செலுத்திக் கொள்ளுங்களெனன அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒத்துழைப்பை கோருகிறது...

தளபதிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளது.

இராணுவ ஊடக பணிப்பாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி தத்தமது அதிகார பிரதேசங்களின் பாதுகாப்பு தொடர்பில் உரிய ஆய்வுகளை நடத்தி பொலிஸாருடன் இணைந்து ஒன்றிணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தேவைப்பாடுகளை பகுப்பாய்வு செய்து அந்தந்த பகுதிகளிலமைந்துள்ள கத்தோலிக தேவாலயங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமென இராணுவ ஊடக பணிப்பாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

## கனரக வாகனமொன்று...

பெண்கள் உயிரிழந்துள்ளனர். முச்சக்கரவண்டியின் மீது, லொறியொன்று வீழ்ந்து குடைசாய்ந்ததினாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளதுடன், முச்சக்கர வண்டிச் சாரதி படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். பண்டாரவளை எல்ல பகுதியைச் சேர்ந்த 18 யுவதி ஒருவரும், 51 மற்றும் 52 வயதான பெண்களுமே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி, நுவரெலியா போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாரிய வளைவொன்றில் பயணித்துக்கொண்டிருந்த லொறி, கட்டுப்பாட்டை இழந்து, முச்சக்கர வண்டி மீது வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் உறுதியாகியுள்ளது.

இந்த இடத்தில் இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் நேர்ந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## ரஞ்சனுக்காக தனிநபர்...

தரப்பின் சார்பில் தனிநபர் பிரேரணையை கொண்டு வரவிருப்பதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். ரஞ்சன் ராமநாயக்கவை பாதுகாக்கும் நோக்கம் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு இருக்கவில்லையென்றும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். அமைச்சர் மஹிந்தானந்த இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நல்லாட்சி அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த ரஞ்சன் ராமநாயக்க, 2016 ஜூன் 16 ஆம் திகதி எனக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அவரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினால் உளவியல் ரீதியிலும், சமுதாய ரீதியிலும் பெரிதும் பாதிக்கப்பட்டேன். 500 மில்லியன் நஷ்ட ஈடு கோரி நுகேகொடை நீதிமன்றத்தில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தேன்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் சுய தேவைக்காக இவர் பயன்படுத்திக் கொள்ளப்பட்டார். குறிப்பிட்ட ஒரு தரப்பினர் தங்களின் சுய தேவைக்காக இவரை தவறாக வழி நடத்தினர். நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக இவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது அவர் செய்த தவறுகளை உணர்ந்து உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக நான் தாக்கல் செய்த வழக்கு நிறைவு பெறும் தருவாயில் உள்ளது. என்மீது ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் போலியானவை என்பதால் அவருக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும். எனவே தற்போது அவர் அனுபவிக்கும் சிறை தண்டனை இரட்டிப்பாகும்.

எனினும் என்மீது சுமத்திய பொய்யான குற்றச்சாட்டு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்றத்தில் கவலையை வெளியிட்டார். தவறை உணர்ந்ததால் அவருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை மீள பெற்றுக் கொண்டு அவருக்கு மன்னிப்பு வழங்கினேன். அரசியலில் பழிவாங்க வேண்டிய தேவை கிடையாது. நல்லாட்சி அரசாங்கத்தில் எனக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை இவரே முன்வைத்தார். இதனை கொண்டு தற்போது பழி வாங்க வேண்டிய தேவை எனக்கு கிடையாது.

ரஞ்சன் ராமநாயக்க எம்.பி.க்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 103 சாட்சியாளர்கள் இருந்தனர். இவருக்கு சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், 03 சாட்சியங்களை மாத்திரம் பரிசீலித்தார். அனைத்து சாட்சியங்கள் குறித்தும் அவதானம் செலுத்தியிருந்தால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நியாயம் வழங்கப்பட்டிருக்கும்.

ஜெனீவா விவகாரத்தில் இவ்விடயங்களை காண்பித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தொடர்பில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் நோக்கம் அவருக்கு காணப்பட்டது. இன்று இவ்விடயம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கவலையடைகிறார். இவருக்கு நியாயம் வழங்க ஆளும் தரப்பு சார்பில் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை முன்வைக்க எதிர்பார்த்துள்ளேன் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்டத்தில்...

பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதனின் கோரிக்கையை கல்வி அமைச்சர் கலாநிதி ஜீ.எல் பீரிஸ் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதற்கான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமாகிய அங்கஜன் இராமநாதனுக்குமிடையில் கொழும்பில் நடைற்றது. யாழ். மாவட்டத்தின் கஷ்டப்பட்ட பிரதேசங்களான தீவகம் மற்றும் மருதங்கேணி பகுதிகளின் எதிர்கால கல்வியை மேம்படுத்தும் முகமாக விசேட திட்டத்தின் கீழ் தீவகத்தில் 03 பாடசாலைகளும் மருதங்கேணியில் ஒரு பாடசாலையையும் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்படவுள்ளன.

யாழ். புங்குடுதீவு மஹா வித்தியாலயம், அனலைதீவு சதாசிவ வித்தியாலயம், புங்குடுதீவு பெண்கள் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி ஆகிய பாடசாலைகளே இவ்வாறு விசேடமாக தரம் உயர்த்தப்பட உள்ளன.

ஆகவே இவ் வருடம் 2021 நிறைவடைய முன்னர் 17 பாடசாலைகளையும் தேசிய பாடசாலை ஆக்குவதற்கு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் சீர்திருத்தங்களை ஆராய...

தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண்பதற்கு பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பதற்காக பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள பிரேரணை எதிர்வரும் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பிரேரணை அன்றைய தினம் பிற்பகல் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போது சபை முதல்வர் மற்றும் வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இந்த விசேட குழு 15 உறுப்பினர்களை கொண்டமையவுள்ளதுடன், சபாநாயகரினால் குழு நியமிக்கப்பட்டதை அடுத்து 06 மாதங்களில் அதன் பரிந்துரைகளை வழங்க வேண்டுமென பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதும் தேவையான திருத்தங்களை பரிந்துரை செய்வதும் இக்குழுவின் பொறுப்பாகும்.

## நேற்று முதல் ரூ1,000...

அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் 12 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ‘சதொச சலுகை பொதி’ 1,000 ரூபாவுக்கு நேற்று ஏப்ரல் 01ஆம் திகதிமுதல் நாடு முழுவதுமுள்ள சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக வழங்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

‘சதொச சலுகை பொதி’ யில் 01 கிலோ வெள்ளை பச்சை அரிசி, 01 கிலோ சிவப்பு பச்சை அரிசி, 01 கிலோ நாட்டரிசி, 01 கிலோ வெள்ளை சீனி, 01 கிலோ பருப்பு, 01 கிலோ கோதுமை மா, உப்பு ஒரு பக்கட், 250 கிராம் நெத்தலி, மிளகாய் ஒரு பக்கட், சோயாமீட் ஒரு பக்கட், தேயிலைத்தூள் ஒரு பக்கட் மற்றும் முகக்கவசமும் இந்த பொதியில் அடங்கும்.

கொவிட்19 தொற்று காரணமாக உலகளாவிய ரீதியில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ள போதிலும், பொதுமக்களைப் பாதுகாப்பதற்கும், நுகர்வோருக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்குவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ளது. அதற்காகவே இதுபோன்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்தாண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்தமுறை பண்டிகை காலங்களில் பொருட்களின் விலையில் அதிகரிப்பு இருக்காது. மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள நேரத்தில் இதுபோன்ற நிவாரணப் பொதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 190 ரூபாயாக இருந்த 01 கிலோ பருப்பின் விலை இப்போது 180 ரூபாவாகும். பால் மாவின் விலை 385 ரூபாவாகவிருந்த நிலையில் தற்போது 355 ரூபாவாகும். அதேபோன்று 01 கிலோ உருளைக்கிழங்கு 150 ரூபாவுக்கும் 01 கிலோ பெரிய வெங்காயம் 70 ரூபாய்க்கும் சதொசவில் வழங்கப்படுகிறது. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தப்பின்னர் வீழ்ச்சியடைந்திருந்த தனிநபர் வருமானத்தை மீண்டும் அதிகரிக்க முடிந்துள்ளது என்றார்.

## மேலும் நால்வர்...

ஒருவரும் பயங்கரவாதி சஹ்ரானின் அடிப்படைவாதக் கருத்துகளை பரப்பிய மூவருமாக நான்கு பேரை பயங்கரவாத ஒழிப்பு பிரிவினர் (டிஐடி) கைது செய்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் (31) பயங்கரவாத ஒழிப்பு பிரிவால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களில் ஒருவரே தாக்குதல் தொடர்பிலான உறுதிமொழி வீடியோ மற்றும் புகைப்படத்தை இணையத்தில் தரவேற்றியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் கொழும்பிலேயே கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் வெல்லம்பிட்டியில் வசிக்கும் 31 வயதுடையவர் என்பதுடன் மற்றயவர் திஹாரியை சேர்ந்த 32 வயதுடையவராவார்.

'வன் உம்மா' என்ற வாட்ஸ்அப் குழுவை உருவாக்கி, கட்டாரிலிருந்து அடிப்படைவாத சித்தாந்தங்களை பல்வேறு வழிகளில் இவர்கள் பரப்பியுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவர்கள் இலங்கையை விட்டு வெளியேறி கட்டாரில் பணியாற்றியுள்ளனர். பின்னர் அவர்கள் கட்டாரிலிருந்து நாடு கடத்தப்பட்டு கடந்த நவம்பர் 21ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பப்பட்டதாக பொலிஸார் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதூர் பகுதியில் அடிப்படைவாத வகுப்புகளை நடத்துவதற்கு வசதிகளை செய்துக்கொடுத்த குற்றச்சாட்டில் மேலும் இரண்டு பேரை பயங்கரவாத ஒழிப்பு பிரிவு கடந்த திங்கட்கிழமை (31) கைதுசெய்துள்ளது. இவர்கள் முதூரில் வசிக்கும் 37 வயது மற்றும் 38 வயதானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண பரீட்சார்த்திகளுக்காக வகுப்பு நடத்தப்படுவதாக கூறியே பயங்கரவாதி சஹ்ரான் ஹாஷிமை பின்பற்றுபவர்கள் இதுபோன்ற வகுப்புகளை நடத்தியுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் நான்கு பேரும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

# ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு முழுச் சம்பளமும் போனசும் வேண்டும்

## ஆடைக் கைத்தொழில் துறை சங்கங்கள் கோரிக்கை

**அருள் சத்தியநாதன்**

இலங்கை ஏற்றுமதி வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் ஆடைக் கைத்தொழில் துறையில் ஊழியர்களுக்கு நிறுவன உரிமையாளர்கள் வருமானம், போனஸ் போன்றவற்றில் அநீதியாக நடந்துகொள்கிறார்கள் என்றும் கொரோனா தொற்றை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அதிக இலாப ஈட்டுகிறார்கள் என்றும் ஆடைக் கைத்தொழில் துறை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இத்தொழில்துறையில் பணியாற்றுவோர் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் நிறுவன உரிமையாளர்கள் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவது இல்லை என்றும் தொழிற்சாலைகளில் தொழிற்சங்கம் அமைக்கும் அடிப்படை உரிமையைக்கூட சில உரிமையாளர்கள் அனுமதிப்பதில்லை என்றும் இச்சங்கங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கம் சுதந்திர உழியர்கள் சங்கம், இலங்கை தேசிய கடலோடிகள் சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் ஆகிய தொழிற்சங்கங்கள் நேற்று (01) கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இச் சங்கங்களின் செயலாளர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். ஆடைத் தொழிற்சாலை நிர்வாகங்கள் உடனடியாக தம்முடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் இதேநிலை நீடிக்குமானால் சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டியிருக்குமெனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா தொற்று கடந்த வருடம் மார்ச் மாதம் கண்டறியப்பட்டு ஆடைத்தொழிற்சாலைகள் 17ம் திகதி மூடப்பட்டபோது வருடத்துக்கான நிதியாண்டு முடிவுற 13 தினங்களே இருந்தன. ஆயினும் வழக்கமாக வழங்கப்படும் ஏப்ரல் போனஸ் தொகை கொவிட் 19 ஐ காரணம் காட்டி வழங்கப்படவில்லை. போனஸ் வழங்கப்படுவது இலாபத்தில் இருந்து வழங்கப்படும் ஒரு தொகை என்ற அர்த்தம் இப்போது செல்லுபடியாவதில்லை. புத்தாண்டு சமயத்தில் பெட்டிக் கடைக்காரர்களும் தம்முடன் பணியாற்றுவோருக்கு சாரமோ, சட்டையோ வாங்கிக் கொடுப்பது இலங்கையில் நீண்டகாலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் சம்பிரதாயம். இது தவிர, பல நிறுவனங்கள் தமக்குக் கீழ் பணியாற்றுவோருக்கு இன்றைக்கும் முழு சம்பளம் வழங்குவதில்லை. ஊழியர் நலத்திட்டங்கள் அமுல்படுத்துவதில்லை என்று இங்கு ஊடகவியலாளருடன் உரையாடிய சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு இத்துறையில் நிகழ்ந்த உற்பத்தி மற்றும் வருமானத்துடன் ஒப்பிடும் போது இத்துறையின் வருமானம் ஏறக்குறைய அதே அளவிலேயே உள்ளது.

மியன்மார், வங்கதேசம், இந்தியா ஆகிய நாடுகளில் நோய்த் தொற்று காரணமாக ஆடைத்தொழிலகங்கள் முடங்கிக் கிடப்பதால் ஆடைகளை கொள்வனவு செய்வோர் இலங்கையை நாடி வருகின்றனர். ஆடைத்தொழிற்சாலைகள் பிரச்சினையின்றி இயங்குகின்றன. ஆனால் ஏற்றுமதி வர்த்தகத்தின் 40 சதவீதத்தை கொண்டுள்ள ஆடைக்கைத்தொழில் துறை மற்றும் காலணி தயாரிப்பு தொழில்துறை சார்ந்த மூன்று இலட்சம் ஊழியர் நலன்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த வருட மார்ச், மே காலப் பகுதியில் சுமார் 55 ஆயிரம் பேர் தமது தொழிலை இழந்தனர். ஏனையோரின் சராசரி மாதச் சம்பளம் 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இச் சம்பளக் குறைப்பு இன்றைக்கும் தொடர்கிறது என்று இவர் மேலும் கூறினார்.

தொழிற் சாலைகளில் கொவிட் 19 தடுப்புக்கான சுகாதார கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்றும், தொழிற் செய்யும் சூழல் மேம்பட வேண்டும் என கோரிக்கை விடுத்த ஊழியர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்றும் தொற்றுக்கு முன்னர் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் வருடாந்த கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தாம் சமர்ப்பித்த முறைப்பாடுகளை தொழிலக உரிமையாளர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என்று இங்கு தெரிவிக்கப்பட்டது.

## சர்வதேச மட்ட வீரர்களை உருவாக்குவது காலத்தின் தேவையாகும் – விளையாட்டு அமைச்சர்



சர்வதேச மட்டத்தில் பிரகாசிக்கக் கூடிய வீரர்களை உருவாக்குவது காலத்தின் தேவையாக அமைந்துள்ளதாக இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுடன் தொடர்புபட்ட நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விளையாட்டு அபிவிருத்தி என்ற விடயத்தில் இன்று கிராம மற்றும் பாடசாலை மட்ட விளையாட்டு துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறு வகையான திட்டங்கள் முன்மொழியப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு அபிவிருத்தி ஏற்படும். விளையாட்டு துறையோடு தொடர்புபட்ட திறமையான வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கு வசதி வாய்ப்புக்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இதன் மூலமாக அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரும் சந்தர்ப்பம் ஏற்படும். இளைஞர்கள் நாட்டினுடைய முதுகெலும்பாக காணப்படுகின்றார்கள். நாட்டினுடைய பொருளாதாரத்துக்கு வலுசேர்க்க கூடியவர்களாக இளைஞர்களை மாற்றியமைப்பது முக்கியமானதாக காணப்படுகின்றது.

பல்வேறு வகையான புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக அவர்கள் எதிர்வருகின்ற காலங்களில் பொருத்தமான தொழில்களை பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் படையணி, தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகிய நிறுவனங்கள் மூலம் இளைஞர்களுக்கு தேவையான பாடநெறிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக இளைஞர்களுடைய வேலைவாய்ப்பின்மை பிரச்சினையை முடிவதுடன் நிபுணத்துவ அறிவையும் பெற்றுக் கொள்ள முடியும்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல, பிரதேச அரசியல் தலைமைகள், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனுராதா விஜயகோன், மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# சமூக நலன் கருதி தொடர்ச்சியாக பாடுபட்ட சிறந்த தலைவர் மர்ஹூம் வை.எம்.ஹனீபா

### முஸ்லிம் கவுன்சில் ஒப் சிறிலங்கா அனுதாபம்

சிறந்த ஆளுமை, அரசியல் அறிவு நிறைந்த சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல்களின் பிரதம நம்பிக்கையாளர் சபைத் தலைவர் வை.எம். ஹனீபா அவர்களது மறைவு பிரதேசத்துக்கு மிகப் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தி இருக்கின்றது என முஸ்லிம் கவுன்சில் ஒப் சிறிலங்கா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2002ஆம் ஆண்டு சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் நிர்வாகத்தில் இணைந்த இவர், 2012ஆம் ஆண்டு நம்பிக்கையாளர் சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து மரணிக்கும் வரை தலைவராக சிறப்பாக கடமையாற்றி பணிசெய்த ஒருவராகவும் வை.எம் ஹனீபா திகழ்ந்தார்.

சாய்ந்தமருதில் நவம்பர் புரட்சி ஏற்பட்ட சமயம் அதன் அச்சாணியாக இருந்து சிறந்த முறையில் அதனை நெறிப்படுத்தி, வழி காட்டிய பெருமை இவரையே சாரும்.

நீண்ட காலமாக அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்த இவர், சாய்ந்தமருது பள்ளிவாசல் சமூகத்தை ஒரு வழியில் முன்னெடுத்துச் செல்வதில் சிறப்பாகச் செயலாற்றினார். வை.எம். ஹனீபா போன்ற நல்ல சிந்தனை உள்ள, தூரநோக்குள்ள தலைவர்கள் சமூகத்துக்குத் தேவைப்படும் சந்தர்ப்பத்திலே அவர் எம்மை விட்டுப் பிரிந்திருக்கின்றார். அவருடைய மறைவு குறித்து முஸ்லிம் கவுன்சில் ஒப் சிறிலங்கா ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

**பொது அறிவித்தல்**

2007 இன் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (2) பிரிவுக்கு அமைவாக நிறுவனத்தின் பெயர் மாற்றம் செய்யப்படுவதை இத்தால் அறியத்தருகிறோம்.

முந்தைய பெயர்: MADISON MEDIA (PVT) LTD
நிறுவனத்தின் புதிய பெயர்: MIDAS MEDIA (PRIVATE) LIMITED

MIDAS

நிறுவன இலக்கம்: PV64507
மாற்றப்பட்ட திகதி: 2021 மார்ச் 20
பதிவு செய்யப்பட்ட முகவரி:
இல.: 93, கின்சி வீதி, கொழும்பு 07, இலங்கை
**MANAGEMENT AND ACCOUNTING LINK (PVT) LTD செயலாளர்கள்**

# அரசின் தேசிய வேலைத்திட்டம் புத்தளத்தில் அங்குரார்ப்பணம்

**புத்தளம் தினகரன் நிருபர்)**

"தன்னிறைவு அடைந்த நாடு தரிசு நெல் வயல் பயிரிடும் தேசிய வேலைத் திட்டம்2021" எனும் தொனிப்பொருளில் புத்தளம் கமநல சேவை திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று அண்மையில் புத்தளம் நான்காம் மைல் கல்லில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பிரதிநிதியாக பிரத்தியேக செயலாளர் ஜமால்தீன் ஜவ்ஸி கலந்து கொண்டார்.

புத்தளம் பிரதேச செயலாளர் சரத் வீரசேகர, புத்தளம் பிரதேச சபை உறுப்பினர்களான டொனில் போபபஸ், ரவி, உதித்த ஆகியோருடன் புத்தளம் கமநல சேவை பிரதேச உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் மற்றும் விவசாய சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# இ/கலபட தமிழ் வித்தியாலயத்தில் சின்னம் சூட்டும் விழா



இரத்தினபுரி கலபட தமிழ் வித்தியாலயத்தில் செவ்வாய்க் கிழமை 31.03.2021 ஆம் திகதி மாணவத்தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் கே.தினேஷ் தலைமையில் வெகு விமர்சையாய் நடந்தேறியது. பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு சப்ரகமுவ மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்,ஆசிரிய ஆலோசகர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், மதகுருக்கள் ,பெற்றோர்கள் ,பழைய மாணவர்கள் என பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.சிறிய பாடசாலையாக இருந்தாலும் அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில் சிறப்பாக இயங்கி வருகின்றமை வரவேற்கத்தக்கது.

# மட்டு. கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அமைச்சர்களுடனான கலந்துரையாடல் வியாழக்கிழமை (1) பிற்பகல் 3.50 மணியளவில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ,கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யஹம்பத்,இராஜாங்க அமைச்சர்களான பியால் நிசாந்த டி சில்வா, எஸ்.வியாழேந்திரன்,மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இ.சாணாக்கியன்,கோ.கருணாகரம், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க.கருணாகரன் மற்றும் கிழக்கு மாகாண உயர் அதிகாரிகள்,திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



## தொழில் அபிவிருத்திக்காக ஆசிரியர்களுக்கு ஓர் அழைப்பு

**ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் - 2021/2022**

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் கல்வி பாடநெறியினை இதுவரை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் ஆசிரியர் உதவியாளர்கள், இச் சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **2021 ஏப்ரல் 27** ஆம் திகதிக்கு முன்னர் **“கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல”** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

இச்சுற்றறிக்கை விண்ணப்பப்படிவம் மற்றும் ஆலோசனைப் படிவத்தை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் **(www.moe.gov.lk)** மற்றும் எந்தவொரு வலயக் கல்வி அலுவலகத்தின் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும்.

**பேராசிரியர் கே.கபில சி.கே.பெரேரா**
செயலாளர்
கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல.
2021 **ஏப்ரல் மாதம்** 02 ஆம் திகதி

திகதி 31.03.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4443
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 27,321,492.00
வெற்றி எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 1 0 6 1 7 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2738
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,811,800.00
வெற்றி எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 19 51 59 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 61,088,928.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 804
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,509,320.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 126,081,556.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 20,938,204.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
வெற்றி எழுத்து F
சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கங்கள் 01 11 26 48

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 480
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,754,860.00
வெற்றி எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 41 46 68 81
ஆயிரம் முறை 3457
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 91,124,410.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1109
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,499,380.00
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 6 1 8 7 5 2
வெற்றி இலக்கினம் மகரம்
விஷேட இலக்கம் 13332
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு
ரூ. 15,455,473.86

31.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 741,435
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 47,896,852.00
சுப்பர் பரிசு ரூ.15,328,942.00 01 ரூ. 2,000,000.00 பரிசு 01
ரூ.1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 30

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கவிதை நூல் வெளியீட்டு விழா

**பாலமுனை தினகரன் நிருபர்**

பொறியலாளர் ஷப்னாஸ் ஹாஷிம் எழுதிய 'நினக் கவிதைகளில் அப்பிய கொப்பிகள்' நூல் வெளியீட்டு விழா இன்று (02) அக்கரைப்பற்று பட்டினப்பள்ளி வீதி, மர்யம் சதுக்கத்தில் இடம் பெறும்.

கலாநிதி ஹனிபா இஸ்மாயில் தலைமையில் நடைபெறும் இந் நூல் வெளியீட்டு விழாவுக்கு எழுத்தாளர் எஸ்.ஷீ.ஜோன்ராஜ் சிறப்பதியாக கலந்து கொள்ளவார்.

நூல் பற்றிய உரையினை சிராஜ் மஸுரும்,கவியுரையை அக்கரையூர் அப்துல் குத்தூஸ் ஆகியோர் நிகழ்த்துவர்.

அம்பாறை மாவட்ட தமிழ் இலக்கிய பேரவை இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் தலாவ பிரதேசத்தில் கொரோனா தொற்று தீவிரம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் தலாவ பிரதேச சபையில் ஏற்பட்ட கொரோனா தொற்று ஐம்பதுக்கும் அதிகமான கொத்தணிகளாக மாறியுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவிக்கின்றது.

பிரதேச சபையின் தலைவர் உள்ளிட்ட 12க்கும் அதிகமான பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் கொவிட் 19 தொற்று உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் அவர்களுடன் நெருங்கி பழகியவர்களை இனங்காணும் நடவடிக்கையில் சுகாதார தரப்பினர் தீவிரமாக செயற்பட்டு வருவதாக அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய் பிரிவின் உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு

**திறப்பனை தினகரன் நிருபர்**

'நோயற்ற சமூகமொன்றை உருவாக்க ஊடகத்தின் பங்கு' என்ற தலைப்பில் கிராமிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க, சன் போரம் நிறுவனம் ஏற்பாடு செய்து நடாத்திய போஷணை சம்பந்தமான அநுராதபுர மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு ஒன்று கடந்த 26 ஆம் திகதி அநுராதபுரம் கிரிஸ்டன் பார்க் ஹோட்டலில் இடம் பெற்றது, அநுராதபுரம் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலய தோற்றா நோய் பிரிவின் டாக்டர் திலங்கா நவரத்ன வளவாளராக கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கேகாலை மாவட்ட பிரதிநிதிகள் கூட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நான்காவது ஆண்டு நிறைவு கொண்டாட்டம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு மாவட்ட பிரதிநிதிகளின் கூட்டத் தொடரின் கேகாலை மாவட்ட கூட்டம் 04ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு கேகாலை நகர மண்டபத்தில் நடைபெறும்.

ஸ்ரீலங்கா பிரகதிசீலி தொழிற் சங்க தேசிய மத்திய நிலையத்தின் வழிகாட்டலுடன் நடைபெறும் இந்த மகாநாடு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொழிற்சங்கத் தலைவர் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகேயின் தலைமையில் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மற்றும் தாரக பாலசூரிய உள்ளிட்ட கேகாலை மாவட்ட பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய தொழிற்சங்க மத்திய நிலைய தலைமை செயலாளர் பிரதமரின் தொழிற்சங்க பணிப்பாளர் சட்டத்தரணி சுமித் விஜேசிங்க, பந்துல சமன் குமார, சுதத் அபேவர்தன, அமரபால கமகே, சமன் குமார உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இம்மாநாட்டை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கேகாலை மாவட்ட தொழிற்சங்கத் தலைவர்களான சந்தன பண்டார மற்றும் சுசந்த கருணாசிங்க ஆகியோர் எற்பாடு செய்துள்ளார்கள்.

## நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழே விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

**01 ஆம் அட்டவணை**

| விலைமனு இலக்கம் | செயற்றிடடப் பெயர் | பெசேவ நீங்கலாக நிர்மாணத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்களில்) | தகுதியுள்ள CIDA பதிவுத் தரம் | விலைமனுப்பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பொரலஸ்கமுவவில் உத்தேசிக்கப்பட்டுள்ள பலநோக்கு கட்டிடம் (II ஆம் படிநிலை) – I ஆம் கட்டம் | 403,619,000.00 | 50,000.00 | 4,500,000.00 | 545 | கட்டிடங்களுக்காக சி-2 அல்லது மேற்பட்டது | 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையும். |
| 2. | நிந்தவூரில் கடற்கரை பூந்தோட்ட நிர்மாணம் - III ஆம் கட்டம் | 64,793,000.00 | 15,000.00 | 650,000.00 | 150 | கட்டிடங்களுக்காக சி-2 அல்லது மேற்பட்டது | 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையும் |
| 3. | மிதக்கும் சந்தை மற்றும் டி.ஆர் விஜேவர்தன மாவத்தைக்குமிடையில் உத்தேசிக்கப்பட்ட இணைப்பு (பாதசாரி வெப – V ஆம் படிநிலை | 31,579,000.00 | 8,000.00 | 320,000.00 | 150 | கட்டிடம் / பாலங்கள்/ நெடுஞ்சாலைகள் | 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையும் |
| 4. | வறக்காப்பொலவில் உத்தேசிக்கப்பட்டுள்ள பஸ்நிலைய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் (1 ஆம் கட்டம்) | 118,653,000.00 | 22,500.00 | 1,200,000.00 | 365 | கட்டிடங்களுக்காக சி-4 அல்லது மேற்பட்டது | 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையும் |
| 5. | வலஸ்முல்லயில் உத்தேசிக்கப்பட்டுள்ள வர்த்தக கட்டிடம் | 69,750,000.00 | 15,000.00 | 700,000.00 | 150 | கட்டிடங் களுக்காக சி-4 அல்லது மேற்பட்டது | 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையும் |
| 6. | பலாங்கொடயில் நடைபாதை வழியின் அபிவிருத்தி | 19,700,000.00 | 5,500.00 | 200,000.00 | 120 | கட்டிடங்கள் / காணி சீரமைத்தலுக்காக சி-6/ எஸ்பி-1 அல்லது மேற்பட்டது | 2021 ஜுலை 19 ஆம் திகதி வரையும் |
| 7. | இறம்புக்கனவில் உத்தேசிக்கப்பட்டுள்ள கார் நிறுத்துமிட நிர்மாணம் | 18,095,000,00 | 5,000.00 | 200,000.00 | 120 | கட்டிடங்களுக்காக சி-6 அல்லது மேற்பட்டது | 2021 ஜுலை 19 ஆம் திகதி வரையும் |
| 8. | குருநாகலில் சரகம வெவ நடைபாதை வழியின் அபிவிருத்தி | 45,945,000.00 | 10,000.00 | 500,000.00 | 150 | காணி சீரமைத் தலுக்காக சி-5 அல்லது மேற்பட்டது | 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையும் |
| 9. | ருதவாணயில் 'மஹாகமசேகர' பூங்காவின் அபிவிருத்தி | 5,463,000.00 | 2,000.00 | 55,000.00 | 90 | காணி சீரமைத்தலில் சி-7 அல்லது மேற்பட்டது | 2021 ஜுலை 19 ஆம் திகதி வரையும் |
| 10. | மைய பிரதேசம் அபிவிருத்தி – IV ஆம் படிநிலை – முல்லைத்தீவு பஸ்நிலைய மீதி வேலைகள் | 44,637,000.00 | 11,000.00 | 450,000.00 | 150 | கட்டிடங்களுக்காக சி-5 அல்லது மேற்பட்டது | 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையும். |

01. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, சுஹுருபாய, 17 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் நகர அபிவிருத்திக்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று, வேலை நாட்களில் நகர அபிவிருத்திக்கான பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். தொலைபேசி இல.: 011-2869515.
04. நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் சிறாப்பரிடம் மேலேயுள்ள 01 ஆம் இலக்க அட்டவணையிலுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வேலை நாட்களில் (02 ஆம் அட்டவணையில் திகதி மற்றும் நேரம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன) பத்தரமுல்ல, சுஹுருபாய, 17 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் செயற்றிட்டங்கள் மற்றும் பெறுகைக்கான பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவரொருவரினால் கொள்வனவு செய்யப்படலாம்.

**02 ஆம் அட்டவணை - விலைமனுக்களை வழங்கல்**

| 01 ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட விலைமனு இலக்கம் | இருந்து | வரையும் | நேரம் |
|---|---|---|---|
| 6,7,9 | 2021.04.01 ஆம் திகதியிலிருந்து | 2021.04.19 ஆம் திகதி வரையும் | மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் |
| 1,2,3,4,5,8,10 | 2021.04.01 ஆம் திகதியிலிருந்து | 2021.04.20 ஆம் திகதி வரையும் | மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் |

05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படுவதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறான வங்கி உத்தரவாதப் பாங்கில் விலைமனுவொன்றானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணைகளின் பெறுமதியானது 01 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் செயலாளர், நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
06. 03 இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன செயலாளர், செயலாளர், நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு, 17 ஆம் மாடி, 'சுஹுருபாய', சுபுதிபுர வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

**03 ஆம் இலக்க அட்டவணை:**

| 01 ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனு இலக்கம் | விலைமனுக்களை மூடும் திகதி | விலைமனுக்களை மூடும் நேரம் |
|---|---|---|
| 6,7,9 | 2021.04.20 ஆம் திகதியன்று | மு.ப. 10 மணிக்கு |
| 1,2,3,4,5,8,10 | 2021.04.21 ஆம் திகதியன்று | மு.ப.10 மணிக்கு |

07. பத்தரமுல்ல, சுஹுருபாய, 17 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் 2021.04.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். அனைத்து விலைமனுதாரர்களும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
08. விலைமனுதாரர்களை தெரிவு செய்யும் போது விலைமனுதாரரின் முன்னைய செயற்பாடு மற்றும் திரவச் சொத்து நிலைமை (அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்) ஆகியன கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்படும். குறைந்த தரத்தில் செயற்பட்ட விலைமனுதாரர்கள் எந்தவொரு விலைமனுக்களையும் வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட மாட்டார்கள்.
09. எந்தவொரு விலைமனுவையும் தயாரிக்கும் ஆகு செலவு தொடர்பானவற்றிற்கு அமைச்சானது எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாது. பெற்றுக் கொண்ட விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவொன்றை ஏற்றுக் கொள்வதற்கான உரிமையை அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் அமைச்சு பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
10. தற்போது நிலவும் கொவிட்-19 தொற்று காரணமாக உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்தை கையேற்பதற்கு முன்னராக, பத்தரமுல்ல, சுஹுருபாய, 17 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் கணக்காளருடன் 0112-**869536/**0114329822 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக அல்லது 011-2861810 என்ற தொலைநகலூடாகவும் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு,**
**17 ஆம் மாடி, 'சுஹுருபாய',**
**பத்தரமுல்ல.**

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

### ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொல்கஹவேலனா டெபராவேவா திஸ்ஸமஹராமாவில் முன்மொழியப்பட்ட WHG உயிர்மசக்தி கருத்திட்டத்தின் பூர்வாங்க சுற்றாடல் அறிக்கை (IEE) இன் இறுதி முடிவின் மீதான பொது அறிவிப்பு

**தேசிய சுற்றாடல் சட்டம்**
**பிரிவு 23 பீபீ (4) இன் கீழ் அறிவிப்பு**

மேற்கண்ட கருத்திட்டத்தின் பூர்வாங்க சுற்றாடல் அறிக்கையின் (IEE) ஆய்வுக்குப் பிறகு, குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய பொல்கஹவேலனா டெபராவேவா திஸ்ஸமஹராமாவிலுள்ள WHG உயிர்மசக்தி மின் கருத்திட்டத்தை 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தின் தேசிய சுற்றாடல் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான நடைமுறை) விதிமுறைகள் 9(i) இன், 2000 நவம்பர் 02 ஆம் திகதிய திருத்தப்பட்ட 1152/22 ஆம் இலக்க வர்த்தமானியின் அடிப்படையில் குறித்த கருத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒப்புதல் வழங்குவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை முடிவு செய்துள்ளது. இந்த IEE அறிக்கை 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி ஒரு பொது ஆவணமாகும், இது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நூலகத்தில் கிடைக்கப்பெறும்.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**''பரிசர பியச"**
**104,டென்சில்கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**

## நீதி அமைச்சு

### தொழிலாளர் நியாயச் சபைகள் செயலாளர் பணிமனையில் தொழிலாளர் நியாயச் சபைகள் உதவிச் செயலாளர் பதவிக்காக ஆட்சேர்த்தல் – 2021

நீதி அமைச்சின் கீழுள்ள தொழிலாளர் நியாயச் சபைகள் பணிமனைகளில் வெற்றிடமாகவுள்ள 25 உதவிச் செயலாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒன்றிணைந்த சேவைக்குரித்தான முகாமைத்துவ சேவை அதிகாரி 1ஆம் வகுப்பு அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நீதி அமைச்சின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களின் பிரகாரம் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் திகதி மற்றும் அல்லது அதற்கு முன் செயலாளர், தொழிலாளர் தீர்ப்புச் சபை செயலகம், மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு-12 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொழிலாளர் நியாயச் சபைகள் பணிமனையில் தொழில் நியாய சபைகள் உதவிச் செயலாளர் பதவிகளுக்காக ஆட்சேர்த்தல்'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி நாள் 2021-05-03ஆம் திகதியாகும்.

ஒன்றிணைந்த சேவையில் உள்ள முகாமைத்துவ சேவை 1ஆம் வகுப்பு அதிகாரிகளுக்கு மட்டுமே இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு:** விண்ணப்பப் படிவம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்து போயுள்ளமை அல்லது தாமதமாகியுள்ளமை தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறுதி நாள் வரையில் விண்ணப்பத்தைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் பாதிப்பை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

01. நீதி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பம் கோரப்பட்டு அந்த அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
02. சேவையின் தன்மை

    இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்துடன் கூடியது.
03. சம்பள அளவு:

    MN 02 - 2016, ரூபா 28,940 – 10x300 – 11x350 – 10x560 – 10x660 - ரூபா 47,990/-
04. அடிப்படைத் தகைமைகள்:

    ஒன்றிணைந்த சேவையில் உள்ள முகாமைத்துவ சேவை 1ஆம் வகுப்பு அதிகாரி
05. ஆட்சேர்க்கப்படும் முறை:

    கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் புள்ளிகளின் அடிப்படையில் திறமை வரிசைக்கிரமத்தின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

    கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கும் விதிமுறை, வெற்றிடங்கள் நிலவும் தொழிலாளர் நியாயச் சபையின் தகவல்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவங்கள் நீதி அமைச்சின் இணையதளத்தில் (www.moj.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளன.
06. விண்ணப்பப் படிவத்திற்கு இயைபுடைய தகவல்களை தமது சொந்த கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்குதல் வேண்டும். அனைத்து வகையிலும் முழுமையற்ற, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின் கிடைக்கும் மற்றும் மாதிரிப் படிவத்திற்கு அமைவாக அல்லாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். இயைபுடைய விண்ணப்பப் படிவத்தின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றி விண்ணப்பதாரரினால் விசாரித்துப் பார்த்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யாவிட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. விண்ணப்பப் படிவத்துடன் இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

    சகல விண்ணப்பப்படிவங்களையும் தாம் தற்போது சேவையில் உள்ள நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
07. இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் உள்ளதாயின், அது தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளரினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டுப்பட்டுள்ளனர்.
08. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அறிவிக்கப்பட்டுள்ள ஏதாவது முரண்பாடுகள் காணப்படுமானால், அவ்வாறான வேளையில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைய செயற்படுத்தல் வேண்டும்.

**எம்.எம்.பீ.கே. மயாதுன்னே,**
**செயலாளர்,**
**நீதி அமைச்சு**
**2021-03-23**




## நுவரெலியா

# ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகள் ஆரம்பம்





நுவரெலியா தினகரன் நிருபர்

நுவரெலியா ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகியது.

நுவரெலியா ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகள் கிறகறி வாவிக்கரையில் நேற்று (1.4.2021) வியாழக்கிழமை முப்படையினரின் பேண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடனும் கலை கலாசார நிகழ்வுகளுடனும் கோலாகலமாக ஆரம்பமானது.



நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகே மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி





ரமேஸ்வரன், நுவரெலியாபிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜா, மாவட்ட செயலாளர் நந்தனகலபட, நுவரெலியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகம சூரிய, பிரதி நகர முதல்வர் யதர்சனா உட்பட மாநகரசபை உறுப்பினர்களும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

நேற்று ஆரம்பமாகிய வசந்தகால நிகழ்வுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கலை கலாசார நிகழ்வுகளும் குதிரைப்பந்தய போட்டி, மலர் கண்காட்சி விளையாட்டு போட்டிகளும் நடைபெறும்.

கொவிட் 19 கொரோனா தொற்று காரணமாக ஆரம்ப நிகழ்வில் பாடசாலை மாணவ மாணவிகளின் பேண்ட் வாத்திய அணிவகுப்பு நடைபெறவில்லை. அதேபோல வழமையாக நடைபெறும் காணிவேல் களியாட்ட விழாவும், மோட்டார் காரோட்டப் போட்டி, இசை நிகழ்ச்சியும் இம்முறை நடைபெறாது என்பதும் குறிப்பிடதக்கது.



நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்றிலிருந்து முன்பள்ளி மற்றும் ஆரம்ப பிரிவு பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கான சுகாதார உபகரணங்கள் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானினால் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாளர்களிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

# நுவரெலியாவில் அரச வங்கி சேவையாளர்கள் ஆர்பாட்டம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நுவரெலியா கிளை அரச வங்கிகளின் ஊழியர்கள் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர். இலங்கை வங்கி சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இவர்கள் நேற்று நுவரெலியா பிரதான பஸ்தரிப்பிடத்தின் முன்னால் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்க வேண்டும், இரண்டு வருடம் பயிற்சியை நிறைவு செய்த வங்கி சேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அபிவிருத்து வங்கி உட்பட அரச வங்கி உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களுமாக சுமார் 70 பேர் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் இவ் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்துள்ளதுடன் பிரதமர் மேற்படி கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள போதிலும் அது உறுதியடுத்தப்பட்டவில்லை எனவும் எமது கோரிக்கை நிறைவேற்றபட்டாவிட்டால் நாடளாவிய ரீதியிலுள்ள அரச வங்கி சேவையாளர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடபோவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

# இரத்தினபுரியில் தமிழ் மொழி உயர்தர தேசிய பாடசாலை அமைக்கப்பட வேண்டும்

## ஜோன் செனவிரத்ன எம்.பி கோரிக்கை

காவத்தை தினகரன் விசேட நிருபர்



இரத்தினபுரியில் சகல வளங்களையும் கொண்ட உயர்தர தேசிய பாடசாலை ஒன்று அமைக்கப்பட வேண்டும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்

இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட இணைத்தலைவர்களான சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள ஆகியோர் தலைமையில் (30) இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இது குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி நகரில் கணிதம்,விஞ்ஞான தமிழ் மொழி மூல உயர்தர தேசிய பாடசாலை ஒன்று இல்லாத குறைபாடு பல வருடங்களாக நிலவி வருகின்றது. இரத்தினபுரி மாவட்டத்தில் விஞ்ஞான உயர்தர தமிழ் மொழிமூல பாடசாலை ஒன்று இல்லாத காரணத்தால் இம் மாவட்டத்தை சேர்ந்த மாணவர்கள் நுவரெலியா மாவட்டத்திற்கு சென்று கணிதம், விஞ்ஞான உயர்தர கல்வியை கற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மொழி மூல உயர்தர பாடசாலைகளில் இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களை சேர்ப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இம்மாணவர்களுக்கு இடமளிக்கப்படுவதில்லை.

இரத்தினபுரி மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞான உயர்தர பாடசாலை ஒன்று இருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது.

இரத்தினபுரி மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞான உயர்தர தழிழ் மொழி தேசிய பாடசாலை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று மாவட்ட தமிழ் மக்கள் கூட்டாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எனவே இம்மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞான உயர்தர தழிழ்மொழி தேசிய பாடசாலை ஒன்று அமைப்பதற்கு தேவையான இடத்தை பெற்று கொள்வது அவசியமாகும்.

இரத்தினபுரி பார்ம்கார்டன் தோட்டத்தின் தேயிலை தொழிற்சாலையின் பின்னால் உள்ள பலாங்கொடை பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் காணியை அரசாங்கம் பொறுப்பேற்று அந்த இடத்தில் சகல வளங்களையும் கொண்ட தமிழ் மொழி மூல உயர்தர தேசிய பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரத்தினபுரி நகரில்; உயர்தர தேசிய பாடசாலை ஒன்றை அமைப்பதன் மூலம் மாவட்டத்தில் அனைத்து பிரதேசங்களையும் சேர்ந்த மலையக மாணவர்களுக்கு இலகுவாக உயர்தர கல்வியை கற்க முடியும் என அவர் தெரிவித்தார்.

# விவசாய நிலங்கள் யானைகளால் நாசம்

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை இம்புல்பே கொஸ்கம பிரதேசத்திற்குள் நுழைந்த காட்டு யானைகள் வயல் நிலங்கள் மற்றும் விவசாயப் பயிர்ச் செய்கைகளை அழித்து நாசப்படுத்தியுள்ளதாக கொஸ்கம பிரதேசத்திலுள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.

அறுவடை செய்வதற்கு தயாராக இருந்த 10 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலத்தினை சேதப்படுத்தி அழித்து நஷ்டத்தினை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்தோடு வாழை, தென்னை, மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகள் உற்பத்திகளையும் அதிகளவு சேதப்படுத்தியுள்ளதாக உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டினர்.

வங்கிக் கடன் பெற்று மற்றும் தங்க நகைகளை வங்கியில் அடகு வைத்து தாம் விவசாயத்தை மேற்கொண்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அதிகளவு பணத்தை விரயம் செய்து மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகளை காட்டு யானைகள் அழித்து சேதப்படுத்தியுள்ளமையால் தாம் அதிகளவு பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அதே சமயம் இம்புல்பே கொஸ்கம பிரதேசத்தில் இரவு நேரங்களில் நடமாடும் காட்டு யானைகள் காரணமாக பாதைகளில் பயணிப்பதும் மிகவும் அவதானமாக உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.





கலஹாவில் லிட்டில் வெளி தமிழ் வித்தியாலயத்தில் நூலகம் ஒன்று ரூம் டு ரூம் நிறுவனத்தின் அனுசரணையுடன் கண்டி வலய கோட்ட கல்வி பணிப்பாளர் எஸ் .தமிழ்செல்வனினால் திறந்து வைக்கப்பட்டது. இதன்பாதே எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# சேவை நலன் பாராட்டுவிழா



நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

தபால் விநியோகஸ்தராக 35 வருட காலமாக கடமையாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்ற உடுகொட முதியான்சலாகே பிரேமரட்ண விற்கு சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது. டிக்கோயா தபாற் காரியாலயத்தில் பணியாற்றிய இவருக்கு டிக்கோயா நுண்கலை கல்லூரி அதிபர் எம். மூவேந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் பாராட்டு விழா இடம் பெற்றது. இவரது சேவை காலத்தில் கடிதங்களை உரிய நேரத்தில் விநியோகம் செய்து தனது கடமையை சிறப்பாக முன்னெடுத்ததை நினைவு கூர்ந்து பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவு பரிசிலும் வழங்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


# மலையக நீர்த்தேக்கங்களை பாதுகாக்க விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர் ஹற்றன் விசேட நிருபர்

மலையகத்தில் பொருளாதார முக்கியத்துவமிக்க பிரதான நீர்த்தேக்கங்களான காசல் ரி மற்றும் மவுசாகலை உள்ளிட்ட நீர்நிலைகள் 'சுரக்கிமு காசல் ரீ நில் திய' ( பாதுகாப்போம் காசல் ரி நீல நீரினை) எனும் வேலைத்திட்டத்தின் கீழ் பொலிஸார், இராணுவம், மின்சார ,நோர்வூட் பிரதேசபை நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் உட்பட பொது மக்கள் இணைந்து நேற்று சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

காசல் ரி நீர்த்தேக்கம் மற்றும் மவுசாகலை நீர்த்தேக்கத்தில் எரியப்பட்டுள்ள கழிவு பொருட்கள் குறிப்பாக பிளாஸ்ரிக் போன்ற பொருட்களை அகற்றும் பணிகளில் நேற்று ஈடுபட்டனர்.







இந்நாட்டின் நீர் மின் உற்பத்தியில் மிக முக்கிய இடமாக காசல் ரி மற்றும் மவுசாகலை நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றன. இந்நீர்த்தேக்கங்களில் வீசப்படும் கழிவு பொருட்கள் காரணமாக நீர்தேக்கம் அசுத்தமடைந்து வருகின்றது.

இதனால் நீர்த்தேக்கத்தில் வாழும் உயிரினங்கள் பாரிய உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

அத்தோடு காசல் ரி நீர்த்தேக்கத்தினை நம்பி வாழும் 35 நன்னீர் மீனவ குடும்பங்களும் பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். இதனால் இவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன.

நீர்த்தேக்கத்தில் நிறைந்து வழியும் குப்பை கூளங்கள் காரணமாக தங்களுக்கு மீன் வலைகளை விரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஆகவே எதிர்கால சந்ததியினருக்கு நீர் வளத்தினையும் பொருளாதார மையத்தினையும் பாதுகாக்கும் முகமாக குறித்து வேலைத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதாக நோர்வூட் பிரதேச சபையின் சூழல் பொறுப்பதிகாரி யமுனா தெரிவித்தார்.

இதே வேளை இங்கு சுற்றுலாத் துறையில் ஈடுபடுபவர்களும் காதலர்களும் உணவு மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை நீர்த்தேக்கத்தில் எறிந்துவிட்டு செல்வதாக இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

# கிழக்கின் குரல்



## விபத்தில் உயிரிழந்தவருக்கு நீதிகோரி பிரதேச மக்கள் வீதிமறியல் போராட்டம்





### கார் சாரதியை விடுதலை செய்தமைக்கு எதிராக மக்கள் ஆவேசம்

(றொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை சர்தாபுர பகுதியில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதியை பொலிஸார் உடனடியாக விடுதலை செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதியை மறித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை கண்டி பிரதான வீதி சர்தாபுர பகுதியில் இவ்வார்ப்பாட்டம் நேற்று (01) இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த கார் வீதிக்கு அருகில் நின்று கொண்டிருந்த நபருடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும், அதே நாளில் சாரதியை விடுதலை செய்துள்ளதாக கோரி இப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விபத்து இடம்பெற்றதை அடுத்து உயிரிழந்தவரின் வீட்டுக்கு போக்குவரத்து பொலிசார் வருகை தந்து, கார் சாரதியின் உறவினர்கள் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு 25,000 ரூபாய் வழங்கியதாகவும் இதனை வைத்துக் கொள்ளுமாறு பொலிஸார் கூறியதாக உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்காமல் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அப்பணத்தை பெற்றுக்கொடுப்பது நீதியா எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பினர்.

இவ்விபத்தில் பலியானவர் திருகோணமலை கப்பல்துறை ஆறாம் கட்டை பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அந்தோனிமுத்து அந்தோணிசாமி (48 வயது) எனவும் தெரிய வருகின்றது.

## கல்குடாவில் டெங்கு; சிரமதானப் பணி



பாசிக்குடா நிருபர்

மட்டக்களப்பு கல்குடாவில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது, அதனை கட்டுப்படுத்த சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. பிரதேச மக்கள்,சமூக அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் என பலரும் ஒன்றிணைந்து இதனை முன்னெடுத்தனர்.

வெற்றுக் காணிகள்,பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் காணப்பட்ட கழிவுப் பொருட்கள், வெற்றுப் போத்தல்கள் என்பன சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன. இதன்போது இன் நோயின் தாக்கம் தொடர்பான விழிப்புணர்வு பொது சுகாதார பரிசோதகரால் நிகழ்த்தப்பட்டது.

கல்குடாவில் 10 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந் நடவடிக்கையில் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஜே.யசோதரன், பிரதேச சபை உறுப்பினர் புஸ்பேந்திரன், கிராமசேவகர் க.கிருஷ்ணகாந்தன், சமுர்த்தி உத்தியோகஸ்த்தர் மா.காளிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உலகில் முன்னேற வேண்டுமானால் எமது திறன்களை வளர்க்க வேண்டும்

### மட்டு. மாவட்ட செயலாளர் க. கருணாகரன்

(மண்டூர் குறூப் நிருபர்)

போட்டி உலகில் முன்னேற வேண்டுமானால் எமது திறன்களை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க. கருணாகரன் தெரிவித்தார்.

விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சமூக நலன்புரி அமைப்பின் தலைவர் வே.பாஸ்கரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவேகானந்த தொழில்நுட்ப கல்லூரி 2012 இல் அனைவருக்குமான கணனி அறிவு என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்டாலும், காலத்தின் தேவை கருதி தொழில் வாய்ப்பினை பெறத்தக்க தொழில்நுட்பப் பயிற்சிகளை ஆரம்பித்து, மூன்றாம் நிலைக்கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவில் தர முகாமைத்துவ முறைமை ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரியாக தேசிய தொழிற் தகைமை பயிற்சிகளை நடைமுறைப்படுத்தி வருவது சிறப்புக்குரியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவேகானந்த தொழில்நுட்ப கல்லூரியும் காலத்தின் தேவைக்கேற்ப பல மாணவர்களுக்கு பயிற்சியளித்து மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றி வருவதையிட்டு பெருமையடைகிறேன்.

ஒரு அமைப்பு தொடர்ச்சியான வளர்ச்சியினை பெறுவதாயின் அதன் கொள்கைகளை சரியான முறையில் பற்றிக்கொள்வதுதான் சிறந்த வழியாக இருக்க முடியும். பயிற்சியுடன் சேர்த்து பயிலுனர்கள் ஆளுமையை வளர்த்துக்கொள்வதோடு, ஆன்மீக சிந்தனைகளையும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கான அவசியத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.



மூதூர் பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுனர்களாக கடமையாற்றி நிரந்த நியமனம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களை பாராட்டி பரிசில்கள் வழங்கும் நிகழ்வு புதன் கிழமை (31) இடம்பெற்ற போது. (படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)

## போதைப் பொருள் விழிப்பூட்டல்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக மூதூர் பிரதேச பள்ளிவாசல் ஊடாக மக்களுக்கான விழிப்பூட்டல்கள் செய்யப்பட்டு வருகின்றன.

போதைவஸ்து பாவனையை இல்லாதொழிக்கும் நடவடிக்கையாக பிரதேசத்தில் இயங்கும் ஏனைய சமூக நிறுவனங்களின் பங்கேற்புடன் இதனை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் போதையுடன் சம்பந்தப்பட்டவர்களை இப்பாவனையில் இருந்து முற்றாக விடுவித்துக் கொள்ளும் முகமாக இதற்கான அறிவுறுத்தல்கள் செய்யப்பட்டு வருகின்றன.

## கட்டாக்காலி மாடுகள் பொலிசாரிடம் ஒப்படைப்பு

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று பிரதான வீதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும், சுற்றுச் சூழலுக்கு குந்தகம் ஏற்படுத்தி வந்த 51 கட்டக்காலி மாடுகள் மாநகர சபை ஊழியர்களால் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிசார் இந்த மாடுகளின் உரிமையாளர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். கடந்த சில வாரங்களாக மாநகர சபை பிரதான வீதிகளில் நடமாடும் இக் கட்டாக்காலி மாடுகளால் பல விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக பாதசாரிகள் மாநகர சபையில் முறையிட்டுள்ளனர்.

மாநகர சபையினர் இது தொடர்பாக கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தல் விடுத்தும் மாடுகளின் நடமாட்டம் குறையவில்லை.

இதேவேளை, ஊருக்குள்ளும் மாடுகள் உலாவித்திரிவதாகவும், இதனால் மாணவிகள் இவைகளைக் கண்டு ஓடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அது மாத்திரமன்றி வீடுகளின் கதவுகள் திறந்திருக்கும் வளவுக்குள் புகுந்து வீட்டுதோட்ட பயிர்களையும் உண்டுசெல்வதாகவும் மக்கள் முறையிடுகின்றனர். இவைகளையும் கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் போதைப் பொருள் பாவனையை தடுக்க விழிப்புணர்வு

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பில் போதைப் பொருள் பாவனையினைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி பிரதேச செயலக பிரிவுகளில் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் நாடு பூராகவும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டும் வேலைத்திட்டம், பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் என்பன விநியோகிக்கப்பட்டன.





மேலும் போதைப் பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணை ஆலோசனை தொலைபேசி துரித இலக்கமான 1927 இன் மூலம் தற்பொழுதுவழங்கப்பட்டுவருகின்றது.

இந் நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை உயர் அதிகாரிகள், சிவில் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் போதைப் பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதன் பாவனையால் துன்பப்படுபவர்கள், அதிலிருந்து விடுபடுவதற்குமான உளவள ஆலோசனைகள் தொடராக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஓவிய கலைஞர்களுக்கு பாராட்டு



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

ஜனாதிபதியின் நாட்டை அழகுபடுத்தும் தேசிய வேலைத்திட்டமான "தொலஸ் மகே பகன" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் சுவரோவியங்களை வரைந்த ஓவிய கலைஞர்களை பாராட்டி, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (31) கல்முனை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச். பௌசூல் ஹிபானா தலைமையில் பிரதேச கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிரதேச செயலகம் இணைந்து நடத்திய இந் நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், சிறப்பு அதிதிகளாக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எம்.ரீ.ரிம்சான் உட்பட கலைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பு சியோன் தேவாலயத்துக்கு அமெரிக்க உயர்ஸ்தானிகர் குழு விஜயம்

வெல்லாவெளி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு சியோன் தேவாலாயத்தின் கட்டுமான பணிகள் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதன் பின்னணியை அமெரிக்க உயர்ஸ்தானிகர் குழு நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டு கேட்டறிந்து கொண்டனர்.

அமெரிக்க உயர்ஸ்தானிக அரசியல் உயர் அதிகாரி அந்தோனி எப். ரேன்சுலியும் அவரது குழுவினரும், நேற்றுமுன்தினம் தேவாலயத்திற்கு வந்து தேவாலயத்தின் தற்போதைய நிலை பற்றி கேட்டறிந்தனர்.

சியோன் தேவாலய பிரதான போதகரின் மனைவி திருமதி ரொசான் மகேசன் உயர்ஸ்தானிகருக்கு தேவாலயத்தின் தற்போதைய நிலைமை பற்றி எடுத்துரைத்தார். அமெரிக்க பிரதிநிதி சம்பவம் இடம்பெற்ற இடத்தையும், அதன் பின்னணியையும் பாதிக்கப்பட்டவர்களின் விபரம் பற்றியும் அவர்களது குடும்ப நிலை பற்றி கேட்டறிந்து கொண்டதுடன், ஆலயத்தில் கடந்த நல்லாட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட மீள் கட்டுமான பணிகள் இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதன் பின்னனியையும் கேட்டறிந்தார்.

## நூறுல் ஹக் நினைவாக நூல் வெளியீடு

(கல்முனை விசேட நிருபர்)



காலம்சென்ற ஊடக வித்தகர், பன்னூலாசிரியர் எம்.எம்.எம். நூறுல் ஹக் தொடர்பிலான நினைவோலை நிகழ்வும் 'ஒளியின் இறுதி ஒப்பம்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும் கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனை மயோன் மாவத்தை பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றன.

மருதம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஏ.எம்.எம். நஸீர் முன்னிலையில் தென்கிழக்கு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மௌலவி ஏ.எல். பதுர்தீன் ஷர்க்கி சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அத்துடன் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் ஏ.பீர் முஹம்மட் நூல் அறிமுகவுரையையும் கவிஞர் நவாஸ் சௌபி நினைவுப் பகிர்வுரையையும் நிகழ்த்தினர். ஊடகவியலாளர் செயிட் அஸ்லம் மௌலானா வரவேற்புரையையும் நூலாசிரியர் ஏ.எம்.எம். ஜாபீர் ஏற்புரையையும் நிகழ்த்தினர்.

நிகழ்வின் ஓர் அங்கமாக பன்னூலாசிரியர் எம்.எம்.எம்.நூறுல் ஹக் அவர்களுக்கு மௌலவி பதுர்தீன் ஷிர்க்கியினால் விசேட துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், கலை, இலக்கியவாதிகள், சமூக ஆர்வலர்கள், நூறுல் ஹக்கின் குடும்ப உறவினர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.



# ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி

aalamulislam.tkn@lakehouse.lk

# அடியார்களின் செயல்கள் இறைவனிடம் காண்பிக்கப்படும் மாதம் 'ஷஃபான்'

ஷஃபான் மாதம் சிறப்புக்களும் அருள்களும் நிறைந்த மாதமாகும். அதற்குப் பின்னால் வரப்போகும் பாக்கியங்கள் நிறைந்த புனித ரமழான் மாதத்திற்கு நன்மைகளின் தோரணை வாயிலாக அது அமைந்துள்ளது.

**ஷஃபான் மாதத்தின் மகிமை**

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஷஃபான் மாதம் முழுதும் நோன்பு வைத்தார்கள் என்று கூறுமளவுக்கு சில சமயம் நோன்பு நோற்பார்கள். அதேபோல் சிலசமயம் நோன்பு நோற்கமாட்டார்கள் எனக் கூறும் அளவுக்கு நோன்பின்றியும் இருப்பார்கள். நபியவர்கள் ரமழானில் மாத்திரம்தான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றிருக்கின்றார்கள். அதனையடுத்து ஷஃபானைத் தவிர வேறு எந்த மாதத்திலும் அவர்கள் அதிக நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை' (புஹாரி)

இன்னொரு அறிவிப்பில் 'நபியவர்கள் ஷஃபானின் சிலநாட்கள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் நோன்பு நோற்றுள்ளார்கள்' என்று பதிவாகியுள்ளத.(முஸ்லிம்)

உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'இறைத்தூதர் அவர்களே! நீங்கள் ஷஃபான் மாதத்தில் நோன்பு வைப்பது போன்று வேறு எந்த மாதத்திலும் நோன்பு நோற்பதை நான் பார்த்ததில்லையே' எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள் 'ரஜப், ரமழான் ஆகிய இரண்டு மாதங்களுக்கிடையில் (ஷஃபானாகிய) இம்மாதத்தை மனிதர்கள் மறந்துவிடுகிறார்கள், அடியார்களது செயல்கள் இறைவனிடம் எடுத்துக் காண்பிக்கப்படும் மாதம் இது. எனவே நான் நோன்பாளியாக இருக்கும் போது எனது செயல்கள் இறைவனிடம் உயர்த்தப் படுவதை நான் விரும்புகிறேன்' எனக் கூறினார்கள். (நஸாஈ)

இந்த ஹதீஸ் முக்கிய இரண்டு விடயங்களை கற்றுத்தருகின்றது:

1.நன்மையான விடயங்களை தேடிப் பெறுவதில் நபித்தோழர்களிடம் அலாதியான ஆர்வம் காணப்பட்டது.

2.மக்கள் மறந்து கவனம் செலுத்தத் தவறும் காலப்பகுதிகளில் அதனை நன்மைகள் கொண்டு உயிர்ப்பிப்பது விரும்பபத்தக்க செயலாகும். அப்படியான சந்தர்ப்பங்களில் செய்யப்படும் வணக்க வழிபாடுகளுக்கு பாரிய கூலியுமுண்டு.

உதாரணமாக சந்தையில் சந்தடிகளுக்கு மத்தியில் திக்ர் செய்வது பொதுவாகவே மக்கள் மறந்துவிடக் கூடிய ஒரு சந்தர்ப்பமாகும். அந்த வகையில் யார் சந்தையில் இறை நினைவை சிந்தைக்கு எடுக்கின்றாறோ அவருக்கு உயர்ந்த கூலி கிடைப்பதாக நபிகளார் கூறியுள்ளார்கள். யார் சந்தைக்குள் நுழையும் போது....

'லாஇலாஹ இல்லல்லாஹூ வஹ்தஹூ லா ஷரீக்க லஹூ, லஹூல் முல்கு வலஹூல் ஹம்து, யுஹ்யி வயுமீத்து வஹுவ ஹய்யுன் லா யமூத்து, பியதிஹில் கய்ரு வஹுவ அலா குல்லி சய்இன் கதீர்' என்று கூறுகின்றாறோ அவருக்கு அல்லாஹ் ஆயிரமாயிரம் நன்மைகளை எழுதுவான், அவரின் ஆயிரமாயிரம் பாவங்களை மன்னிப்பான், இன்னும் அவருக்கு ஆயிரமாயிரம் அந்தஸ்துக்களை உயர்த்துவான் எனநபி (ஸல்) கூறியதாக உமர் (ரழி) அறிவித்துள்ளார்கள்.

மேலும் நபி ( ஸல்) கூறியதாக மஃகல் பின் யஸார் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் 'மக்கள் பொடுபோக்காக விட்டு விடக்கூடிய சீர்கெட்ட காலங்களில் செய்யப்படும் வணக்க வழிபாடுகள் என்னை நோக்கி பயணிக்கும் ஹிஜ்ரத் ஆகும்' (முஸ்லிம்)

எனவே ஷஃபான் மாதத்தை ரமழானுக்குரிய பாதையாக அமைத்துக் கொள்வதற்கு பின்வரும் நடைமுறைப் பயிற்சிகளை கடைப்பிடிப்போம்.

1. அதிகமாக நோன்புநோற்றல்.

ஷஃபானில் நோன்பு நோற்பது ரமழான் நோன்புக்கான ஒரு ஆரம்ப பயிற்சியாகவும் ஒத்திகையாகவும் அமையும்.

2. ஐங்காலத் தொழுகைகளை உரிய நேரத்தில் தொழுவதை பேணிவருதல்.

3. அல்குர்ஆனை முழுமையாக ஒருமுறை ஓதி முடித்தல்

4. முஸ்லிம்களின் முதல் கிப்லாவான மஸ்ஜிதுல் அக்ஸாவை ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து மீட்டித் தருமாறு அல்லாஹ்விடம் மண்டியிட்டு பிரார்த்தித்தல். ஏனெனில் ஷஃபான் மாதத்தில்தான் முஸ்லிம்களின் கிப்லா மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து மஸ்ஜிதுல் ஹராம் நோக்கி மாற்றப்பட்டது. இந்நிலையில் அதன் பரிதாப நிலையை நினைவு கூருவதற்கு இதுவே பொருத்தமான தருணமாகும்.

5. இரவுநேரத் தொழுகைகளில் கவனம் செலுத்துதல்.

6. சண்டை சச்சரவுகளை மறந்து சமாதானமாகுதல்.

மனிதர்களது செயல்கள் இறைவனிடம் எடுத்துக் காண்பிக்கப்படும் இம்மாதத்தில் அல்லாஹ்வின் மன்னிப்பையும் அருளையும் பெற விரும்புவோர் குரோதங்களையும் பகைமைகளையும் மறந்து மன்னித்து புது வாழ்வை துவங்க ஷஃபானை சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்ளட்டும்.

7. கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்கள் அனைத்தையும் முற்றுமுழுதாக கடைப்பிடித்தல்.

8. உலகை ஆட்டிப்படைக்கும் உயிர்க்கொல்லி நோயான கொரோனா பீடையில் இருந்து உலக மக்கள் யாவரையும் பாதுகாக்குமாறும் இந்த சோதனையையும் துன்பத்தையும் முற்றாக அகற்றி விடுமாறும் வல்ல அல்லாஹ்விடம் மன்றாடி பிராத்திப்போம்.

முஹம்மத் பகீஹுத்தீன்



# குழந்தைகளுக்கு பெயர் சூட்டுதல்

ஒரு குழந்தை பிறந்தால் பொருத்தமான அழகான பெயரைத் தெரிவு செய்து பெயர் வைக்க வேண்டும் என இஸ்லாம் விரும்புகிறது.

“உங்கள் பெயர்களின் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது அப்துல்லாஹ் (அல்லாஹ்வின் அடிமை) மற்றும் அப்துர்ரஹ்மான் (அருளாளனின் அடிமை) ஆகியவையாகும். **(ஆதாரம்; முஸ்லிம் )**

இப்படியான பெயர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதேபோல சஹாபாக்கள், சஹாபி பெண்மணிகளுடைய பெயர்களை தெரிவு செய்து வைக்க வேண்டும். அல்லது பொருத்தமான பெயர்களை தெரிவு செய்து பிள்ளைகளுக்கு வைத்துக் கொள்ள வேண்டும். சில நேரங்களில் தவறான அர்த்தங்களை தரக்கூடிய பெயர்களை குழந்தைகளுக்கு வைத்து விட்டால் அதை கட்டாயம் மாற்றுவதோடு வேறு நல்ல பெயரை தெரிவு செய்து வைக்க வேண்டும் என்பதை பின்வரும் நபி மொழிகள் தெளிவுபடுத்துவதை காணலாம்.

“(என் தந்தை) உமர் (ரழி) அவர்களுக்கு ஆசியா (பாவி) எனப்படும் புதல்வி ஒருவர் இருந்தார். அவருக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஜமீலா (அழகி) என மாற்றுப் பெயர் சூட்டினார்கள்.” அறிவிப்பவர் அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) **(ஆதாரம்; முஸ்லிம்)**

மேலும் “(மறுமை நாளில்) அல்லாஹ்விடம் மிகவும் கேவலமான பெயர் மன்னாதி மன்னர் (மலிக்குல் அம்லாக்) என்று பெயர் சூட்டிக்கொண்டதாகும். என்றார்கள் **(ஆதாரம்; முஸ்லிம் )**

எனவே பொருள் வித்தியாசப்படும் பெயர்களை மாற்றி வேறு நல்ல பெயர்களை வைத்துக் கொள்ள வேண்டும். அதே போல் ஏற்கனவே வைத்த பெயர் நல்ல பெயராக இருந்தாலும் அது தவறான கருத்துக்கு இடம்பாடு இருக்குமென்றால் அதையும் மாற்றிக் கொள்ள வேண்டும். என்பதை பின்வரும் ஹதீஸ்கள் மூலம் விளங்கலாம்.

“ஸைனப் (ரழி) அவர்களுக்கு முதலில் பர்ரா (நல்லவள்) என்ற பெயர் இருந்தது. அப்போது அவர் தம்மைத் தாமே பரிசுத்தப்படுத்திக் கொள்கிறார். என்று (மக்களால்) சொல்லப்பட்டது. ஆகவே அவருக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஸைனப் (அழகிய தோற்றம் உடைய நறுமண செடி) என்று பெயர் சூட்டினார்கள். **(ஆதாரம் புகாரி, முஸ்லிம்)**

அதே போல நபி (ஸல்) அவர்களின் துணைவியான ஜுவைரியா (ரழி) அவர்களுக்கு பர்ரா என்ற பெயர் இருந்தது. அவருக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஜுவைரியா (இளையவள்) என பெயர் மாற்றினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பர்ராவிடம் (நல்லவளிடம்) இருந்து புறப்பட்டு விட்டார்கள் என்று சொல்லப்படுவதை நபியவர்கள் வெறுத்தார்கள். **(ஆதாரம்; முஸ்லிம்)**

எனவே, எமது குழந்தைகளுக்கும் நல்ல பொருள்களை கொண்ட பெயர்களை வைக்க வேண்டுமென்பது இஸ்லாத்தின் கருத்தாகும். அதேவேளை வைக்கப்பட்ட பெயர்களில் கருத்து பிழைகள் இருந்தால் அதனை மாற்றிக்கொள்வது முக்கியமானதாகும்.

இஸ்மத்,
வெலிகம.

# நபிகளாரின் உபதேசங்கள்...

வழிபடக் கூடிய கருமித்தனம், பின்பற்றக்கூடிய மன இச்சை, தன்னைத் தானே சிறந்தவனாகக் கருதுதல் ஆகிய மூன்று காரியங்களும் மனிதனை நாசமாக்க கூடியவை என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹஜரத் அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இந்த சமுதாயத்தின் மீது நான் அதிகமாக பயப்படுவது நாவளவில் அறிஞராக இருக்கும் நயவஞ்சகர்களை பற்றித்தான்( தன்னுடைய ஈமான் மற்றும் அமல் பற்றி கவலைப்படாமல் மார்க்க ஞானங்களை பேசுபவன்) என்று ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஜரத் உமரிப்னுல் கத்தாப்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

எவர் பிரபல்யம் என்ற ஆடையை உலகில் அணிவாரோ கியாமத் நாளன்று அல்லாஹுத்தஆலா அவருக்கு கேவலம் என்னும் ஆடையை அணிவித்து அதற்கு நெருப்பை மூட்டி விடுவான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஜரத் அப்துல்லாஹிப்னு உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக எவர் தொழுதாரோ, அவர் நிச்சயமாக இணை வைத்து விட்டார். மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக நோன்பு நோற்றாரோ அவர் நிச்சயமாக இணை வைத்து விட்டார். மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக எவர் தர்மம் செய்தாரோ அவர் நிச்சயமாக இணை வைத்து விட்டார் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை தாம் கேட்டதாக ஹஜரத் ஷத்தாதிப்னு அவ்ஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

பெருமை அடையவும், பணக்காரனாகவும், பேரும் புகழும் பெரும் எண்ணத்துடன் ஒருவன் பொருள் சம்பாதித்தால் அவன் ஹலாலான வழியில் சம்பாதித்தாலும் அல்லாஹுத்தஆலா அவன் மீது கோபம் கொண்ட நிலையில் கியாமத்து நாளில் அல்லாஹுத்தஆலாவை சந்திப்பான். பிறரிடம் வாசிப்பதை விட்டும் தவிர்ந்து கொள்ளவும் தனது வீட்டார் உடைய தேவைகளை பூர்த்தி செய்யவும் அண்டை வீட்டாருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒருவன் ஹலாலான வழியில் பொருள் ஈட்டினால் கியாமத்து நாள் அன்று அவரது முகம் பதினான்காம் நாள் இரவின் பூரணச் சந்திரனைப் போன்று பிரகாசிக்கும் நிலையில் அல்லாஹுத்தஆலாவை சந்திப்பார் என்று ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹழ்ரத் அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஏ.ஸி.அப்துல்ஸலாம்,
பலாங்கொடை.

# தாயின் அரவணைப்ப...

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு ஆண் எப்படிப்பட்ட பெண்ணை திருமணம் செய்ய வேண்டுமென்ற அழகிய உபதேசத்தை தந்திருக்கின்றார்கள். அந்தவகையில்தான் மார்க்கமுள்ள பெண்ணை திருமணம் செய்யுமாறு சொல்லித் தந்திருக்கின்றார்கள்.

ஒரு மனிதன் மார்க்கப்பற்றுள்ள பெண்ணை திருமணம் செய்வதன் மூலம் தனக்கு பிறக்கயிருக்கின்ற குழந்தையையும் ஸாலிஹான பிள்ளையாக மாற்றமுடியும். இந்த உண்மையை வரலாற்று நிகழ்வுகளில் தெளிவாக புரிந்து கொள்ளலாம். நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நீண்ட காலமாக பிள்ளைகளில்லாமல் இருந்தார்கள். இக் காலப்பகுதியில் தான் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை குழந்தையாகக் கொடுத்து சிறிது நாட்களிலேயே பாலைவனத்தில் தாயுடன் விட்டு விட்டு வருமாறு அல்லாஹ் கட்டளையிடுகிறான்.



சிறு வயதிலிருந்து தாயின் அரவணைப்புடன் மாத்திரம் வளர்கின்றது.

அறிகின்ற பருவத்தை இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அடைந்த உடன் அல்லாஹ் இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அறுக்குமாறு கனவின் மூலம் காட்டுகிறான். இந்த விடயத்தைப் பற்றி மகனிடத்தில் தந்தை கூறியவுடன் எந்தவித தயக்கமுமின்றி அல்லாஹ்வுடைய கட்டளையை நிறைவேற்றுங்கள் என்று துணிந்து சொல்கின்றது என்றால் அவர் வளர்கின்ற போது ஈமானை சுமந்த தாயிடம் வளர்ந்தார்கள். ஈமானை சுமந்த தாய் தன்னுடைய பிள்ளையையும் ஈமானிய பண்புள்ள பிள்ளையாக வளர்த்திருக்கிறார்கள். எனவே தாயினுடைய அரவணைப்பில்தான் பிள்ளைகளின் பழக்கவழக்கங்கள் தங்கியுள்ளது.

பின்தி நூறுல்லாஹ்,
திஹாரிய.

# அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டிய முறை

ஒரு அடியான் அல்லாஹ்விடம் கையேந்திக் கேட்கும் போது வெறுங்கையாக திருப்பியனுப்ப இறைவன் வெட்கப்படுகிறான் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர் அறிவிப்பவர்: ஸல்மான் பார்ஸீ (ரலி) நூல்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா, ஹாகிம்

எந்தப் பிரார்த்தனையும் நிராகரிக்கப்படுவதில்லை என்ற உத்தரவாதத்தை இந்த நபிமொழி வழங்குகின்றது. அப்படியானால் சிலரது பிரார்த்தனைகள் மறுக்கப்பட காரணங்கள் என்ன?

**ஹராமானவற்றைத் தவிர்க்க வேண்டும்;**

நீண்ட பயணத்தில் ஒருவன் புறப்பட்டு, ஆடைகளும் உடம்பும் புழுதி படிந்த நிலையில், இறைவா! இறைவா! என்று பிரார்த்திக்கிறான். அவனது உடை, உணவு, பானம் ஆகியவை ஹராமானதாக இருக்கும் போது அவனது பிரார்த்தனை எவ்வாறு அங்கீகரிக்கப்படும்? என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்

மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட முறையில் பொருளீட்டி உண்பதால் ஒருவனது துஆ அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதை இந்த ஹதீஸ் விளக்குகின்றது.

தங்களின் பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று விரும்பக் கூடியவர்கள் அனுமதிக்கப்பட்ட முறையில் பொருளீட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

**அவசரப்படக் கூடாது**

அல்லாஹ்விடம் பிரார்த்திக்கும் போது அவசரப்படக் கூடாது. ஒன்றுக்குப் பலமுறை திரும்பத் திரும்பக் கேட்க வேண்டும். ஒரு தடவை பிரார்த்தனை செய்து விட்டு நான் கேட்டேன்; கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது. இத்தகைய எண்ணத்துடன் கேட்பவர்களின் துஆக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை. நாம் கேட்டவுடன் தருவதற்கு அல்லாஹ் நமது வேலையாள் அல்ல! அவன் நமது எஜமானன். எஜமானனிடம் கெஞ்சிக் கேட்பதே முறையாகும். நான் பிரார்த்தனை செய்தேன்; அங்கீகரிக்கப்படவில்லை என்று கூறி அவசரப்படாத வரை உங்கள் துஆக்கள் அங்கீகரிக்கப்படும் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி

**பாவமானதைக் கேட்கக் கூடாது**

பிரார்த்திக்கும் போது இறைவன் எதைத் தடை செய்துள்ளானோ, அதைக் கேட்கக் கூடாது. இறைவா! லாட்டரிச் சீட்டில் என்னைப் பணக்காரனாக்கு! என்பது போன்ற பிரார்த்தனைகள் இறைவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை. பாவமானவற்றையும், உறவினரைப் பகைப்பதாகவும், பிரார்த்திக்காத வரை அடியானின் பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி); நூல்: முஸ்லிம்

**மரணத்தைக் கேட்கக் கூடாது**

முதுமையின் காரணமாக மற்றவர்களுக்குப் பாரமாகி, சொந்த பந்தங்கள் கூட அலட்சியப்படுத்துவதைக் காணும் போது ஏன் இவ்வுலகில் நாம் வாழ வேண்டும்? என்று எண்ணுவார்கள். இறைவா! சீக்கிரம் என்னை மரணிக்கச் செய்து விடு!என்று பிரார்த்தனை செய்து விடுவார்கள். எந்த நிலையிலும் யாரும் மரணத்தை இறைவனிடம் கேட்கவும் கூடாது; மனதால் அதற்கு ஆசைப்படவும் கூடாது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்.

தனக்கு ஏற்பட்ட துன்பத்தின் காரணமாக உங்களில் யாரும் மரணிக்க ஆசைப்படக் கூடாது. அப்படிச் செய்ய வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப் பட்டால் இறைவா! நான் வாழ்வது எனக்குச் சிறந்ததாக இருக்கும் வரை என்னை வாழ வை! நான் மரணிப்பது எனக்கு நல்லதாக இருந்தால் என்னை மரணிக்கச் செய் என்று கூறட்டும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் (ரலி) ; நூல்: புகாரி

எம்.எம். முஹம்மத் ஸப்வான்,
சீனன்கோட்டை, பேருவளை





மறைந்த ஓய்வு நிலை மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடல் யாழ் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது. இதன்போது யாழ். மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று திருவுடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதை படங்களில் காணலாம்.

படங்கள் ஐ.சிவசாந்தன்

# அரசியல் கைதிகள் இன்று அநாதையாகியுள்ளனர்

## அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**



நாம் ஒரு பலமான சக்தியாக இயங்காத வரைக்கும் அரசியல் கைதிகள் அகதிகளாவே இருப்பார்கள் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளரான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் அகதிகள் இன்று அரசியல் அநாதையாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதற்கான காரணம் ஒட்டு மொத்த அரசியல் தமிழ்த் தலைமைகளுமே.! சிவில் சமூகங்கள் பொறுப்பேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அதாவது அரசியல் கைதிகளின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. கடந்த ஆட்சிக்காலத்தில் தீர்த்திருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலில் இதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. தமிழ் அரசியல் தலைமைகளால் கொடுக்கப்பட்ட எந்த வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசியல் தலைமைகள் கொரோனாவினை காரணம் காட்டுகிறார்களே தவிர அரசியல் கைதிகளை பார்ப்பதனையோ, அன்றாட தேவைகளையோ கவனிப்பதும் இல்லை.

அரசியல் கைதிகள் தமது கோரிக்கையை, அரசாங்கத்திடம் வைப்பதா? அரசியல் தலைமைகளிடம் வைப்பதா? சிவில் சமூகத்திடம் வைப்பதா? பொது மக்களிடம் வைப்பதா? என தெரியாது அரசியல் அகதியாகவும், அரசியல் அநாதைகளாகவும் இருக்கின்றார்கள் என்றார்.

ஆயரின் மறைவு

# வடக்கு, கிழக்கில் கறுப்பு கொடிகள் பறக்கவிட்டு அஞ்சலி செய்ய வேண்டும்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் சிறிதரன் வேண்டுகோள்

**ஐ.சிவசாந்தன்**

மன்னார் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு, கிழக்கில் கறுப்பு கொடி பறக்க விட அனைவருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆயரின் மறைவு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசிய மண்ணிலே தமிழ் மக்களுடைய உரிமைக்காகவும் அவர்களுடைய வாழ்வுக்காகவும் ஒரு நீண்ட பெரும் பாதையிலே தன்னுடைய ஆழமான பங்கினை ஆத்மார்த்தமாகவும், உணர்வாகவும் வெளிப்படுத்திய ஆன்மா ஒன்று மீளாத்துயரில் உறங்கிக் கொண்டிருக்கின்றது.



தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீது அதிகமான பற்றுக் கொண்ட ஒரு மனிதனாக நின்று அவர் தன்னை அர்ப்பணித்து இன்று உறக்கம் கொள்கின்ற அவரை நினைக்கும் போது நெஞ்சம் துடிக்கின்றது.

இப்படியான ஒரு ஆயர் இனிக் கிடைப்பாரா என்பது சந்தேகமே. இலங்கையினுடைய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சென்று மிகத் துணிச்சலோடு ஆதாரத்தோடு ஒரு இலட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போய் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியை வெளிப்படையாக சொன்ன ஒரு மனிதர். அவருடைய இறுதி திருப்பலி நடைபெறும் நாளான எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு கிழக்கு எங்கும் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் கறுப்பு கொடிகளோடு அவருடைய உருவப்படங்கள் தாங்கிய நிலையில் அஞ்சலி செலுத்துமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

# தேவாலயத்தில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய முஸ்லிம் இளைஞன் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றினுள் வைத்து முஸ்லிம் இளைஞனொருவன் நேற்று முன்தினம் இரவு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களின் முக்கிய வழிபாட்டு வாரமாக தற்போது காணப்படும் நிலையில் ஆலயத்தில் இரவு வழிபாடு இடம்பெற்றது. இதன்போது சந்தேகத்திற்கிடமான முறையில் இளைஞனொருவர் தேவாலயத்தினுள் சென்றுள்ளார்.

அங்கிருந்தவர்கள் இளைஞனை விசாரித்தபோது கண்டி அக்குரனை பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞன் என தெரியவந்துள்ளது. உடனடியாக அவரை பொலிசாரிடம் ஒப்படைத்த நிலையில் வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு

வடமாகாணத்திற்கு உட்பட்ட கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 'தந்தை செல்வா' மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துகொண்டார். மேலும், வடமாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடமாகாண மகளிர் விவகாரத்துறை அமைச்சின் செயலாளர், கல்வித்துறை வடமாகாண பணிப்பாளர், பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் விருதுபெறும் கலைஞர்கள் எனப் பலபேர் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர், வடமாகாணம் என்பது தமிழர்களுடைய கலையையும் கலாசாரத்தையும் அதனுடைய தனித்துவமான பாரம்பரியத்தையும் சொல்லி நிக்கின்ற இடமாகும். யாழ் மாவட்டத்தினுடைய தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் கண்டு மகிழ்ந்தும் பூரித்தும் போய்யுள்ளேன். ஆனால்,



போகின்ற நிகழ்வுதான் தற்போது அதிகமாக கண்டுவருவதாகவும் பதிவு செய்யப்பட்ட பாடல்களை இயக்கி நடனமாடும் நிகழ்சிகள் தற்போது நடைபெறுகின்றன. இதனால் பாடகர்கள் மற்றும் பின்னணிப் பாடகர்களுடைய கலை அருகி வருகின்றது. இன்று அவற்றையெல்லாம் நாங்கள் மறந்து போய்விடுமோ என அச்சத்தோடு வாழவேண்டிய காலம் வந்து விட்டது.

இருப்பினும், இக் கலைகளையும் பாரம்பரியத்தையும் எங்களுடன் தக்கவைத்துக்கொண்டு நம்முடன் இருப்பவர்களாக இந்த கலைஞர்கள் விளங்குகிறார்கள். ஆகவே, அதை நாங்கள் இழந்து விடாது எங்களுடன் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பாரம்பரிய கலைகளை மறந்து

தொழில்நுட்பம் என்பது குறிப்பிட்ட கலையை நவீனபடுத்துவதாக அமைய வேண்டும் மாறாக அதனை மாற்றுவதற்கான ஒரு வழியாக அமையக்கூடாது. வடமாகாணத்திலே நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் பதிவு செய்யப்பட்ட பாடல்களை ஒலிப்பதை நிறுத்தி பாடகர்கள், பின்னணி பாடகர்கள் மற்றும் வாத்திய கலைஞர்களை பயன்படுத்தி நிகழ்த்தப்பட வேண்டும் என்றார்.

# ஆயர் ஜோசப்பின் மறைவு தமிழ் மக்களிற்கு பேரிழப்பு

## கூட்டமைப்பு தலைவர் சம்மந்தன்

மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் அருட்திரு இராயப்பு ஜோசப் மறைவானது தமிழ் மக்களிற்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்மந்தன் தெரிவித்தார். ஆயரின் மறைவு தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

ஆண்டகை ஆயர் இராயப்பு ஜோசப் மக்களின் உரிமைக் குரலாக பல தசாப்தங்களாக திகழ்ந்தவர். மக்களோடு மிகவும் நெருங்கிப் பழகிய ஆயர் தமிழ் மக்களின் இக்கட்டான அனைத்து கட்டங்களிலும் தாம் நேசித்த மக்களிற்காக முன்னின்று போராடிய ஒருவராவார். இன, மத மொழிகளிற்கப்பால் சாதாரண மக்களின் உரிமைகளிற்காக எவ்வித தயக்கமும் பாரபட்சமும் இல்லாமல் அயராது பணியாற்றிய ஒரு தலைவரை இன்று நாம் இழந்துள்ளோம்.



மக்களின் உரிமைகளிற்காக போராடிய மறைந்த ஆண்டகை இராயப்பு ஜோசப் பிரயத்தனங்கள் மெய்ப்பட வேண்டும் என நாம் இறைவனை பிரார்த்திப்பதோடு ஆண்டகையின் மறைவால் துயறுற்றிருக்கும் அவரது உறவினர்கள் திருச்சபை மக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

# மீள அமைக்கப்படாத நிலையில் மீனவர் பயன்படுத்தும் கட்டடம்

## விரைவாக மேற்கொள்ள தவிசாளரிடம் கோரிக்கை

**மானிப்பாய் தினகரன் நிருபர்**

வீதி அபிவிருத்திக்காக இடிக்கப்பட்ட வலி. தென்மேற்கு பிரதேசத்தின் காக்கைதீவு இறங்குதுறையில் மீனவர்கள் பயன்படுத்திவரும் இரண்டு கட்டடங்களையும் மீண்டும் அமைப்பதற்கு நிதி வழங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் கட்டடங்களை அமைப்பதில் பிரதேச சபை காலம் கடத்தி வருகின்றது.

இந்தநிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள மீனவர்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்களும் மீன்பிடி உபகரணங்களின் பாதுகாப்பு கருதியும் மீனவர்களின் நலன் கருதியும் இரண்டு கட்டடங்களையும் விரைவாக அமைத்து தருமாறு தவிசாளரை கோரியுள்ளனர்.

ஓட்டுமடம் சந்தியிலிருந்து கல்லுண்டாய் வீதி ஊடாக பொன்னாலைக்கு செல்லும் வீதி காப்பெற் வீதியாக மாற்றி அமைக்கப்பட உள்ளது. தற்பொழுது வீதியின் இரு புறமும் அகலிப்பு பணியில் ஈடுபட்டு வரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வலி.தென்மேற்கு பிரதேசத்தின் காக்கைதீவு இறங்குதுறையில் அமைக்கப்பட்டிருந்த மீனவர்கள் பயன்படுத்தும் ஓய்வு மண்டபத்தையும் இயந்திரங்கள் வைக்கப்படும் மண்டபத்தையும் அகற்றியதுடன் இரண்டு மண்டபங்களையும் மீண்டும் அமைப்பதற்கு பிரதேச சபைக்கு 46 இலட்சம் ரூபா நிதி வழங்கியிருந்தது.

இப் பணம் வழங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் கட்டடங்கள் அமைக்கப்படவில்லை. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மேற்படி இறங்குதுறையை பயன்படுத்தி வருவதுடன் 600க்கும் மேற்பட்ட வள்ளங்களில் தொழில் செய்து வருகின்றார்கள்.

வள்ளங்களின் வெளியிணைப்பு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு மண்டபம் இல்லாதமையாலும் மீனவர்கள் ஓய்வு எடுப்பதற்கு வசதி இல்லாதமையாலும் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ள மீனவர்கள் இரண்டு மண்டபங்களையும் விரைவாக அமைத்து தருமாறு தவிசாளரை கோரியுள்ளனர்.

# கைது செய்யப்பட்ட கிராம அலுவலர் வைத்தியசாலையில்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட கிராம அலுவலர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோவில்குளம் கிராம அலுவர் பிரிவின் கிராம அலுவலர் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து கொழும்பில் இருந்து வருகை தந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் அலுவலர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட கிராம அலுவலரை மேலதிக விசாரணைக்காக கொழும்பு கொண்டு செல்ல இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், கிராம அலுவலர் தமக்கு உடல்நிலை சரியில்லை எனவும், நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததையடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிசாரிடம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் ஒப்படைந்திருந்தனர்.

# உலருணவுப் பொருட்கள் வழங்கல்



**யாழ்.விசேட நிருபர்**

கொரோனா அபாயம் காரணமாக தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் திருநெல்வேலி, பாற்பண்ணை கிராமத்திற்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

# மனைவியை கொலை செய்து கணவன் தூக்கிட்டு தற்கொலை

## கிளிநொச்சியில் சம்பவம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிவபுரம் கிராமத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தை தனது மனைவியை கொலை செய்துவிட்டு தானும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

சம்பவத்தில் 38 வயதுடைய வேலாயுதம் சிவஞானம் என்பவரும் அவரது மனைவியான 36 வயதுடைய சிவஞானம் குகனேஸ்வரி என்வருமே உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளதுவும், குடும்பத் தகராறு காரணமாகவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிசார் குறிப்பிட்டுள்ளனர். தனது மனைவியின் கழுத்தை நெறித்துகொலை செய்து தானும் தற்கொலை செய்திருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். இவர்களுக்கு 16 வயதில் மகளும், 13 மற்றும் 06 வயதில் இரண்டு மகன்களும் உள்ளனனர்.



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com



### புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I


45 நிமிடம்

**இவ்வினாத்தாளில் மொத்தம் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் 45 நிமிட நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும். உங்கள் விடைகள் சரியானவையா என்று அடுத்த வாரம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**

- 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான விடையின் கீழ் கோடிடுக.


★ 1 ஆம் 2 ஆம் வினாக்களில் முதலில் உள்ள 3 சொற்களுடனும் மிகவும் பொருந்தும் படத்தினைத் தெரிவு செய்க.

01 தரை, கடல், ஆகாயம்



1) 2) 3)

02. புராதனம், பயணம், எளிமை



1) 2) 3)

★ 03 ஆம் 04 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தினால் ஒரு நிகழ்ச்சி தொடர்பான வாக்கியம் கிடைக்கும். அவ்வாறு ஒழுங்குபடுத்திய விடையைத் தெரிவு செய்க.

03
1 இந்திய அணி | 3. போட்டியில் | 5. நேற்று | 2. வெற்றிபெற்றது | 4 நடைபெற்ற

1) 3, 5, 2, 4, 1
2) 4, 1, 5, 2, 3
3) 5, 4, 3, 1, 2

04.
1.எமது | 3. நாம் | 5. குழுவை | 2. வைத்திருப்போம் | 4 சுத்தமாக

1) 3, 5, 2, 4, 1
2) 3, 1, 5, 4, 2
3) 5, 1, 3, 4, 2

★ கீழுள்ள இரு பாடல்பகுதிகளையும் வாசித்து 5 ஆம் 6 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

*அணிலே அணிலே ஓடி வா*
*அழகு அணிலே ஓடி வா*
*கொய்யா மரம் ஏறி வா*
*குண்டுப் பழம் கொண்டு வா*

*பாதிப் பழம் உன்னிடம்*
*மீதிப் பழம் என்னிடம்*
*கூடிக் கூடி இருவரும்*
*கொறித்துக் கொறித்துத் தின்னலாம்.*

05. குண்டுப் பழம் என்பதன் மூலம் கருதப்படும் பழம் யாது?
1) பூசணிப்பழம் 2) கொய்யாப்பழம் 3) பலாப்பழம்

06. பழத்தில் ஒரு பாதி இருப்பது யாரிடம்
1) அணிலிடம் 2) கிளியிடம் 3) வௌவாலிடம்

07. எலியொன்றை பூனை பிடித்துத் துன்புறுத்தியது. அந்தப் பூனையை ஒரு நாய் பிடித்து வருத்தியது. அப்போது பூனை அறிந்து கொண்ட உண்மை யாதாக இருக்கும்?
1) ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் 2) அழுத பிள்ளை பால் குடிக்கும்
3) தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்

08 மகேசனுக்கு வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்று நெடுநாள் ஆசை. ஆனால் இப்போது இருக்கும் அரசாங்க உத்தியோகத்திலும் முன்னேற வேண்டும் என்றும் ஆசை. மகேசனின் நிலைமையைக் கூறும் தொடர்?
1) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை 2) திரை கடல் ஓடியும் திரவியம் தேடு
3) பேராசை பெருநட்டம்

09 நண்பர்களான சுண்டெலிக்கும் யானைக்கும் இடையில் ஒருநாள் சண்டை ஏற்பட்டது. அப்போது சுண்டெலியை யானை தண்டவாளத்தில் தூக்கிப் போட்டது. வேகமாக வந்த ரயிலில் நசியுண்டு யானை இறந்து விட்டது. மேலுள்ள நிகழ்ச்சியில் ஓர் கருத்துப் பிழையாக உள்ளது. கருத்துப் பிழையாகுவதற்குக் காரணம் யாதாக இருக்கும்?
1) ரயில் மோதி யானை சாவது 2) சுண்டெலியால் யானையைத் தள்ளி விட இயலாது
3) சுண்டெலிதான் ரயிலில் நசியுண்டு இறந்திருக்கும்.

10. '**ஒற்றுமையுடன் இருந்தால் பலமாக இருக்க முடியும்**' என்பதை விளக்கும் பழமொழி யாது?
1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு 2) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
3) எறும்பூரக் கற்குழியும்

★ கீழுள்ள பந்தியை வாசித்து 12 ஆம் 13 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

பிரதீப் பரீட்சையில் சித்தியடையும் எண்ணத்துடன் முயற்சியுடன் படித்து வந்தான். அவன் அவ்வும் பகலும் கண்விழித்து உணவும் உறக்கமும் மறந்து படிப்பிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தியிருந்தான். பரீட்சையும் நடந்து முடிந்து பெறுபேறுகளும் மிக விரைவில் வந்து சேர்ந்தன. ஆவலோடு முடிவுகளை அறிவதற்காக பாடசாலை சென்ற பிரதீப்பிற்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது......!

11. பிரதீப் தொடர்பாக கூறப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்று எது?
1) பிரதீப் வீண் முயற்சி எடுத்துள்ளான். 2) அவனது முயற்சி வீண் போகவில்லை
3) அவன் நினைத்தது எதுவும் நடக்கவில்லை

12. பாடசாலையில் அவனுக்காகக் காத்திருந்த இன்ப அதிர்ச்சி யாதாக இருக்கும்?
1) அவன் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதாகும்
2) அவன் பரீட்சையில் சித்தியடைந்துள்ளான் என்பதாகும்
3) அவன் முதல் மாணவனாகச் சித்தியடைந்துள்ளான் என்பதாகும்

★ ஒரு பிள்ளை கடைக்குச் சென்று வாங்கிய பொருட்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அவற்றை வாசித்து விடை தருக.

> ➢ *பந்து வாங்கியது பேனா வாங்குவதற்கு முன்னராகும்*
> ➢ *பந்து வாங்குவதற்கு முன்பு பட்டம் வாங்கப்பட்டது.*
> ➢ *பட்டம் வாங்கிய பின்னரே பேனா வாங்கப்பட்டது.*

13. அந்தப் பிள்ளை முதன் முதலில் வாங்கிய பொருள் யாது?
1) பட்டம் 2) பந்து 3) பேனா

14. மேலுள்ள பொருட்களில் இறுதியாக வாங்கிய பொருள் யாது?
1) பேனா 2) பட்டம் 3) பந்து

15. சாதனா இவ்வருடம் (2010) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதுகின்றாள். சாதனாவின் அண்ணா சாஜனும் அவளுக்கு 3 வயது மூத்தவன். எனவே, சாஜன் இப்பரீட்சை எழுதிய ஆண்டு யாதாக இருக்கும்?
1) 2006 இல் 2) 2007 இல் 3) 2008 இல்

16. கீழே ஒழுங்குமுறையில் அமைந்த விடை யாது?
1) பாடசாலை செல்லல், விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல், பாடம் படித்தல், வீடு திரும்புதல்.
2) பாடசாலை செல்லல், உடற்பயிற்சி செய்தல், பாடம் படித்தல், விளையாடுதல், வீடு திரும்புதல்
3) பாடசாலை செல்லல், பாடம் படித்தல், விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல் வீடு திரும்புதல்

17. பொருட்களின் பருமன் அடிப்படையில் ஒழுங்குமுறையில் அமைந்த விடை எது?
1) தேசிக்காய், பப்பாசிக்காய் மாங்காய், பலாக்காய்
2) தேசிக்காய், மாங்காய், பலாக்காய், பப்பாசிக்காய்.
3) தேசிக்காய், மாங்காய், பப்பாசிக்காய், பலாக்காய்

18. ஏனைய சொற்களோடு தொடர்பற்ற ஒருசொல் இடம்பெறும் விடை எது?
1) சீப்பு, பவுடர், பொட்டு, லிப்டிக் 2) கிருதி, ராகம், பாதம், ஆலாபனை
3) கைப்பிடி, ஆசனம், சில்லு, காலத்தி

19. ஒன்றோடு ஒன்று தொடர்புடைய சொற்களைக் கொண்ட விடை எது?
1) விமானி, விமானம், தண்டவாளம், பயணம் 2) தரை, வீதி, பயணம், ஆகாயம்
3) கடல், கப்பல், பயணி, பயணம்


★ இவ்வருடம் இல்ல விளையாட்டுப் போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட விளையாட்டுக்களில் பங்குபற்றிய சில மாணவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 20 ஆம் 21 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| 100 மீற்றர் ஓட்டம் | அஞ்சல் ஓட்டம் | உயரம் பாய்தல் | குண்டு எறிதல் |
|---|---|---|---|
| சிவகுமார் | மோகனதாஸ் | கீர்த்தி | பரணீதரன் |
| பரணீதரன் | கருணாகரன் | பரமேஸ்வரன் | மோகேஸ் |
| ஆனந்தன் | பரணீதரன் | சிவபாலன் | கீர்த்தி |
| மோகேஸ் | சிவபாலன் | கருணாகரன் | சிவபாலன் |

20. ஏதாவது 3 விளையாட்டுக்களில் மட்டும் பங்குபற்றிய வீரர்களைக் கொண்ட விடை யாது?
1) கீர்த்தி - சிவபாலன் 2) பரணீதரன் - சிவபாலன் 3) கருணாகரன் - கீர்த்தி

21. ஒரு விளையாட்டில் மட்டும் பங்குபற்றிய வீரர்களின் பெயர்களைக் கொண்ட விடை எது?
1) பரமேஸ்வரன், பரணீதரன், மோகனதாஸ் 2) மோகேஸ், ஆனந்தன், சிவபாலன்
3) மோகனதாஸ், ஆனந்தன், பரமேஸ்வரன்

22. கீழுள்ள கோலத்தை இனங்கண்டு அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க




23. கீழுள்ள எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணைக் கொண்ட விடை எது?

88 → 64 → 49 → ? — 1) 25 2) 36 3) 16


24. கீழே முதலில் உள்ள பாத்திரத்தின் தோற்றத்தை மேலிருந்து நோக்கும்போது தெரியும் அமைப்பு எதுவெனத் தெரிவு செய்க



25. அருகே A, B, C, D ஆகிய நான்கு தரை ஓடுகள் ஒன்றாகச் சேர்த்து வைக்கப்பட்டுள்ள கோலத்தையே காண்கிறீர்கள். இந்த நான்கு தரை ஓடுகளையும் எடுத்து வேறு ஏதாவது ஒரு சீரான வடிவத்தில் வைத்தால் தோன்றும் கோலத்தை தெரிவு செய்க.




★ 26 ஆம் 27 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் இடைவெளிகளில் வரவேண்டிய எண்ணை மூன்று விடைகளில் இருந்தும் தெரிவு செய்க. (குறியீடுகளில் உள்ள கணிதச் செய்கைகளை அறிவதற்கு எதிரேயுள்ள கூட்டினை அவதானியுங்கள்)



26. 1) 5 2) 6 3) 7

27. 1) 2 2) 3 3) 4


★ கீழேயுள்ள விளக்கப்படத்தை அவதானித்து, 28 ஆம் 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




28. அப்பிள் பழத்தை விரும்பி உண்ணும் பிள்ளைகள் எத்தனை பேர் உள்ளனர்?
1) 10 பேர் 2) 15 பேர் 3) 20 பேர்

29. மூன்று வகையான பழங்களையும் விரும்பும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
1) 3 பேர் 2) 4 பேர் 3) 5 பேர்

★ கீழுள்ள உருக்களின் நிரையை அவதானித்து 30, 31, 32 ஆம் வினாக்களுக்கு விடை தருக.



30 மேலுள்ள நிரையில் அதிகமாக உள்ள உரு எது?



(14ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான



ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com



(13 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

31. இந்த உரு எத்தனை தடவைகள் வந்துள்ளது?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

32. ஒரே வகையான இரண்டு உருக்களுக்கு நடுவில் அமைந்துள்ள உரு எது?
1) 2) 3)






★ மேலுள்ள படங்களையும் அவற்றுக்குரிய எழுத்துக்களையும் அவதானித்து, 33, 34, 35 ஆம் வினாக்களுக்கு விடை தருக.


33. சமையல் அறையுடன் தொடர்புடைய பொருட்களை மட்டும் குறிக்கும் விடை எது?
1) IGB 2) BGD 3) CIA

34. ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே பயன்படுத்தக் கூடிய பொருட்களைக் கொண்ட விடை எது?
1) ADIE 2) CDHI 3) FCGD

35. ADH ஆகிய பொருட்களுடன் தொடர்புடைய மிகச் சரியான சொல் பின்வருவனவற்றுள் எது?
1) ஆசிரியர் 2) அதிபர் 3) மாணவன்

36. 

இத்தராசின் இரு தட்டுக்களினதும் பொருட்களின் நிறை சமனாகும். எனவே, கீழே காட்டப்பட்டுள்ள தராசுகளில் சமம் என்று கூற முடியாத தராசு எது?





★ 37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.


37. சாரதி எனும் சொல்லை MSMR என எழுதுவார் எனின், பாபரப்பு எனும் சொல்லை எழுதிய முறை எதுவாக இருக்கும்?
1) BCBCBB 2) BCBCKE 3) KEKEBK

38. அதிபதி என்பது ⌖▲◫▲ எனின், திருமுருகன் என்பது-
1) ▲⊛▭⊛⊡△ 2) ▲⊛▲⊛▭△ 3) ▲⊛▭◫⊡△

39.

| | | | | |
|---|---|---|---|---|
| ★ | ★ | ★ | ★ | = 12 |
| △ | ★ | △ | ▼ | = 10 |

இங்கு காட்டப்பட்டுள்ள குறியீட்டுப் பிரசினத்தில் △ இக்குறியீடு ஒவ்வொன்றின் பெறுமதியை எழுதுக.
(.............)

40. 




இங்கு காட்டப்பட்டுள்ள குறியீட்டுப் பிரசினத்தில் ..? குறியிடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய எண் பெறுமதி யாது?
(.............)

## வணக்கத் தலங்கள்



இந்துக்கள் - கோயில்



பௌத்தர்கள் - விகாரை



இஸ்லாமியர்கள் - பள்ளிவாசல்



கிறிஸ்தவர்கள் - தேவாலயம்

## போசணைக்கூறுகளும் குறைபாட்டு நோய்களும்

★புரதம் - குவாசியக்கோர், மரஸ்மஸ்
★காபோவைதரேற்று - சோர்வு, மயக்கம்
★கொழுப்பு - தோல் வரண்டு போதல்
★விற்றமின் A - மாலைக்கண்
★விற்றமின் B - பெரிபெரி
★விற்றமின் C - ஸ்கேவி
★விற்றமின் D - என்புருக்கி
★விற்றமின் K - குருதி உறைவது தாமதமாதல்
★கல்சியம் - என்பு மற்றும் பல் குறைபாட்டு நோய்
★அயடின் - கண்டமாலை
★இரும்பு - இரத்தச் சோகை

## எமது உணவுகளில் அடங்கியுள்ள போசணைக் கூறுகள்







✦ புரதம் - இறைச்சி, பால், முட்டை, மீன், அவரை வகை, கடலை
✦ மாப்பொருள் (காபோவைதரேற்று) - தானியங்கள், கிழங்குகள், ஈரப்பலாக்காய்
✦ கொழுப்பு (இலிப்பிட்டு) - எண்ணெய், பால், தயிர், வெண்ணெய், நெய், மாஜரின், இறைச்சி
✦ கல்சியம் - கருவாடு, சிறுமீன்கள்
✦ இரும்புச் சத்து - நிலக்கடலை, மீன், இறைச்சி, ஈரல்
✦ விற்றமின் A - முட்டை மஞ்சட் கரு, பழங்கள், மஞ்சள் நிறத்திலான காய்கறிகள்
✦ விற்றமின் B - மீன், இறைச்சி, முட்டை, பச்சை நிற காய்கறிகள், தானியங்கள்
✦ விற்றமின் C - புளிப்புச் சுவை கொண்ட பழங்கள்
✦ விற்றமின் E - கீரை வகைகள்
✦ விற்றமின் K - பூகோவா, பசளி







## பிராணிகளுக்குரிய ஒலி மரபுச் சொற்கள்

★ காகம் - கரையும்
★ அணில் - கீச்சிடும்
★ குயில் - கூவும்
★ சேவல் - கூவும்
★ கழுதை - கத்தும்
★ எருது - முக்காரமிடும்
★ கிளி - பேசும்
★ மைனா - பேசும்
★ தவளை - கத்தும்
★ எலி - கீச்சிடும்
★ தேனீ - ரீங்காரமிடும்
★ நரி - ஊளையிடும்
★ ஓநாய் - ஊளையிடும்
★ யானை - பிளிறும்
★ பன்றி - உறுமும்

## கடந்த வார வினாத்தாள் - II இற்கான விடைகள்

(1) (i) வெள்ளை
(ii) காய்
(iii) கீரைகள்
(iv) துள்ளித்துள்ளி
(v) நறுக் நறுக்
(vi) பஞ்சு
(vii) பஞ்சு
(viii) அலாதி
(2) கறி
(3) விழா
(4) மணம்
(5) அநாதை
(6) வெள்ளிவிழா
(7) (i) பாலும்
(ii) நுணலும்
(iii) சிநேகிதனை
(8) (i) வெள்ளத்தால்
(ii) சிற்றூர்கள்
(iii) குலுங்கும்
(9) (i) அறஞ்செய்
(ii) திருவினை
(iii) ஊளையிடும்
(10)(i) எனக்குப் பாண் விருப்பம்
(ii) நான் குளிக்கின்றேன்
(11) *eyes*
(12) *it*
(13) *I am doing Exam*
(14) அம்மா கெதரட்ட எனவா
(15) மக்கள் சந்தைக்கு வருகிறார்கள்
(16)(i) பொருத்தமான வாக்கியங்கள் எழுதுக
(ii) " "
(iii) " "
(17) நானூற்று
(18) 9100
(19)(i) vi
(ii) xiv
(20)(i) 12 (ii) 75
(21)(i) $\frac{5}{10}$ , $\frac{1}{2}$
(ii) 0.5
(22) (i) 30 m.
(ii) மேற்கு
(23) 3l 75ml
(24) 20
(25)(i) வினா தவறு *(Open Marks)*
(ii) 17:00
(26) (i) 128 KM
(ii) 68 KM
(27) (i) 40 வரை நிழற்றுக
(ii) B, E
(iii) 30
(iv) 180

| | | | |
|---|---|---|---|
| (28) 24 | (29) 2400 | (30) 8l | (31) 2 |
| (32) 3 | (33) 4 | (34) 4 | (35) 4 |
| (36) 3 | (37) 4 | (38) 4 | (39) 4 |
| (40) 3 | (41) 4 | (42) 3 | (43) 3 |
| (44) 3 | (45) படம் தெளிவில்லை *(Open marks)* | | |
| (46) 4 | (47) 1 | (48) 2 | (49) 2 |
| (50) 4 | (51) 3 | (52) 3 | (53) 3 |
| (54) 2 | (55) 3 | | |
| (56) படம் தெளிவில்லை *(Open marks)* | | | |
| (57) 3 | (58) 2 | (59) 4 | (60) 3 |

# புனித வெள்ளி சிறப்பிதழ்

# இயேசுவின் அர்ப்பணிப்பை அர்த்தமுள்ளதாக்குவோம்



நம் ஆண்டவராகிய இயேசு சிலுவையில் பாடுபட்டு மரித்த பெரிய வெள்ளி தினத்தை இன்று நாம் அனுஷ்டிக்கின்றோம்.

உலக வரலாற்றில் ஒரு வெள்ளிக்கிழமை சீர்கெட்ட உலகில் சிறந்த சமுதாயத்தை செப்பனிடும் பணியில் ஒருவனின் உடல் சிதைக்கப்பட்டது.

எருசலேம் நகர் தொடங்கி கல்வாரி மலை உச்சிவரை ஒருவனின் இரத்தம் சிந்தப்பட்டது. 2021ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு துன்பகரமான செயல் இது.

இந்த சம்பவம் நடைபெற்றது வெள்ளிக்கிழமை தினத்தில். அதனையே பெரிய வெள்ளியாக அல்லது புனித வெள்ளியாக உலகமெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் ஒவ்வொரு வருடமும் நினைவு கூருகின்றனர்.

நமது குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் நாம் சில வேளை மூன்று நாட்கள் அது தொடர்பில் வருத்தப்படுவோம். அவர்கள் மிக நெருங்கிரவர்களாக இருந்தால் மட்டும் சில வாரங்கள் சில மாதங்கள் என்று அந்தத் துக்கம் தொடரும். சில நேரம் அது சில வருடங்களும் தொடரலாம் ஆனால் அதன்பின்னர் அந்த துக்கம் அல்லது வருத்தம் சுவடே இல்லாமல் ஒழிந்துபோகும்.

ஆனால் பெரிய வெள்ளிக் கிழமையில் இறந்த அந்த மனிதன் இயேசுவுக்காக மட்டும் 2021 வருடங்களாக துக்கப் படுகிறோம். கண்ணீர் வடிக்கிறோம். உண்ணாமல் உறங்காமல் வருத்தத்தை வெளிப்படுத்துகிறோம்.அது ஏன்?

ஒரு மனிதனுக்கு பிறந்தநாள் கொண்டாடலாம் ஆனால் ஒட்டுமொத்த உலகமும் சேர்ந்து இறந்த நாளை கொண்டாடுகிறதே அது ஏன்?

வாழப் பிறந்த மனிதர்கள் மத்தியில் இவர் மட்டும் தான் சாகப் பிறந்தவர் ஆம்! இயேசு சாகப் பிறந்தவரே. "வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்" என்பதல்ல இயேசுவின் வாழ்வு. இயேசுவின் மரணத்திற்குப்பின்னால் மர்மங்கள் மறைந்து கிடக்கின்றன.

அவை அன்பு, கீழ்ப்படிதல்,தியாகம் மற்றும் மன்னிப்பு என்பனவாகும். இயேசுவின் மரணம் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த இடைவெளியை இல்லாமல் செய்து விட்டது. இதன் அடையாளமாகத்தான் ஆலயத்தின் திரைச்சீலை இரண்டாக கிழிந்தது. யூதர்களின் தொழுகைக் கூடம் பல பகுதிகளைக் கொண்டதாக இருக்கும் அவற்றுள் தூயகம் புனிதமானது.

அதில் ஆரோனின் கைத்தடி, மன்னா மற்றும் பத்துக்கட்டளை அடங்கிய கற்பலகை ஆகியன இருந்தன.தலைமைக்குரு மட்டுமே அங்கு பிரவேசித்து அதற்கு தூபம் காட்டுவார். மக்களுக்கு அவை ஓர் மர்மமாகவே இருந்தது. ஆனால் இயேசுவின் பிறப்பில் தூயகத்தை மூடியிருந்த திரை இரண்டாகக் கிழிந்தது.இது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த இடைவெளியை இல்லாமல் செய்தது.

மனிதனின் பாவத் திரையை அகற்றி விட்டது இயேசுவின் மரணம். அவர் தன் மரணம் வரையிலும் இறைவனுக்கு தன்னையே அர்ப்பணித்தார். எனவே தான் இயேசுவின் மரணத்திற்கு மட்டும் அர்த்தம் அதிகமாக உள்ளது.இயேசு தன்னை முழுமையாக இறைவனின் சித்தத்திற்கு அர்ப்பணித்தார். மரணம் வரையிலும் அர்ப்பணித்தார். தனது ஆவியையும் இறுதியாய் இறை தந்தையிடம் அர்ப்பணித்தார். இதில் இயேசுவின் கீழ்ப்படிதல் வெளிப்படுகின்றது.

இயேசு நினைத்திருந்தால் இறை தந்தையிடமிருந்து எல்லையில்லா படைகளைப் பெற்று தமக்கு எதிராக செயற்பட்டவர்களோடு போராடியிருக்க முடியும் வெற்றி பெற்றிருக்கவும் முடியும். மாறாக இயேசுவின் போராட்டம் அன்பின் போராட்டமாக அமைந்தது. பாவிகளுக் காய் பரிந்து பேசி இருக்கின்றார்.

இயேசுவைத் தவிர வேறு எவருக்கும் இத்தகைய மனநிலை இருந்திருக்க முடியாது. இயேசுவின் இந்த அன்பில் தான் முழு கிறிஸ்தவமும் அடங்கியுள்ளது.

புனித வெள்ளியான இன்றைய நாளின் வேதாகம வாசகம் மற்றும் நற்செய்தியில் வாசிக்கப்பட்ட அனைத்து நிகழ்வுகளுமே யூத கலாச்சாரத்திற்கும் சட்டங்களுக்கும் முரண்பாடாக, எதிர்மறையாக இருக்கின்றன. யூத முறைப்படி முத்தமிடுதல் அன்பின், பாசத்தின், மரியாதையின் அடையாளம். ஆனால் யூதாஸ் இயேசுவை காட்டிக் கொடுப்பதற்காக முத்தமிடுகிறான். தலைமைச் சங்கம் இரவில் கூடுவது யூத சட்டத்தின் வழக்கமில்லை. ஆனால் இங்கே அவசரமாய் இரவில் கூடுவதோடு மட்டுமல்லாமல் முடிவும் எடுக்கப்படுகிறது.

எந்த யூதனும் தன் சொந்த இனத்தவரை பிற இனத்தவரிடம் காட்டிக் கொடுக்க மாட்டார்.ஆனால் இயேசுவோ உரோமையரிடம் தீர்ப்புக்காக கூட்டிச் செல்லப் படுகிறார்.

இயேசு தண்டிக்கப்பட வேண்டுமானால் சாட்சியங்களும் ஆதாரங்களும் தேவை. ஆனாலும் அவர் கசையடி பெறுகின்றார். யூத முறைப்படி 40 கசையடிகள் மட்டுமே கொடுக்க வேண்டும் ஆனால் இங்கே உரோமையர் முறைப்படி மிருகத்தனமாக இயேசு அடிக்கப்படுகின்றார்.

ஒரு யூதன் தவறு செய்தால் கல் எறிந்து கொல்லப்பட வேண்டும் தி.ப. 7 .54ல் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படுவது கூறப்படுகிறது. ஆனால் இயேசுவோ சிலுவை மரணத்திற்கு கையளிக்கப் படுகின்றார்.இயேசுவின் இறுதி மணித்துளிகள் எல்லாமே சட்டத்திற்கு எதிர்மறையாகவே அமைந்திருந்தன.

இயேசுவின் பிறப்பை கண்ணீரோடும் கனத்த உள்ளத்தோடும் நினைவு கூறும் நம்மிடம் இயேசுவின் மனநிலை இன்று இருக்கின்றதா?

கணவன் மனைவியை அன்பு செய்து மன்னிக்க முடிகிறதா? சுற்றி இருப்பவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ள முடிகிறதா?

பெற்றோர் பிள்ளைகள் இடையே இயேசுவைப்போல் விட்டுக்கொடுப்புடன் வாழ முடிகிறதா? எது எப்படி இருந்தால் எனக்கென்ன இந்த சமூகம் எனக்கு என்ன செய்தது என்று கேட்கும் இளைஞனே இயேசுவின் வாழ்வு உனக்கு என்ன சொல்கிறது?

## புனித வெள்ளி தரும் சிந்தனை

திரைகள் கிழிக்கப்பட வேண்டும் என்பதுதான் இயேசுவின் மரணம் இன்று மௌனமாக கூறும் வார்த்தை.ஆம் அவை எந்தத் திரை என பார்த்தால் சுயநலத்திரை, பாவத்திரை,அரசியல்திரை, சமயத்திரை, தீவிரவாதத் திரை,ஏற்றத்தாழ்வு திரை இனவெறி, மொழிவெறித்திரை போன்ற அத்தனை திரைகளும் கிழிக்கப்பட வேண்டும்.

இறைவார்த்தை என்ற ஆயுதம் கொண்டு அன்பு எனும் ஆடை அணியப் படவேண்டும். நமது பாவ வாழ்வு இயேசுவோடு சேர்ந்து சிலுவையில் அறையப்பட வேண்டும். தற்பெருமை, அதிகாரம் போன்றவை கல்லறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் இயேசுவின் மரணம் உண்மை அர்த்தம் பெறும். இல்லையேல் வருடம் ஒருமுறை வரும் ஏனைய பண்டிகைகள் போல இயேசுவின் இறப்பும் ஒரு நிகழ்ச்சியாக மட்டுமே இருக்கும்.

அம்புறோஸ் பீற்றர்...

# திருப்பாடுகளின் புனித வெள்ளி

உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் இன்று கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்கும் பெரிய வெள்ளி அல்லது புனித வெள்ளி தினத்தை அனுஷ்டிக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களின் முக்கிய காலமாகிய தவக்காலம் விபூதிப் புதனுடன் கடந்த மாதம் தொடங்கி நாற்பது நாட்கள் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்காலங்களில் கிறிஸ்தவ விசுவாசிகள் ஒரு சந்தி, சுத்த போசனம், நோன்பு உள்ளிட்ட ஒறுத்தல்களை மேற் கொண்டு தான தருமங்களை வழங்குவதிலும் ஈடுபடுவர். வரலாற்றில் இந்த தவக்காலம் கடுமையான விரதங்களுடன் கடைபிடிக்கப்பட்டதுடன் தற்போது அந்த கட்டுப்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டு வருவதை காணமுடிகிறது.

எமது நாட்டைப் பொருத்தவரை கடந்த இரண்டு வருடங்களிலும் நாட்டில் நிலவிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடனான நிலைமைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து கொரோனா வைரஸ் சூழ்நிலை ஆகியவை காரணமாக தவக்கால அனுஷ்டானங்களையோ உயிர்த்த ஞாயிறு பண்டிகையையோ பரிசுத்த வாரத்தின் புனிதச் சடங்குகளை யோ முறைப்படி மேற்கொள்ள முடியாத நிலையே காணப்பட்டது.

கடந்த வருடத்தில் இந்த அத்தனை நிகழ்வுகளும் தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பப்பட்டு வீட்டில் இருந்தவாறே நாம் அவற்றை அனுஷ்டிக்க வேண்டி நேர்ந்தது.

குறிப்பாக இந்த காலகட்டங்களிலேயே ஆலயங்களில் திருப்பலிகள், பக்தி முயற்சிகள்,சிலுவைப் பாதை தியானங்கள் உள்ளிட்ட சிறப்பு ஆராதனைகள் நடை பெறுவதுண்டு.

தவக்காலத்தின் இறுதி வாரம் குருத்தோலை ஞாயிறோடு தொடங்கி பரிசுத்த வாரம் அனுஷ்டிக்கப்படுவதுடன் குருத்தோலை ஞாயிறு தினத்தில் குருத்தோலைகளை கைகளில் ஏந்தி ஓசன்னா பாடி ஆலயங்களில் பவனிகள் நடைபெறும்.



அதனைத் தொடர்ந்து பெரிய வியாழக்கிழமையன்று பாதம் கழுவும் சடங்கு நடைபெறும்.மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள். அவர்கள் மண்ணிலிருந்து பிறந்து மண்ணுக்கே அர்ப்பணிக்கப் படுகின்றனர் என்பதை விபூதிப் புதன் தெளிவு படுத்துகின்ற நிலையில் மனிதர்களுக்கிடையில் எந்த ஏற்றத் தாழ்வும் கிடையாது. எஜமானன் ஊழியன் என்ற பாகுபாடும் கிடையாது. சகலரும் மனிதர்களே ஒருவருக்கொருவர் அன்பு செய்வதே உலகத்தின் மேன்மையான பண்பு என்பதை வெளிக்காட்டும் வகையில் இயேசு நாதர் தம் சீடர்களின் பாதங்களை கழுவினார். இடுப்பில் வெள்ளைத் துண்டை கட்டிக் கொண்டு, அமர்ந்து, பாதங்களைக் கழுவி, துடைத்து, முத்தமிட்டு குருவானவர்கள் இன்றும் அந்த சடங்கை நிறைவேற்றி வருகின்றனர்.

லோரன்ஸ் செல்வநாயகம்...

ஆலயங்களில் குருவானவர்கள், ஆயர்கள், பரிசுத்த பாப்பரசரும் கூட சாதாரண மக்களின் கால்களை தண்ணீர் கொண்டு கழுவி, துடைத்து பாதங்களைக் கழுவும் சடங்கு பெரிய வியாழக்கிழமைகளில் நடைபெறுகின்றன.

ஒருவர் மற்றவரை எந்தளவு அன்பு செய்கின்றோம் என்பது முக்கியம். நம் உடலை எரித்து அதனை சாம்பலாக்கி பிறருக்கு கொடுத்தாலும் அதில் அன்பு இல்லை என்றால் அதில் ஒன்றும் இல்லை என பரிசுத்த வேதாகமம் தெரிவிக்கின்றது.


"நீ உன்னை நேசிப்பது போல உன் அயலானையும் நேசிப்பாயாக" என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறுகின்றார்.

மனிதர்கள் அன்பு செய்வதற்காக பிறந்தவர்கள். அன்பு அனைத்தையும் வெல்லும். அன்பினால் செய்யமுடியாதது எதுவுமில்லை.என்பதை தமது சிலுவைச் சாவின் மூலம் நம் ஆண்டவர் இயேசு உலகிற்கு வெளிப்படுத்துகிறார்.

மனித பாவங்களுக்காக தன்னையே சிலுவையில் பலியாக்கி அன்பின் தியாகத்தை வெளிப்படுத்துகிறார் இயேசு.

அதனை பெரிய வெள்ளிக் கிழமை அல்லது புனித வெள்ளி நமக்கு நினைவூட்டுகின்றது.

பெரிய வெள்ளிக்கிழமை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர் விட்ட நாள். அன்றைய தினம் உலகம் முழுவதும் விடுமுறை தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அதன் மூலம் அதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.



தம்மை சித்திரவதை செய்து சிலுவை மரத்தில் தொங்கவிட்டு கைகளிலும் கால்களிலும் நீண்ட இரும்பாணிகள் அடித்து கொன்றவர்களையும் நம் ஆண்டவர் இயேசு மன்னிக்கின்றார்.

தம்முடன் தமது இருபக்கத்திலும் சிலுவை மரங்களில் தொங்கிய கள்வர்களில் ஒருவனைப் பார்த்து அவனது விசுவாசத்தை மெச்சி 'நீ இன்றே வான் வீட்டில் இருப்பாய்" என்று அவர் கூறுவதன் மூலம் தாம் கடவுள் என்பதை அவர் உறுதிப்படுத்துகின்றார்.

அவர் சிலுவை மரத்தில் தொங்கியவாறு தன்னை கொன்றவர்களை "பிதாவே இவர்களை மன்னியும் இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள்" என்ற வார்த்தையை உதிர்த்து அவர்களுக்காக இதை தந்தையிடம் மன்றாடுவது மன்னிப்பின் மகத்துவத்தை பறை சாற்றுகிறது.


இத்தகைய பின்னணியைக் கொண்ட இந்த பெரிய வெள்ளிக்கிழமை தினத்தில் ஆலயங்களில் சிலுவைப் பாதை தியானங்கள் நடைபெற்று பிற்பகலில் சிலுவை ஆராதனை, சிலுவையை முத்தி செய்தல் போன்ற சடங்குகளும் இடம்பெறும்.

இன்றைய நாள் கிறிஸ்தவ மக்களின் மிக முக்கிய நாளாவதுடன் துக்க நாளாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இயேசுநாதர் சிலுவையில் அறையப்படுவதோடு தவக்காலம் நிறைவு பெறுகின்றது.

மரித்த இயேசு தாம் உரைத்த படியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அந்த உயிர்ப்பு விழா பண்டிகையை கொண்டாடுவதற்கு ஆயத்தமாகும் நாம் பெரிய வெள்ளிக் கிழமையில் நம்மை நாம் திரும்பிப் பார்த்து, நம் பாவங்களை, நம் தீய சிந்தனைகளை இயேசுவின் சிலுவையில் அறைந்து, அவரை அடக்கம் செய்யும் கல்லறையிலேயே நாமும் அவற்றை அடக்கம் செய்வோம். உயிர்ப்புப் பெருவிழா எங்கள் வாழ்க்கையில் புதிய உயிர்ப்பைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையை நம் செயல்கள் மூலம் விதைப்போம்.

# சிலுவையிலறையுங்கள்...!



மானுடத்தின் மறுபதிப்பாய்
வந்துதித்த மனித குமாரன்
கேள்விகளால் எம் ஆதிமதக்
கருத்துகளைத் தகர்த்தெறியும்
தேவமகன்

இவனைச் சிலுவையிலறை
யுங்கள்
சிலுவையிலறையுங்கள்
ஓய்வு நாளையும்
இவன் வேலை நாளாக்குகிறான்
மோயீசன் சட்டங்களை
தவறு என்கிறான் எனவே
இவனைச் சிலுவையிலறையுங்கள்

உலகின் ஒளி நானே என்கிறான்
நானே ஜீவ ஊற்று என்கிறான்
நானே மெசியா என்கிறான்
எங்கள் மத போதகர்களை
விரியன் பாம்பு குட்டிகளே என்கிறான் எனவே
இவனைச் சிலுவையிலறையுங்கள்

நோய்களை குணமாக்குகிறான்
பேய்களை ஓட்டுகிறான்
இறந்தவர்களை உயிருடன் எழுப்புகிறான்
தாம் எதிர்பார்த்திருந்த மீட்பர் இவர்தாமோ என
மக்கள் நம்புகிறார் எனவே
இவனைச் சிலுவையிலறையுங்கள்

எங்கள் சாலமோன் மன்னன்
முப்பத்தாறு ஆண்டுகள் கட்டிய பேராலயத்தை
இடியுங்கள்
மூன்றே நாளில் நான் புதிதாய்
கட்டுவேன் என்கிறான் எனவே
இவனைச் சிலுவையிலறையுங்கள்

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு
கன்னத்தையும் காட்டு என்கிறான்
ஏழு முறையல்ல ஏழுஎழுபது முறைக்கு
மேலும் மன்னிக்கச் சொல்கிறான்
தீட்டுப்பட்டோரை ஆலயத்துள்
அழைத்துச் செல்கிறான் எனவே
இவனைச் சிலுவையிலறையுங்கள்

புரட்சிவாதியாய்
ஏழைகளை பற்றியே பேசுகிறான்
ஜாதியில் குறைந்தவளிடம்
தண்ணீர் குடிக்கின்றான்
ஒதுக்கப்பட்டோருடன் சமபந்தி
போஜனமும் அருந்துகிறான்
ஆலயங்களில் எங்கள் நீண்ட கால வியாபாரத்தை
அடித்து நொறுக்குகிறான் எனவே
இவனைச் சிலுவையிலறையுங்கள்

வி. மைக்கல் கொலின்...

# சர்வதேச செய்திகள்

## கொவிட்–19: பிரேசிலில் ஒரே மாதத்திற்குள் 66,570 பேர் பலி



பிரேசிலில் கடந்த மார்ச் மாதத்தில் கொரோனா தொற்றினால் 66,570 பேர் உயிரிழந்திருப்பதோடு அது முந்தைய மாதத்தை விடவும் இரட்டிப்பு எண்ணிக்கையாக உள்ளதாக தரவுகள் காட்டுகின்றன. நோய்ப் பரவல் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில் நாட்டின் சுகாதாரத் துறை பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளது.

நோய்த் தொற்றை கையாள்வது தொடர்பில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ள நிலையில் இந்த வாரத்தில் முக்கிய புள்ளிகள் பலரும் பதவி விலகினர்.

எனினும் உள்ளூர் ஆளுநர்கள் மற்றும் மேயர்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முடக்கநிலை கட்டுப்பாடுகளுக்கு அவர் கடந்த புதனன்று எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

“வைரஸ், வேலை இன்மை என்ற இரண்டு எதிரிகள் எமக்கு உள்ளன. அது தான் யதார்த்தம். வீட்டில் இருந்துகொண்டு எம்மால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது” என்று தெரிவித்தார்.

கடந்த புதனன்று மேலும் 3,800 புதிய உயிரிழப்புகள் மற்றும் 90,000க்கும் அதிகமான தொற்றுச் சம்பவங்களும் பதிவாகின. பிரேசிலின் தினசரி கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையானது இந்த வைரஸ் தொற்றினால் உலகெங்கும் உயிரிழக்கும் கால் பங்கை தொட்டுள்ளது.

## எத்தியோப்பிய கிராமத்தில் முப்பது பேர் சுட்டுக்கொலை



எத்தியோப்பியாவின் ஒரோமியா பிராந்தியத்தில் கிராமம் ஒன்றில் துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டதாக சம்பவத்தை பார்த்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டில் இடம்பெற்று வரும் இனரீதியான வன்முறையின் தொடர்ச்சியாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்தத் தாக்குதிலில் தமது அண்டை வீட்டார் கொல்லப்பட்டதாக 50 வயது விவசாயியான வொசன் அன்டெகே தெரிவித்துள்ளார். அம்ஹாராஸ் இனத்தைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

'கார் வண்டி ஒன்றை பயன்படுத்தி உடல்களை எடுத்துச் சென்ற நாம் 30 உடல்களையும் அடக்கம் செய்தோம்' என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு வொசன் தெரிவித்தார்.

இரவு 9 மணியளவில் வந்த துப்பாக்கிதாரிகள் குடியிருப்பாளர்களை வெளிப்புறமாக ஓர் இடத்தில் ஒன்று சேர்த்து அவர்களை சுட்டுக்கொன்றதாக மற்றொரு குடியிருப்பாளர் சம்பவத்தை விபரித்துள்ளார்.

எத்தியோப்பியாவின் மிகப்பெரிய இனக்குழுக்களாக இருக்கும் ஒரோமோ மற்றும் அம்ஹாராவுக்கு இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மியன்மாரில் பேரழிவை தவிர்க்க பாதுகாப்பு சபையில் மன்றாட்டம்

### சீனா, ரஷ்யா, இந்தியா, வியட்நாம் முட்டுக்கட்டை



மியன்மாரில் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அங்கு இரத்தம் சிந்தப்படும் நெருக்கடி குறித்து மியன்மாருக்கான ஐ.நா சிறப்புத் தூதுவர் கிறிஸ்டின் ஸ்கெர்னர் பர்க்னர், பாதுகாப்புச் சபையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

15 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா பாதுகாப்புச் சபையின் மூடிய அறையில் கடந்த புதனன்று உரையாற்றிய ஸ்கெர்னர் பர்க்னர், பெப்ரவரி 1 ஆம் திகதி அதிகாரத்தை கைப்பற்றிய இராணுவத்திற்கு நாட்டை கையாள முடியாதிருப்பதாகவும் களநிலவரம் மேலும் மோசமடைவதாகவும் எச்சரித்துள்ளார்.

“மியன்மார் மக்களுக்கு என்ன சரியோ அதனை செய்வது மற்றும் ஆசியாவின் மையப்பகுதியில் பேரழிவை தவிர்க்க கூட்டு நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கு இருக்கின்ற அனைத்து சாதகங்கள் பற்றியும் அவதானம் செலுத்த வேண்டும்” என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரத்தம் சிந்தப்படும் நிகழ்வுகளின் போக்கை மாற்றுவதற்கு முக்கிய நடவடிக்கைகளை இந்தச் சபை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஸ்கெர்னர் பர்க்னர் கேட்டுக்கொண்டார்.

மியன்மாரில் வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் நியூயோர்க்கில் ஐ.நா கூட்டத்தை நடத்த பிரிட்டன் கோரிக்கை விடுத்திருந்தது. மியன்மாரில் இதுவரை குறைந்தது 521 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு கடந்த சனிக்கிழமை மாத்திரம் 141 பேர் கொல்லப்பட்டனர். மறுபுரம் முன்னரங்குப் பகுதிகளில் சிறுபான்மை கிளர்ச்சியாளர்கள் மற்றும் இராணுவத்திற்கு இடையிலான மோதலும் தீவிரம் அடைந்துள்ளது. இதனால் பாதுகாப்புத் தேடி மக்கள் அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

“இராணுவத்தின் இந்த கடுமையான நடவடிக்கைகளை முழுமையாக ஏற்க முடியாது. சர்வதேச சமூகத்திடம் இருந்து கண்டிப்பான செய்தி வழக்கப்பட வேண்டும்” என்று ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதுவர் பார்பரா வூட்வேர்ட் பாதுகாப்புச் சபை கூட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

சர்வதேசம் பதில் அளிக்கும் வகையில் பாதுகாப்புச் சபை பங்காற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாதுகாப்புச் சபை இதுவரை மியன்மாரில் இடம்பெறும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து இரு அறிக்கைகளை வெளியிட்டபோதும், சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் வியட்நாமின் எதிர்ப்புக் காரணமாக இராணுவம் ஆட்சியை கைப்பற்றியதை கண்டிக்கும் சொற்பதம் நீக்கப்பட்டதோடு அந்நாட்டின் மீது மேலும் நடவடிக்கை எடுப்பது தடுக்கப்பட்டது.

இதன்போது மியன்மார் இராணுவத் தலைவர்கள் மீதான தடை முயற்சியை சீனா நிராகரித்தது. இந்த நடவடிக்கை பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என்று ஐ.நாவுக்கான சீனத் தூதுவர் இந்த அவசரக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## கொவிட்–19: பிரான்ஸில் பாடசாலைகளுக்கு பூட்டு



பிரான்ஸில் அதிகரித்து வரும் கொவிட்–19 தொற்றுச் சம்பவங்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்டிருக்கும் புதிய கட்டுப்பாடுகளின் ஓர் அம்சமாக பாடசாலைகள் மூன்று வாரங்களுக்கு மூடப்படவுள்ளன.

அடுத்து வாரம் தொடக்கம் பாடசாலைகள் தொலைநிலை கற்கைக்கு மாற்றப்படும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மெக்ரோன் அறிவித்துள்ளார்.

கடந்த மாத ஆரம்பத்தில் பிரான்சின் சில பகுதிகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டிருந்த முடக்க நிலை ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வரும் சனிக்கிழமை தொடக்கம் அத்தியாவசியமற்ற கடைகள் மூடப்படுவதோடு நியாயமான காரணம் இன்றி தனது விட்டில் இருந்து 10 கிலோமீற்றருக்கு அப்பால் பயணிப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பிரான்சில் 5,000க்கும் அதிகமானவர்கள் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டில் நோய்த் தொற்று உச்சம் பெற்றுள்ளது.

கடந்த புதனன்று 59,038 புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவானதாக பிரான்ஸ் சுகாதார அமைச்சு தெரிவித்தது. பிரான்ஸில் இதுவரை 4.6 மில்லியன் நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 95,495 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் தடுப்பூசி போடும் பணியும் திட்டமிடப்பட்டதை விட மெதுவாக நடைபெறுகின்றது. கடந்த 3 மாதங்களில் வெறும் 12 வீதமான அளவு மக்களுக்கே அங்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அதனால், பொருளாதாரத்தை பாதுகாப்பதற்காக நாட்டைத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்ற தமது இலக்கைக் கைவிடும் கட்டாயத்திற்குத் மெக்ரோன் தள்ளப்பட்டுள்ளார்.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள நடமாட்டக் கட்டுப்பாடுகள் குறைந்தது ஒரு மாதத்திற்காவது நீடிக்கும் என்று கூறப்படுகிறது.



## எகிப்தில் மம்மிகளின் ஊர்வலம்

எகிப்தின் 22 பண்டைய பாரோ அரசர்கள் மற்றும் அரசிகளின் பதப்படுத்தப்பட்ட உடல்கள் கெய்ரோ நகர வீதியில் நாளை கண்கவர் அரச ஊர்வலமாக புதிய இடத்தில் வைப்பதற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளன.

பண்டைய எகிப்து பாணியில் அலங்கரிக்கப்பட்ட தேர்களில் 18 அரசர்கள் மற்றும் நான்கு அரசிகளின் மம்மிகள் மூப்பு அடிப்படையில் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

கடந்த பல தசாப்த காலமாக மத்திய கெய்ரோவில் உள்ள எகிப்து அருங்காட்சியகத்தில் இருந்த இந்த மம்மிகள் தலைநகரின் தெற்கில் 2017 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட எகிப்து தேசிய அருங்காட்சியகத்திற்கு மாற்றப்படவுள்ளன.

இங்கு இந்த மம்மிகள் தட்பவெப்பநிலையை கட்டுப்படுத்தக்கூடிய நவீன பெட்டிகளில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

தெற்கு எகிப்தில் கிறிஸ்துவுக்கு சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி புரிந்த இரண்டாவது செகெனென்ரே தாவோவின் மம்மி இந்த ஊர்வலத்தில் முதலாவது தேரில் எடுத்துச் செல்லப்படவுள்ளது. அதற்கு பின் கி.மு 12 ஆம் நூற்றாண்டில் இருந்த நான்காவது ரம்சீசின் மம்மி எடுத்துச் செல்லப்படும்.

பண்டைய எகிப்தின் பலம்மிக்க பெண் பாரோவான ஹட்செப்சுட் அரசி மற்றும் இரண்டாவது ரம்சிஸ் மம்மிகளும் இந்த ஊடர்வலத்தில் இடம்பெற்றுள்ளன.

நாளை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஊர்வலத்தில் எகிப்து கலைஞர்களின் இசை மற்றும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இவை அனைத்து அரச தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும்.

1881 தொடக்கம் பெரும்பாலும் லக்சோருக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட 22 மம்மிகளும் 1900களின் ஆரம்பம் தொடக்கம் எகிப்து அருங்காட்சியகத்திலேயே வைக்கப்பட்டன.

உற்பத்தியில் பிரச்சினை:

## அமெரிக்காவில் 15 மில். தடுப்பூசிகள் வீணாயின



தொழிற்சாலை தவறு காரணமாக ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் சுமார் 15 மில்லியன் கொரோனா தடுப்பு மருந்துகள் விணாகியுள்ளன. இதனால் அந்த நிறுவனத்தின் உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மெரிலாண்ட், பல்டிமோரில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் தயாரிக்கப்பட்ட மருந்து தேவையான தரத்தை கொண்டிருக்கவில்லை என்று அந்த மருந்து உற்பத்தி நிறுவனம் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தது.

தடுப்பு மருந்துக்கான கலவை சேர்க்கையிலேயே பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக அமெரிக்க ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட மருந்தில் பாதிப்பு இல்லை என்றும் மருந்து உற்பத்தியில் தாமதம் ஏற்படும் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு முறை மாத்திரம் போடத்தக்கதான ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பு மருந்து பைசர் மற்றும் மொடர்னா தடுப்பூசி போன்று உறைநிலையில் வைக்க வேண்டிய தேவை இல்லாததால் விநியோகிப்பது இலகுவாக உள்ளது.

## டிரம்ப் வீடியோவை அகற்றியது பேஸ்புக்



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் மருமகள் லாரா டிரம்பின் பேஸ்புக் பக்கத்தில் இருந்த டிரம்பின் வீடியோ ஒன்றையும் பேஸ்புக் அகற்றியுள்ளது.

அமெரிக்க பாராளுமன்ற கட்டடத்தில் டிரம்ப் ஆதரவாளர்கள் அத்துமீறி நுழைந்த சம்பவத்தை அடுத்து கடந்த ஜனவரி மாதம் சமூக ஊடகமான பேஸ்புக் டிரம்புக்கு தடை விதித்தது.

இந்நிலையில் பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சிக்கு பங்களிப்புச் செய்து வரும் லாரா டிரம்ப், டொனால்ட் டிரம்புடன் பல்வேறு விடயங்கள் பற்றி பேட்டி கண்டிருந்தார்.

அந்த வீடியோ பேஸ்புக்கில் போடப்பட்ட நிலையில், டிரம்புக்கு உள்ள தடை காரணமாக அவருடன் உரையாடும் வீடியோ நீக்கப்படுவதாக பேஸ்புக்கிடம் இருந்து லாரா டிரம்புக்கு மின்னஞ்சல் மூலம் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து பேஸ்புக் தவிர ட்விட்டர், யூடியுப், இன்ஸ்டாகிராம் என பல சமூக ஊடகங்களும் டிரம்புக்கு தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் மற்றுமொரு துப்பாக்கிச்சூடு: நால்வர் பலி



அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் அலுவலகக் கட்டிடம் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரு குழந்தை உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தின்போது பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் சந்தேக நபர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் பொதுமக்களுக்கு ஆபத்து இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த சம்பவம் பற்றிய மேலதிக விபரங்கள் உடன் வெளியாகவில்லை.

அமெரிக்காவில் கடந்த மாதம் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டனர். கடந்த மார்ச் 16 அன்று ஜோர்ஜியாவில் மசாஜ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதோடு மார்ச் 22 ஆம் திகதி கொலராடோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் பலியாகினர்.

நாட்டில் துப்பாக்கி கட்டுப்பாடுகளை கொண்டுவருவது பற்றி ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

(கூட்டுறவு சேவை, விற்பனை அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு)

# கூட்டுறவு சங்கங்களில் காசு வைப்புச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விடுக்கப்படும்

# விசேட அறிவித்தல்

கூட்டுறவு சங்கங்கள், 1972 இல. 05 கூட்டுறவு சங்க சட்டம் மற்றும் மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள கூட்டுறவு சங்க சாசனத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளரினால் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் மேம்பாட்டு விடுகை நிதிக் கொள்கையின் கீழ் இலங்கையில் வைப்பு மற்றும் கடன் விகிதாசாரம் தனிப் பெறுமதி வரை குறைவடைந்து செல்வதால், ஏனைய வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் தமது வைப்பு மற்றும் கடன் வட்டி விகிதாசாரத்தை குறைத்துக் கொள்கின்றனர்.

பொது மக்களால் கூட்டுறவு நிதி நிறுவனங்களில் காசு வைப்புச் செய்யும் போது, தமது வைப்பை எதிர்காலத்தில் மீளப் பெறக்கூடிய தகைமையுள்ள நிலை நிறுத்தல் மற்றும் சிறந்த முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட சங்களில் காணப்படுவதை உறுதி செய்துகொண்டபின் மாத்திரம் நிதி வைப்புச் செய்தலை நிறைவேற்ற வேண்டும் என்பதை நிதி வைப்புச் செய்யும் சகல வாடிக்கையாளர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல. 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி.:. பெக்ஸ் - 0112-330706**
**மின் அஞ்சல் - cg.nbsu@gmail.com**

## கொழும்பு மாநகர சபை

# பெறுகை அறிவித்தல்

பின்வரும் சேவை மற்றும் உருப்படியின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் கோருகின்றார்.

| | தொடர்பிலக்கம் | விளக்கம் |
|---|---|---|
| 1. | CPD/16/400/2021 | கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள மாநகர சபை வளவுகளுக்கான ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் 2021-02 (11 அமைவிடங்கள்) |
| 2. | CPD/16/3635/2020 | உத்தரவுபெற்ற நில அளவையாளர் மற்றும் நில அளவைச் சேவைகளுக்கான பெறுகை |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

1) கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம் (www.colombo.mc.gov.lk)
   i. மீளளிக்கப்படாத 5400.00 ரூபா விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
      அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
      ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
         - வட்டார அலுவலகம் 04,
           இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
         - சாக்கடை மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
           மாளிகாகந்த, கொழும்பு 10.
   ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

2) நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.
   i. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணமாக 5400.00 ரூபாவை நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு 2021 ஏப்ரல் 22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள, பெறுகைக்கான பிரதான கணக்காளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்காது / 2021 ஏப்ரல் 22ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் இரு பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் (விலைமனு பெட்டி) 2021 ஏப்ரல் 23ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் 2021 ஏப்ரல் 23ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

011-2686389 மற்றும் 011-2673173 ஆகிய தொலைபேசி எண்களினூடாக பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதும் இருப்பின் அவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# பெறுகை அறிவித்தல்

**கமத்தொழில், விவசாய அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.**

## தென் மாகாணம்

## தென் மாகாண நீர்ப்பாசன திணைக்களம்

01. தென் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் பெறுகைக் குழு தலைவர் மூலம் கீழ் குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்காக தகுதி பெற்ற மற்றும் தகைமை உடைய விலைமனுதாரர்கள் மூலம் தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரலின் கீழ் தென் மாகாணத்திற்குள் பதிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களிடம் மாத்திரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | திட்டம் | பி.செ. பிரிவு | குறைந்தபட்ச CIDA தரம் | சிவில் வேலை பெறுமதி (ரூபா) | விலைமனுப் பிணை பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **காலி மாவட்டம்** | | | | | |
| G/01/21 | கலுவராஜ வயலுக்கு இரு திறப்புகள் கொண்ட அணைக்கட்டு ஒன்றை நிர்மாணித்தல் | அக்மீமன | C9 | 516,876.57 | 5,170.00 |
| G/02/21 | மீப்பாவல பன்விலயாயவுக்கு அணைக்கட்டு உடனான பாலம் ஒன்றை நிர்மாணித்தல் | போபே பொத்தல | C9 | 816,454.38 | 8,165.00 |
| G/03/21 | நெலுவ சுதுவலிபதயாய கால்வாயை புனரமைத்தல் | நெலுவ | C9 | 639,615.10 | 6,400.00 |
| G/04/21 | கமகெதிவல அணைக்கட்டு மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல் | யக்கலமுல்ல | C8 | 2,866,765.84 | 28,670.00 |
| G/05/21 | நாகொட கலிபெதி தொல கால்வாயை புனரமைத்தல் | நாகொட | C8 | 2,963,080.18 | 29,630.00 |
| G/06/21 | நாகந்த கட்டு அத்தல கால்வாயை புனரமைத்தல் | ஹமராதுவ | C9 | 1,653,063.23 | 16,530.00 |
| G/07/21 | மெதகீபிய முனுமுனே அணைக்கட்டின் வடிவழியை மேம்படுத்தல் | பத்தேகம | C9 | 1,055,608.54 | 10,560.00 |
| G/08/21 | பலப்பிட்டிய கரிஜ்ஜபிட்டிய நெல் வயல் அபிவிருத்தி | பலப்பிட்டிய | C9 | 1,053,849.39 | 10,540.00 |
| G/09/21 | ஹதக்முல்ல அணைக்கட்டுடன் பாலத்தை நிர்மாணித்தல் | நியாகம | C8 | 2,405,335.95 | 24,055.00 |
| G/10/21 | அட்டஹவுல்யாய கால்வாயிற்கு அணைக்கட்டு ஒன்று நிர்மாணித்தல் | எல்பிட்டிய | C9 | 1,674,502.72 | 16,745.00 |
| G/11/21 | பொல்கஹவிலயாய மெத அல மாமெல் அல வரை மறுசீரமைப்பு | வெலிவிட்டிய திவித்துர | C9 | 1,542,078.90 | 15,420.00 |
| G/12/21 | கொய்கொட பயிர் கிணறுகள் நிர்மாணித்தல் | பலப்பிட்டிய | C9 | 747,844.41 | 7,480.00 |
| **மாத்தறை மாவட்டம்** | | | | | |
| M/02/21 | கும்புருகமுவ குளத்தின் பிரதான கால்வாய் வழியை கொங்றீற் செய்தல் | வெலிகமை | C8 | 4,291,610.00 | 42,920.00 |
| M/03/21 | திவெல்வத்த அருகாமையில் டிரெக்டர் தாண்டியை நிர்மாணித்தல் | கும்புருப்பிட்டிய | C9 | 810,230.29 | 8,105.00 |
| M/04/21 | தொடம்கஸ் மோதர டிரக்டர் தாண்டியை நிர்மாணித்தல் | கும்புருப்பிட்டிய | C9 | 1,025,117.94 | 10,250.00 |
| M/05/21 | தன்தெனிய குளத்தின் இடது கரையின் புனரமைப்பு | திக்வெல்ல | C8 | 3,658,991.94 | 36,590.00 |
| M/06/21 | பெரபனாத்த பாத்தவிட்ட பக்கச் சுவர் மற்றும் டிரக்டர் தாண்டி நிர்மாணம் | பஸ்கொட | C9 | 1,227,696.43 | 12,280.00 |
| M/07/21 | அங்குலுகஹ அணைக்கட்டை மேம்படுத்தல் | அகுரஸ்ஸ | C9 | 1,459,325.65 | 14,600.00 |
| M/08/21 | கருனாவல பக்கச் சுவர் நிர்மாணம் | ஹக்மன | C8 | 2,103,250.25 | 21,035.00 |
| M/09/21 | அபேகும்புர அணைக்கட்டு, பெலிவெட்டிய அணைக்கட்டு மற்றும் விவசாயப் பாதையை மேம்படுத்தல் | பிட்டபெத்த | C8 | 2,505,060.93 | 25,050.00 |
| M/10/21 | பிட்டதுவயாய கடல் நீர் தடுப்பு அணைக்கட்டு நிர்மாணம் | வெலிகமை | C9 | 894,985.38 | 8,950.00 |
| **ஹம்பாந்தோட்டை மாவட்டம்** | | | | | |
| H/01/20 | சியம்பலாகஸ் குளத்தின் மறுசீரமைப்பு | தங்கல்ல | C8 | 2,864,629.29 | 28,650.00 |
| H/02/20 | தெனகமஆர உடதெம்புர அணைக்கட்டை அமைத்தல் | ஒகெவெல | C8 | 3,727,836.06 | 37,280.00 |
| H/03/20 | பெலியத்த அம்புரு குள மதகு நிர்மாணம் மற்றும் வண்டல் மண்ணை அகற்றல் | வலஸ்முல்ல | C8 | 2,051,096.50 | 20,510.00 |
| H/04/20 | பன்சலேயாய அணைக்கட்டை புனரமைத்தல் | கட்டுவன | C8 | 2,862,709.69 | 28,630.00 |
| H/05/20 | எத்புட்டுவ கால்வாய் பாதை மற்றும் மதகு புனரமைப்புச் செய்தல் மற்றும் வண்டல் மண்ணை அகற்றல் | அம்பலன்தொட்ட | C8 | 3,084,416.05 | 30,845.00 |
| H/06/20 | தம்பரவ குளத்தின் இடது கரை கால்வாய் பாதையை புனரமைத்தல் | திஸ்ஸமஹாராமை | C8 | 2,834,301.60 | 28,345.00 |
| H/07/20 | கரமெட்டிய குளத்தின் இடது கரை மதகின் கால்வாயை புனரமைத்தல் | சூரியவெவ | C8 | 4,424,176.10 | 44,240.00 |
| H/08/20 | மீகஹமுலன அணைக்கட்டு புனரமைப்பு மற்றும் டிரக்டர் தாண்டி நிர்மாணம் | வெலியத்த | C8 | 3,456,753.28 | 34,570.00 |
| H/09/20 | பக்மீகஹமுலன அணைக்கட்டை புனரமைப்புச் செய்தல் அம்பகொல குளத்தின் தெற்காக | வீரகெட்டிய | C9 | 1,554,417.47 | 15,545.00 |
| H/10/20 | சீதாவக்கதெனிய குளத்தின் வடிவழியை புனரமைத்தல் | | C9 | 887,705.40 | 8,880.00 |
| H/11/20 | இஹலகம ரொட்டவலயாய கால்வாய் பாதையின் நீர் ஒழுங்காக்கியை (ரெகியுலேட்டர்) மறுசீரமைத்தல் | அம்பலன்தொட்ட | C8 | 2,422,360.50 | 24,225.00 |
| H/12/20 | மிரிஸ்வத்த அணைக்கட்டு கால்வாய் பாதைக்கு பக்கச் சுவர் நிர்மாணம், நீர் திசைதிருப்பியை நிர்மாணித்தல் மற்றும் கால்வாய் வடிவழியை புனரமைத்தல் | வலஸ்முல்ல | C9 | 2,310,909.98 | 23,110.00 |

இந்தத் திட்டத்தை வழங்குதற்காக தகுதியை பெறுவதற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு துறையில் பதிவு செய்திருத்தல் அல்லது தென் மாகாணத்தின் நீர்ப்பாசனம் தொடர்பில் அனுபவம் உள்ள மற்றும் திட்டம் ஒன்றுடன் தொடர்புபட்ட அதிகார எல்லையில் அனுமதிக்கப்பட்ட விவசாய சங்கம் ஒன்றாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது பதவியை உறுதி செய்யும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

02. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை 2021.04.02 ஆம் திகதி தொடக்கம் 2021.04.19 ஆம் திகதி வரை "மாகாண நீர்ப்பாசன திணைக்களம், 5ஆவது மாடி, மாவட்ட செயலாளர் அலுவலகக் கட்டிடம், காலி" அலுவலகத்தில் இருந்து அல்லது அந்தந்த மாவட்டம் சார்ந்த பெறுகை விண்ணப்பப்படிவத்தை எமது திணைக்களத்தின் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் இருந்தும் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை) ஒரு கேள்விமனுவுக்காக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை அலுவலகத்தின் கணக்கு பிரிவுக்கு செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

03. சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனு 2021.06.25 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

04. விலைமனுவுடன் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள விலைமனு பிணையை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அது 2021.07.25 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். இதனை நிலையான வடிவத்திற்கு அமைவான இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து அல்லது காப்புறுதி முகவர் நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்ட கோரும் போது பெறத்தக்கதான வங்கிப் பிணை அல்லது வங்கி வரைவு அல்லது அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீது மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 02 பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் "மூலப் பிரதி" மற்றும் 'நகல் பிரதி" என்று வெவ்வேறாக கடித உறைகளில் இடுதல் வேண்டும் என்பதோடு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மூலப் பிரதி, இரண்டாவது பிரதி என்று குறிப்பிடுதல் வேண்டும். அந்த இரு கடித உறைகளையும் ஒரு கடித உறையில் இட்டு முத்திரை இட்டு குறித்த தொழில்துறையின் பெயரை இடது பக்க மேல் மூலையில் எழுதி 2021.04.20 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "தலைவர் - பெறுகைக் குழு, மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசன திணைக்களம், 5ஆவது மாடி, மாவட்ட செயலாளர்கள் அலுவலகக் கட்டிடம், காலி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதை செய்தல் வேண்டும்.

06. அனைத்து விலைமனுக்களும் 2021.04.20 ஆம் திகதி மு.ப. 11.00 க்கு திறக்கப்படுவதோடு, விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு அதற்காக பங்கேற்க முடியும்.

07. தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

08. இது தொடர்பில் மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் 091-2245176 அல்லது 091-2223206 இல் பெற்றுக்கொள்ள முடியும். இந்த பெறுகை அறிவித்தல் திணைக்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான http://www.irrigationdept.sp.gov.lk/ இல் வெளியிடப்பட்டுள்ளது.

**பொறியியலாளர் ஏ. ரணசிங்க,**
**மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்/ பெறுகைக் குழு தலைவர்,**
**மாகாண நீர்ப்பாசன திணைக்களம்,**
**5ஆவது மாடி, மாவட்ட செயலாளர் அலுவலக கட்டிடம், காலி.**

2021.04.02

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want




- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# மாத்தளை பிரதேச சபை
## பலாபத்வல

## விலைமனுக்கோரல் — 2021

மாத்தளை பிரதேச சபைக்குத் தேவையான கீழ்க்காணும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக உங்களது விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. டெஸ்க்டொப் கணனி இயந்திரம் 02**

**02. டொட் மெட்ரிக்ஸ் வகை பிரிண்டர் 01**

இதற்கான விலைமனுக்கள் மற்றும் மாதிரிகளை குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டிய படிவத்தொகுதி 2021.04.01 முதல் 2021.04.20 வரை மு.ப.8.30 முதல் பி.ப.3.00 வரை மீளளிக்கப்படாத ரூ.500.00 படிவக் கட்டணத்தை காசு/காசோலை/காசுக்கட்டளைகள் மூலம் மாத்தளை பிரதேச சபைக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2021.04.21 பி.ப.1.30 ஆவதுடன் பதிவுத்தபாலில் தலைவர், மாத்தளை பிரதேச சபை, பலாபத்வல என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கலாம் அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் திறத்தல் 2021.04.21 பி.ப.2.00 இற்கு மாத்தளை பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் வழங்குநருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**யூ.எச்.எம்.கபில பண்டார ஹேன்தெனிய**
**தலைவர்,**
**மாத்தளை பிரதேச சபை**
**பலாபத்வல**
**0664933680**
**2021.03.31**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்.460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம் - உது/2/5/2/10**

**காணி அமைச்சின் இலக்கம் - 13/97/FR/241**

காணி மாவட்டத்தின் உடதும்பர பிரதேச செயலாளர் சுஜானி ஆர்.விஜேதுங்க ஆகிய நான் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்.460) 33வது பிரிவின் கீழே குறிப்பிட்டுள்ள உப அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நஷ்ட ஈட்டு தொகையாக ரூபாய் இருபத்து ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் (2750000.00) உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக தெல்தெனிய மாவட்ட நீதி மன்றத்தின் வழக்கு எண் LAD 158/20இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் உங்களுக்கு தெரிவிக்கிறேன்.

**பிரதேச செயலாளர்**
**உட தும்பர**

**2021.03.26 ஆம் திகதி**

**உப அட்டவணை**

காணியின் பெயர் : இலியங்கஹமுல தோட்டம்

ஆரம்ப வரைபட இல : அ.க.பி.6079

துண்டு இல : 1,2

விஸ்தீரணம் : 20.2361 ஹெக்டயார்

அமைவிடம் : உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில் கங்தெக்க கோரளை சிறுபிரிவில் கரபகெடிய கிராமத்தில் அமைந்துள்ள இலியங்கஹமுல தோட்டம் எனும் காணி

Replies to Classifieds

&

**மொத்த :** அன்வெர்டீன் தேயிலை தொழிற்சாலை, டயமண்ட் பிளாஸ்டிக் பிலிமதலாவா, ஹாரிசன்ஸ் கற்றவர்கள் - பிலிமதலாவா, ஊரக வளர்ச்சி மையம் பிலிமதலவா,
**விநியோகம் :** கட்டிடம் எண் 246 பிலிமதலாவா-யத்தினுவாரா, இசாரா வளாகம் - பிலிமதலாவா, லக்ருவா-பிலிமதலாவா, பிலிமதலாவா

2021-04-06 15:30-17:30
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** மிட்டாய் ஆடை, த ரடய லகலா பூஸ்டர் பம்ப் நிலையம்
**விநியோகம் :** எலடெட்டா (வஹுன்கோஹோ)


**பிரதி பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்)**
**இலங்கை மின்சார சபை,**
**இல. 04, அஸ்கிரிய பாதை, கண்டி.**
**தொ.பே.: 081-2234000**


*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*

# இலங்கையில் தடுப்பூசி வழங்கல் சேவையை வலுப்படுத்துவதற்கு ஜப்பானின் புதிய நிதியுதவி

கொவிட்19 பெருந்தொற்றுக்கான உதவிகள் உள்ளடங்கலாக தடுப்பூசி வழங்கல் சேவைகளை வலுப்படுத்துவதற்கும், இலங்கையில் தடுப்பூசி வழங்கலுக்கான குளிரூட்டல் வசதிகளை ஏற்படுத்துவதற்கும் ஆதரவளிப்பதற்குமாக ஜப்பான் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினூடாக அண்ணளவாக 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

கொவிட்19 இனால் பாதிக்கப்பட்ட அதிக தாக்கம் ஏற்பட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்ட வயதான மக்கள் தொகை உள்ளடங்கலாக முன்னுரிமையளிக்கப்பட்ட குழுக்களுக்காக இலங்கையானது தற்போது தடுப்பூசி வழங்கலை முன்னெடுத்து வருகின்றது. 'இலங்கையின் நீண்ட கால பங்காளர் என்ற வகையில், கொவிட்19 இற்கு எதிரான எமது இணைந்த முயற்சியில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினூடாக அவசர கால நிதியுதவியை வழங்குவது எமக்கு பெருமையாக உள்ளது. குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலி திட்ட கருவிகள் மற்றும் அதுசார்ந்த தொழில்நுட்ப உதவிகளின் கொள்வனவு என்பது நாடு முழுவதிலும் தடுப்பூசியின் சமமான அணுகல் மற்றும் துரித பகிரலை உறுதி செய்யும் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சுகியாமா அகிரா தெரிவித்தார்.

இப்புதிய, உரிய தருணத்தில் வழங்கப்படுகின்ற ஜப்பானின் பங்களிப்பானது குளிரூட்டப்பட்ட அறைகள், குளிரூட்டிகள் மற்றும் தடுப்பூசி கொள்கலன்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்குப் பயன்படும். மேலதிகமாக, குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலி கட்டமைப்பை செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல், வினைத்திறன் மிக்க தடுப்பூசி முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதுடன், அனைத்து மாவட்டங்களிலும் தடுப்பூசி களஞ்சியப்படுத்தலின் வெப்பநிலை கண்காணிப்பு முறைமையின் பரவலாக்கலுக்கும் இந்த உதவித் தொகை பயன்படுத்தப்படும். 'கொவிட்19 தடுப்பூசி சேவைகள் வழங்கலை ஆதரவளிப்பதற்கும், இலங்கையின் சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்துவதற்கும் சுகாதார அமைச்சுடனான எமது இணைந்த முயற்சிகளில் ஜப்பானிய அரசாங்கத்தின் பங்களிப்புகள் மிக முக்கியமானவையாகும்' என இலங்கை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் பிரதிநிதி எமா பிரிஹம் தெரிவித்தார். சுகாதார அமைச்சின் தேசிய தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதற்காக கொவெக்ஸ் வசதியின் ஊடாக, மார்ச் மாதத்தில், முதல் தொகுதியான 264,000 ஒக்ஸ்போர்ட் அஸ்ராஷெனக்கா 'கொவிஸீல்ட்' தடுப்பூசிகளை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தருவித்து வழங்கியிருந்தது.

ஜப்பானிய அரசாங்கத்தின் இந்த உதவியானது, கொவிட்19 தடுப்பூசி நிகழ்ச்சிகளை பெறுதல், சேமித்தல் மற்றும் வழங்குதல் உள்ளடங்கலாக இலங்கையின் ஒட்டுமொத்த தடுப்பூசி வழங்கல் முறைகளை வலுப்படுத்தும் முயற்சிகளுக்கு ஒரு உந்துசக்தியாக அமைகிறது.

---

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

## மத்திய மாகாணம் - 01 - ஏப்ரல் 2020

### மின் பொறியியலாளர் பிரதேசம் - தம்புள்ளை

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - தம்புள்ளை

2021-04-03 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
மொத்த : ஜெ.சீ. விலெஜ், எண் .78/1, , கே.டி.ஆர் .-எச்.எம்.என்.ஜி. மொஹமட் (அரிசி மொரகொல்லவ), கே.டி.சீ அரிசி தயாரிப்பாளர்கள், லங்கா பொலிசக்ஸ் (2), டாடா மற்றும் மிட்லேண்ட் அரிசி ஆலை, தம்புலுஓயா அரிசி ஆலை, நிஷ்ம் (ஜயவர்தன) அரிசி ஆலை, பெரேரா ஹோட்டல் (புதிய ஹோட்டல்), லங்கா பிளாஸ்டிக் (பொலிசக்-1), திலங்கா ஹோட்டல், ஆயிஷா அரிசி ஆலை, கலாசார பாரம்பரியம் மற்றும் ஸ்பா, விக்டோரியா அரிசி ஆலை
**விநியோகம் :**
புவகத்தவல -1, ரத்மல்கஹஎல - 1, கிரிகொல்ல வேஹென்பிடிய, மடமுல்ல திட்டம், பிந்தாபர திட்டம் - தம்புள்ள, புவகத்தவல - 2, தித்தவெல்கொல்ல - ஐஐ, வெல்லங்கஸ்மன , யாபகம, யாப்பகம சியாபாலவெவ திட்டம், கண்டலாம சந்தி, பஹலவெவ யாபகம, தம்புள்ள - யாப்பகம, தித்தவெல்கொல்ல, அடஹன மாலுவ, ரத்மல்கஹஎல - 2 (குடகம்மனாய)

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - நாவுலை

2021-04-05 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
மொத்த : கல்குங்கா நீர்த்தேக்கத்திற்கான தலைமைப் பணிகள், கல்குங்கா ரஸ்வோயிர் தலைமையக திட்டப்பணி
விநியோகம் : மொரகஹகந்தா ரிசர்வேர் ஹெட் வொர்க் ப்ரோ.

2021-04-07 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
மொத்த : ஹிங்குரான அக்ரொ (தனியார்) நிறுவனம் - 2, எஸ்.எ.்.ப் - ரெஜிமெண்டல் சென்டர் - மடவல உல்பத
**மொத்த மற்றும் விநியோகம் :**
இராணுவ முகாம் கோஹலோன்வல
**விநியோகம் :**
நாலந்த பம்ப் ஹவுஸ், ஹபுகஸ்யாய, நாலந்த ஆர்.ஈ, பித்தகண்ட டெலிகாம் டவர் -நாலந்த, பொகஸ்பொபெல்ல, ஹிங்குரான அக்ரொ (தனியார்) நிறுவனம் - 1, தலபிடிய (டெவரடபொல)

2021-04-08 08:30-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :**
தலகஹகொடுவ (ராஜ்ஜம்மன), தொழிற்துறைகளின் படம் (தனியார்) நிறுவனம்.
விநியோகம் : அகரஹடுவ மேடை - ஐஐ, அண்டவல, குபலொலுவ ஜே.சி. அண்டவல (முகலன்யாய), ராஜ்ஜம்மன நீர் வழங்கல், கெடவல, ராஜமல் உயன, ஓபல்கல வட்டா, செனகம, நாகல காலனி, அகரஹடுவ, அண்டவல லிஹினிபிடிய, ஓபல்கல

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - பல்லேபொளை

2021-04-09 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :**
அலுத்வேவா எடிசலாட் ரூ டயலொக் டவர்
**விநியோகம் :**
நீலகமா ஹக்கிரில்லா, பம்பராகஸ்வேவா - நான், நீலகமா, அலுத்வேவா எகோடயா, சீனா மாநில கட்டுமானம் (புவக்பிட்டியா)

### மின் பொறியியலாளர் பிரதேசம் - கலகெதர

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - கத்தராலியட்டை

2021-04-06 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
மொத்த : மீஸ் ஹோல்டிங்ஸ் இலங்கை (தனியார்) நிறுவனம், பெங்குயின் துணி, பெங்குயின் ஓய்வு நேர அணிவகுப்பு
**விநியோகம் :**
அக்கரவட்டெ, கலகெதர டெலிகொம், கலகெதர வீ.சீ - சக்தி தறி, கலகெதர மருத்துவமனை வீதி, மடிகெ, கிறீன் வூட், உனபதயாய

2021-04-08 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கிறீன் வூட்

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - நுகவெலை

2021-04-06 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :**
**விநியோகம் :** கண்டேகும்புர

2021-04-08 08:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :**
ஹரிஸ்பத்துவ டி.எஸ். அலுவலகம், undefined, டிரான்ஸ் அபரல் (தனியார்) நிறுவனம் - ஹரிச்பட்டுவ
**மொத்த மற்றும் விநியோகம் :** பரிகம
**விநியோகம் :**
தித்தபஜ்ஜல, உல்லண்டுபிடிய, நுகவெல, நுகவல - 2 (இராஜபஇஹில்ல சந்தி), மத்திய கல்லூரி - நுகவெல, மபமாடுல்ல (மலகாம்மன)

2021-04-10 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** டெல்மா லங்கா (தனியார்) நிறுவனம், டெல்மா போட்டி நிறுவனம்
**விநியோகம் :** விகுஃஹம்பொல, அலதேனிய, பேரகம

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - பூஜாபிட்டிய

2021-04-01 08:30-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
மொத்த : அன்கும்புர தேயிலை தொழிற்சாலை
**மொத்த மற்றும் விநியோகம் :**
விலான தேயிலை தொழிற்சாலை, ஹப்புகொல்ல (ஆர்.ஈ. + பீ.எஸ்)
**விநியோகம் :**
மிரிஸ்ஸல அம்பமேதென்ன, அன்கும்புர ii (எஹலமுல்ல), அன்கும்புர, அன்கும்புர iii (எகோதமுல்ல), படகோல்லதெனிய, பன்சலத்தென்ன காலனி, மிரிஸ்ஸல சௌ ஆலை, ரம்புகேல்ல, விலான ஆர்.ஈ (எலேகடே), மிரிஸ்ஸல (தேன்ன கம்மத்த)

### மின் பொறியியலாளர் பிரதேசம் - கண்டி

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - வடக்கு

2021-04-01 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கஹல்லா

### மின் பொறியியலாளர் பிரதேசம் - கட:டுகஸ்தோட்டை

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - வத்தேகமை

2021-04-06 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**

**மொத்த :**
இ.டீ.ன், ஹுனாஸ் வீழ்ச்சி ஹோட்டல், எம்.டி.வி. (டயலொக் பிராட் பேண்ட்), எஸ்.எல்.பி.சி.
**விநியோகம் :**
எல்கடுவ, ஹுன்னஸ்கிரியா, மஹோயா, பங்கிரிமானாவா, மகாமோலா, எல்கடுவ எஸ்டேட், பஹல வேஹிகல, இஹல வேஹிகல, இம்புல்பிட்டிய, மேல் ஹன்னசகிரிய

### மின் பொறியியலாளர் பிரதேசம் - குண்டசாலை

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - தும்பறை

2021-04-01 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** போகாஸ்கும்புரா, நெலும்பதின்னா
**விநியோகம் :** அலும்பே பிலவாலா - ii, பிலவாலா 1 (கோகோ கோலா)

2021-04-02 09:00-12:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :**
தொலைத் தொடர்பு குண்டசலே, இயக்குனர் ஜெதிகா கலனிகேதனய, தொழில்துறை மேலாண்மை தேவ். & பயிற்சி நிறுவனம்
**விநியோகம் :**
தேசிய Buddhist மையம், சாசா வீட்டுவசதி திட்டம், ராணுவ முகாம் லட்சன்பாயா, ஜனசவிகம - ii, ஜனசவிகம - i, பல்லேகேல் இராணுவ முகாம், பல்லேகேல் சோயா திட்டம் - ii, செயலக வளாகம், ஸ்மார்ட் சட்டை முளைப்பு, பிரதம நில வதிவிடங்கள், பல்லேகலே சோயா திட்டம் ை, பல்லேகேல் கிராமம்

2021-04-03 10:00-12:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
விநியோகம் : ஜெதவனராம கோயில் (CEB குவாட்டர்களுக்கு அருகில்), சன் மேட்ச் ராஜவெல்லா (அலுத்வட்டா)

2021-04-07 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** நித்துலேமடா, அம்பகலந்தா காமெடா, நித்துலேமடா பார்கெட்டா வெல்லா, சேனாரத்வேலா, அம்பகலந்தா, கும்புகண்டுரா சர்ச் ஆர்.டி.
**மொத்த மற்றும் விநியோகம் :** மாபெரியடென்னா அலுவலகம்
**விநியோகம் :**
தனானந்தனா விதை ஆலை, மாபெரியாடென்னா - நான் (தேங்காய் சேகரிக்கும் மையம்), ராஜாவெல்லா ஹோல்டிங்ஸ், கும்புகண்டுரா - i, மாபெரியாடென்னா - ii, ராஜவெல்லா கோல்.்.ப், விக்டோரியா இணைப்பு (மரிலாந்து), குழிப்பந்தாட்ட சங்கம்

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - ஹசலக்க

2021-04-02 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** நாரங்கமுவ, ரணமுரே

2021-04-05 08:30-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ராண்டெனிகலா அணை தளம் (ஆற்றல் இல்லை)

2021-04-06 10:00-16:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தேவகிரியா

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - உடுதும்பறை

2021-04-09 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மூனமல்பெலெஸா

2021-04-10 08:30-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** மகாவேலா, மெடிவாக்கா கங்கொட
**விநியோகம் :**
கலுண்டென்னா, ஹபுகந்தா, தேவஹந்தியா, மதுகல்லே, புதிய மதுகல்லே, மடிவலதென்னா, உதபிடவாலா, கலாவாலா, உததும்பரா - கலவெல்ல, ஏர்டெல் டவர் கலபிதகம - மதுக்கல்லா, கலபிதகம மினிவங்கமுவ, பல்லே பிடாவாலா, கலல்கமுவ

### மின் பொறியியலாளர் பிரதேசம் - மாத்தளை

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - மாத்தளை

2021-04-01 08:30-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :**
குரலவேலா, பாலகடுவா வெலிகண்ட, வாடமாடா, ஓவில்கந்தா, எனசால்மாதா, குராலவேலா திட்டம் (நுகாபிட்டி), மகுலேமதா, பதிங்கொல்லா

2021-04-01 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** பன்சலடென்னா
**விநியோகம் :** கலல்பிட்டி, ஆலுவிஹேர் கோயில்

2021-04-02 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** நீர் சுத்திகரிப்பு, , நீர் உட்கொள்ளல்

2021-04-03 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** சமந்தவா

2021-04-07 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :**
2 வது மைல் போஸ்ட் தென்னா, ஹலங்கொட (உடுப்பிஹில்லா), கூபியங்கோடா, கோட்டுவேகர, உடுப்பிஹில்லா (புதிய உடுப்பிஹில்லா)

2021-04-09 08:30-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
விநியோகம் : கனங்கமுவா - ii, கனங்கமுவா - i

2021-04-10 10:00-11:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ஹுனுகலா, ஹங்கரங்கந்தா, , செல்லுவ காந்தா, அல்கதுவா தோத்தலாவா, பிதகண்ட மாநிலம், கண்டேநுவாரா, மொபிடெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட்., பிதகண்டகம, புஞ்சி செல்வகந்தா

#### வாடிக்கையாளர் சேவை நிலையம் - வேரகமம்

2021-04-01 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மடகும்புரா-உததண்ணா, aus சாகலா எஸ்டேட், ஹோரகொல்லா, வெலங்கஹவத்தா, நிகல் ஓயா, பட்டக்கரே

2021-04-05 08:30-17:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** அலகோலாமடா

2021-04-10 10:00-11:00

**மின் தடைப்படும் இடங்கள் :**
விநியோகம் : நெலுவகந்தா, முவண்டேனியா ஆர்.இ. எபிடமுல்லா, கரஹதுங்கலா (ஜனபடயா)

**பிரதி பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்)**
**இலங்கை மின்சார சபை,**
**இல. 04, அஸ்கிரிய வீதி, கண்டி.**
**தொ.பே. 081-2234000**

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*

# பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2021 அப்ரல் 30ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடகப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

முகாமையாளர் - தங்க கடன் பிரிவு வெலிபல் பினான்ஸ்
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்



# வாகன விற்பனை

| டுவெல் பேர்பஸ் | | வருடம் | இடம் |
|---|---|---|---|
| PC-6240 | டொயோட்டா | 2006 | எம்பிலிபிட்டிய |
| மோட்டார் கார் | | வருடம் | இடம் |
| CAD-3687 | டொயோட்டா பிரியுஸ் | 2013 | ராகம |

மேலே காணப்படும் வாகனம் எமது இடத்தில் பரீட்சித்து பார்ப்பதுடன் Auction முறையில் விலைக்கு வழங்கப்படும்

எம்பிலிபிட்டிய (ஹிரான்) - 0773 038 137

ராகம - 0113 288 893

LB FINANCE
எல்.பி. ஃபினான்ஸ் பி.எல்.சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


# இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு

## பெரும்பாக கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவத் திட்டம்

**வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ நிபுணத்துவ சேவைகளை வழங்குவதற்காக தனிநபர் நிபுணர்களை பணிக்கமர்த்தல்**

இலங்கை அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனைப் பயன்படுத்தி பெரும்பாக கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. இத்திட்டமானது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுவதுடன் கொழும்பு மாநகர சபையானது (CMC) கொழும்பு மாநகர எல்லைக்குள் உள்ள வேலைகளை நடைமுறைப்படுத்துகின்றது. இதில் மேற்கூறப்பட்ட பகுதியிலுள்ள கழிவுநீர் பம்பும் நிலையங்கள் மற்றும் அதனோடிணைந்த கழிவுநீர் வலையமைப்பின் பாகங்களையும் புனர்நிர்மாணம் செய்யும் வேலைகள் உள்ளடங்குகின்றன.

நிபுணத்துவ சேவைகளின் பதவிநிலைகள் தனிநபர், உள்ளூர் மற்றும் கொழும்பு மாநகர கள-பணியக அடிப்படையைக் கொண்டது. மேற்படி வேலைகளை நடை முறைப்படுத்துவதற்கு, பொருத்தமான முகாமைத்துவ, தொழிநுட்ப மற்றும் ஒப்பந்த மேற்பார்வை ஒத்தாசைகளை வழங்குமுகமாக தனிநபர் அடிப்படையிலான வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ நிபுணர்களை பின்வரும் பதவி நிலைகளில் பதவிக்கமர்த்த உத்தேசிக்கப்படுகிறது.

| இல | பதவி நிலைகள் | பதவிகளின் எண்ணிக்கை | முன்மொழியப்பட்ட சம்பளம் |
|---|---|---|---|
| 1 | Senior Structural Design Consultant | 1 | 40,400.00 LKR per Working day |
| 2 | Electrical & Instrumentation Engineer | 1 | 20,000.00 LKR per Working day |
| 3 | Social Safeguard Specialist (Resettlement Expert) | 1 | 250,000.00 LKR per month |

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் பொருத்தமான முகாமைத்துவ மற்றும் தொழிநுட்ப தேர்ச்சியுள்ள தகுதியான நபர்களை ஆட்சேர்ப்பு செய்ய உத்தேசித்துள்ளார். தனிநபர் பணிகளுக்கான குறிப்பு விதிமுறைகள் (TOR), மற்றும் இதர தகவல்களை www.lgpc.gov.lk இணையத் தளங்களிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது Project Director, Project Management Unit, Greater Colombo Wastewater Management Project, No. 86, Millennium Centre, Ananda Coomaraswamy Mawatha, Colombo 7 (தொ.பே.0115736015, 0112665331, தொலைநகல் 0112665330) முகவரியிலுள்ள திட்ட முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

காலத்துக்குக் காலம் திருத்தப்படும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் Guidelines on the Use of Consultants by ADB and its Borrowers, March 2013 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாகவே நிபுணர்களின் தெரிவும் ஈடுபடுத்தலும் அமையும். ஆர்வமுள்ள, தகுதியுள்ள நபர்கள் தங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தும் படிவத்தை 2021.04.09ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக மேற்கூறிய விலாசத்தில் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**செயலாளர்**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவசாரங்கள் இராஜாங்க அமைச்சு**

# விலைக் கோரலுக்கான அழைப்பு

**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு 2021ஆம் வருடத்திற்கு இயைபான கால்நடை மருந்துகள், விலங்கு உணவுகள் மற்றும் புகைப்படப் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்**

## விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

## வடமத்திய மாகாணம்

வடமத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கால்நடை மருந்துகள் மற்றும் விலங்கு உணவு மற்றும் புகைப்படப்பிரதி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து மாகாணப் பணிப்பாளர் / பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் விலைகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பொருள் விபரங்கள் | சராசரி மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கன்றுக் குட்டிகளுக்கான பராமரிப்பு உணவுகளை வழங்குதல் | 1.00 | 10,000.00 | 1,000.00 |
| 02 | கன்றுக் குட்டிகளுக்கான மருந்துகள் வழங்குதல் | 3.00 | 30,000.00 | 1,000.00 |
| 03 | வளரும் கோழிகளுக்கான பராமரிப்பு உணவுகளை வழங்குதல் | 1.50 | 15,000.00 | 1,000.00 |
| 04 | 02 புகைப்படப் பிரதி இயந்திரங்களை வழங்குதல் | 0.50 | 10,000.00 | 1,000.00 |

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி முதல் 2021 ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அனுராதபுரம் கொடகே மாவத்தையில் அமைந்துள்ள மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண அலுவலகத்திற்கு 1000.00 ரூபா மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தைச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களுடன் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் (2021 ஜூலை 29) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உங்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து 2021 ஏப்ரல் 28ஆம் திகதி 03.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் மாகாணப் பணிப்பாளர் / தலைவர், பெறுகைக் குழு, மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கொடகே மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாணப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து 2021 ஏப்ரல் 28ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இந்த பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் வடமத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்கள் தேவையாயின் 025-2222533 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அனுராதபுரம்.**


**கூட்டிணைப்பு பற்றிய அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிப்பு விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**எம் வீ ஏ பிளாண்டேஷன் லங்கா (பிவீடி) எல்டிடீ**

பதிவிலக்கம்: **PV 130241**

பதிவு அலுவலகம்: **கபலான, வெல்ஹென்கொட, அம்பன்கம**

**கம்பனி செயலாளர்கள்**



## சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP QT-8103 Bajaj, 2009, WP YE-6848 Bajaj, 2010, WP YP-574 8 Bajaj, 2011, threewh e el கூடிய விலைக் கோரி க்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 025143

**Repeat Your ad For Better Offers**


# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

**திவுலப்பிட்டிய முன் முடிவுறுத்தல் கொங்கிறீட் முற்றவெளிக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல்**

இந்த அதிகார சபைக்குரித்தான திவுலப்பிட்டிய முன் முடிறுவுத்தல் கொங்கிறீட் முற்றவெளிக்கு வருடத்திற்குத் தேவையான பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இல. | விபரம் | அலகு அளவை | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (வெட் வரியுடன்) (ரூபா) | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணமாக ரூபா | வங்கி / காப்புறுதி உத்தரவாதம் மூலமாக ரூபா |
| PRDA/WP/PRO/2021/19 | முறுக்குக் கம்பிகள் 10 மி.மீ | Bar | 7000 | 2,000.00 | 71,300.00 | 143,000.00 |
| | முறுக்குக் கம்பிகள் 12 மி.மீ | Bar | 10000 | | | |
| | பைண்டிங் வயர் | Kg | 1000 | | | |
| | **கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2021-04-23ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு** | | | | | |
| PRDA/WP/PRO/2021/20 | ஆற்று மணலை பெற்றுக் கொள்ளல் | $m^3$ | 200 | 2,000.00 | 13,500.00 | 27,000.00 |
| | 12.5 மி.மீ. அளவிலான கருங்கற்களை வழங்குதல் | $m^3$ | 500 | | | |
| | **கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2021-04-23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு** | | | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2021.04.05ஆம் திகதியிலிருந்து 2021.04.22ஆம் திகதி மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை / காப்புறுதி பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் என்பன மேற்குறிப்பிட்ட வகையில் இவ்வலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக கனரக வாகனங்களின் டயர்களை கொள்முதல் செய்வதற்கான விலைமனுக்கோரல்**

**RDA/DPR/HVT/2021/67**

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக கனரக வாகனங்களின் டயர்களை கொள்முதல் செய்வதற்குத் தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| வகை | விபரம் | எண்ணிக்கை (No's) |
|---|---|---|
| பிட்டுமன் பௌசர் | **11.00 x 20, 18PR** ரிப் டயர் | **54** |
| | **11.00 x 20** டியூப் | **54** |
| | **11.00 x 20** பிளெப் | **54** |
| வீல் லோடர் | **17.5 x 25, 12 PR** லக் டயர் | **04** |
| | **17.5 x 25** டியூப் | **04** |
| | **17.5 x 25** பிளெப் | **04** |

2. வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்பாட்டு முகவர் நிறுவனமாக செயற்படும்.
3. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
4. மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து **91 நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாகும்.
5. மனுக்கள் **ரூ.65,000.00** பெறுமதியுடைய மனுக்காப்புறுதிப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் **2021.08.26** ஆம் திகதி வரை அவை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். செல்லுபடியான காப்புறுதிப்பிணைத் தொகை இணைக்கப்படாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. மனுதாரரினால் மனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிடப்பட்டு காரியாலய முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும்.
7. தேவையேற்படின் மனு ஆவணங்களை **கொள்முதல் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நான்காவது மாடி, "மகநெகும மஹமெதுர" இல - 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள** காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் இலவசமாக பரீசீலனை செய்துக்கொள்ள முடியும்.
8. மனு ஆவணங்களை **2021.04.05** ஆம் திகதியிலிருந்து **2021.04.27** ஆம் திகதி வரை மு.ப. **09.00 மணியிலிருந்து பி.ப. 03.00 மணி** வரையான காலப்பகுதியினுள் அலுவலக நாட்களில் **பணிப்பாளர், வழங்கல் பிரிவு, அபிவிருத்தி அதிகாரசபை, நான்காம் மாடி, மகநெகும மஹமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கையளிக்க முடியும். மீள் செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். மீளச்செலுத்தப்படாத **ரூ.3,240/- (வட்வரி உள்ளடங்களாக)** கட்டணத்தை **இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை, 0000001943** கணக்கிலக்கத்திற்கு **பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி அதிகாரசபை எனும் பெயரில்** வைப்பிலிடுவதன் மூலம் பெற்றக்கொள்ள முடியும்.
9. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2021.04.28** ஆம் திகதி **பி.ப.02.00** மணித்தியாலங்களுக்கு முன்னர் **தலைவர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கல் குழு, முதலாம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கையளிக்க முடியும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் **"டயர் கொள்முதல்"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர்**பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல 216,** எனும் முகவரியில் **அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 'மகநெகும மஹமெதுர, நான்காவது மாடியில் அமைந்துள்ள பணிப்பாளர் (கொள்முதல்) காரியாலயத்தில்** உடனடியாக ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு அச்சந்தர்ப்பத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படும்.
11. மேலதிக விபரங்களை **011-2884790** என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக ஊடாக **பணிப்பாளர் (கொள்முதல் பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகாரசபையை** தொடர்புகொள்ள முடியும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**










வெள்ளவத்தை, மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேக கர்மாரம்பம் கடந்த 29.03.2021 திங்கட்கிழமை ஆரம்பமாகி நேற்று முன்தினம் காலை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெற்றது. நிகழ்வில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் பிரதமர் அலுவலக பிரதானி யோஷித்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோரும் எண்ணெய்க்காப்பு சாத்துவதை படங்களில் காணலாம்.

# இன நல்லிணக்க செயற்பாடுகளில் 'சைனாபோர்ட் பௌண்டேஷன்'





முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பேருவளை , சீனன்கோட்டையில் சமூக நலப் பணிகள் மற்றும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு 2010 ம் ஆண்டு 'சைனாபோர்ட் பௌண்டேசன்' என்ற நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்போடு பிரதேச வாசிகளது நலன்கருதி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், சமூக நலப் பணிகளை முன்னெடுக்கும் நோக்கோடு இந்நிறுவனம் தனது பணிகளை கடந்த சுமார் 10 வருடங்களாக எவ்வித வேறுபாடுமின்றி வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த சமூக நிறுவனத்தின் நோக்கம் எவ்வித வேறுபாடுமின்றி கல்விப் பணிகளுக்கு உதவுதல், வசதியற்றோருக்கு வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுதல், பெண்களுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்கோடு தையல் பயிற்சிகளை நடத்துதல் போன்றன நிறுவனத்தின் செயற்பாடுகளில் சிலதாகும்.

மேற்படி நிறுவனம் நடாத்தி வரும் இலவச தையல் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற பெண்கள் தமது சுயதொழில் முயற்சிகளை தொடர்வதற்காக தையல் உபகரணங்களை வழங்கி ஊக்குவித்தல் போன்ற சமூக அபிவிருத்திப் பணிகளை இந் நிறுவனம் பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றது.

**எம்.எப்.எம். அஜ்வாத் பாஸி**

ஐநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் பௌண்டேஷனினால் நடாத்தப்பட்ட தையல் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளதுடன், அவர்களில் பலர் தற்போது சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோன்று, பேருவளை பிரதேசத்தில் வாழும் மாற்று மத சகோதரர்களோடு இணைந்து பணியாற்றி, இன நல்லுறவை ஏற்படுத்தும் சிறந்த பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றமையை குறிப்பிட்டாக வேண்டும்.

அதனடிப்படையில், அண்மையில் இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்றை இரத்தினபுரியைச் சேர்ந்த பிரபல மாணிக்க வியாபாரியான திஸ்ஸ ஆனந்தவின் பூரண அனுசரணையில் பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் சீனன்கோட்டை பள்ளிச் சங்கமும், சைனா போர்ட் பௌண்டேசனும் இணைந்து வெற்றிகரமாக நடாத்தியமை விசேட அம்சமாகும்.

இந் நிகழ்வில் பேருவளை பிரதேச பௌத, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் கலந்து பயன் பெற்றதோடு, பௌத்த மதபெரியார்கள் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். பிரதேசத்தில் வாழ் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையையும் ஏற்படுத்துவதற்கு இந்நிறுவனம் பலவகையிலும் முயற்சித்து வருவதற்கு இந்நிகழ்வு சிறந்த எடுத்துக்காட்டாகுமென நிறுவன தலைவர் அல்ஹாஜ் பஸால் மர்சூக் எமக்கு வழங்கிய செவ்வியின் போது தெரிவித்தார்.



அதேபோன்று ரமழான் காலங்களில் நோன்புகளை நோற்பதற்கு பொருளாதார ரீதியாக கஷ்டப்படுகின்றவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை பாரியளவில் விநியோகித்து சமூகத்தின் ஏழை, எளியவர்களது தேவைகளை பூர்த்திசெய்வதற்கு பங்களிப்பு செய்து வருவதும் இந்நிறுவனத்தின் பிரதான செயற்திட்டமாகும்.

சைனாபோர்ட் பௌண்டேஷன் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு சீனன்கோட்டை வாழ் செல்வந்தர்கள், அரசியல் வாதிகள், சமூக ஆர்வலர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஒரு தசாப்த காலமாக பல்வேறு சமூக நலப் பணிகள், அபிவிருத்தித் திட்டங்கள், இன நல்லிணக்க செயற்பாடுகளை இப்பகுதிகளில் மேற்கொண்டு வருவதாக தெரிவித்த தலைவர், பிரதேச வாசிகள் மற்றும் ஏனைய மாற்றுமத சகோதரர்களின் நலன் கருதி எதிர்காலத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தினகரனுக்கு வழங்கிய விசேட செவ்வியின் போது தெரிவித்தார்.





# மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட்: இலங்கை அணி 250-8 ஓட்டங்கள் குவிப்பு








இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், மூன்றாம்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதன்படி 3ம் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 250 ஓட்டங்களை பெற்றது.

ஆட்டநேர முடிவில், பெத்தும் நிஸங்க 49 ஓட்டங்களுடனும் லசித் எம்புல்தெனிய ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் களத்தில் இருந்தனர்.

இதற்கமைய மேற்கிந்திய தீவுகள் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை அணி 104 ஓட்டங்கள் பின்னிலையில் இருக்கிறது.

அண்டிகுவா மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற் இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 354 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரத்வெயிட் 126 ஓட்டங்களையும் ராகிம் கோர்ன்வோல் 73 ஓட்டங்களையும் மேயர்ஸ் 49 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சுரங்க லக்மால் 4 விக்கெட்டுகளையும் துஷ்மந்த சமீர 3 விக்கெட்டுகளையும் விஷ்வ பெனார்டோ, லசித் எம்புல்தெனிய, மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில், 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 250 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை அணி சார்பில், திமுத் கருணாரத்ன 1 ஓட்டத்துடனும் லஹிரு திரிமன்னே 55 ஓட்டங்களுடனும் ஒசே பெனார்டோ 18 ஓட்டங்களுடனும் தினேஷ் சந்திமால் 44 ஓட்டங்களுடனும் தனஞ்சய டி சில்வா 39 ஓட்டங்களுடனும் நிரோஷன் டிக்வெல்ல 20 ஓட்டங்களுடனும் சுரங்க லக்மால் 6 ஓட்டங்களுடனும் துஷ்மந்த சமீர 2 ஓட்டங்களுடம் ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அல்சாரி ஜோசப் மற்றும் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கெமார் ரோச், செனோன் கெப்ரியல், கெய்ல் மேயர்ஸ் மற்றும் ஜெரமைன் பிளக்வுட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

# யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு இலகு வெற்றி

**யாழ்ப்பாணம் விளையாட்டு நிருபர்**

களனி சிறி தம்மாலோக்க கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிகள் இடையே நடைபெற்று முடிந்திருக்கும், ஒருநாள் மோதலில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. டிவிஷன் – 2 பாடசாலை கிரிக்கெட் தொடரின் அங்கமாக அமையும் இந்த ஒருநாள் போட்டி கடந்த (29) கிரின்திவெல உபாலி குணரட்ன மைதானத்தில் ஆரம்பமாகியது.

தொடர்ந்து போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் தலைவர் தெய்வேந்திரம் டினோஷன் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை சிறி தம்மாலோக்க அணிக்கு வழங்கியிருந்தார்.

கடந்த வாரம் வத்தளை லைசியம் கல்லூரி அணி வீரர்களை தமது கடைசி டிவிஷன்2 மோதலில் வீழ்த்தியிருந்த, சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் அதே உத்வேகத்துடன் இப்போட்டியினையும் ஆரம்பம் செய்தனர்.

அதன்படி, போட்டியில் நாணய சுழற்சிக்கு அமைவாக முதலில் துடுப்பாடிய சிறி தம்மாலோக்க கல்லூரி அணிக்கு, சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்துவீச்சாளர்கள் ஆரம்பத்தில் இருந்தே அழுத்தம் வழங்கியிருந்தனர்.

இதனால், 44.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்த சிறி தம்மாலோக்க கல்லூரி அணியினர் 134 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர். தம்மாலோக்க கல்லூரி அணியின் துடுப்பாட்டம் சார்பில் லக்சித்த பொத்தேஜூ 6 பௌண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்கள் பெற்றிருந்ததே வீரர் ஒருவர் அவரது தரப்பில் பெற்ற கூடுதல் ஓட்டங்களாக பதிவானது.

மறுமுனையில் அசத்தலாக செயற்பட்ட சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்துவீச்சு சார்பாக அன்டன் சரண், தமிழ்க்கதிர் அபிரஞ்சன் மற்றும் தியாகராஜா வினோயன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்திருந்தனர்.

பின்னர், போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 135 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் அதனை வெறும் 18 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து அடைந்தனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் வெற்றிக்கு பந்துவீச்சு போன்று துடுப்பாட்டத்திலும் உதவியாக இருந்த தியாகராஜா வினோதன் அரைச்சதம் பூர்த்தி செய்து 9 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். மறுமுனையில், அதிரடியாக துடுப்பாடிய அன்தோனிப்பிள்ளை சுகேதன் வெறும் 16 பந்துகளுக்கு 6 சிக்ஸர்கள் அடங்கலாக 41 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்று தனது தரப்பின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்தார். சிறி தம்மாலோக்க கல்லூரி அணியினது பந்துவீச்சு சார்பில் கவிந்து மல்ஷான், ஹசிந்து பிரசாத் மற்றும் சுபுன் மலிந்து ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சாய்த்தும் அவர்கள் அனைவரதும் பந்துவீச்சு வீணானது.



# தமிழ், சிங்கள புதுவருடத்தினை முன்னிட்டு சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மேன்மை தங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்திற்கான நோக்கு கொள்கை திட்டத்தின் கீழ் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் எண்ணக்கருவின் அடிப்படையில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கௌரவ தேனுக விதானகமகேவின் வழிநடாத்தலின் கீழ் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் என்பன ஒன்றிணைந்து தமிழ், சிங்கள புதுவருடத்தினை முன்னிட்டு இரு பாலாருக்குமான மாபெரும் சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் 2021 நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இப் போட்டிகளானது 17.04.2021 சனிக்கிழமை மட்/இந்துக்கல்லூரி மைதான முன்றலில் காலை 6.30 மணிக்கு மரதனும், காலை 8.00 மணிக்கு சைக்கிள் ஓட்டமும் நடைபெறவுள்ளன. சைக்கிள் ஓட்டம் ஆண்கள் 120 கி.மீ, பெண்கள் 60 கி மீ. அரை மரதன் ஓட்டம் 20 கி மீ , 10 கி.மீ மரதன் ஓட்டம் ஆகியன இடம் பெறவுள்ளன. இப் போட்டிகளில் 1ம் இடத்திற்கு 50,000/ பணப்பரிசும், 2ம் இடத்திற்கு 25,000/ பணப்பரிசும், 3ம் இடத்திற்கு 10,000/ பணப்பரிசும் மேலும் 10 வது நிலை வரை பாராட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. போட்டிகளுக்கான விண்ணப்ப படிவங்களை மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட்டு பிரிவு மற்றும் சகல பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகப்பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர்களிடம் அல்லது மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட்டு பிரிவில் எதிர்வரும் 09.04.2021 திகதிக்கு முன்னர் சமர்பித்தல் வேண்டும். சகல போட்டிகளுக்குமான வயதெல்லை 2021.01.01ம் திகதியில் 18 வயதினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்கு கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா பிரதேச இளைஞர்கள் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளும் 48 நாட்களில் நிறைவேற்றித் தரப்படும்





**கிண்ணியா மத்திய நிருபர்**

கிண்ணியா பிரதேச இளைஞர்கள் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளும் இன்னும் 48 நாட்களில் நிறைவேற்றி வைப்பதற்கு அதிகபட்ச முயச்சிகளை எடுப்பதோடு, மேலும் இனங்காணப்படுகின்ற பிரச்சினைகளையும் அவ்வப்போது தீர்த்து வைப்பதாகவும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கடந்த (31) திருகோணமலை இளைஞர்களுக்கு உறுதி மொழி அளித்தார்.

திருகோணமலை மாவட்ட இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில், மாவட்ட இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த போதே இந்த உறுதி மொழியை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் இளைஞர் பாராளுமன்ற அமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் மாவட்டதிலுள்ள சில இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேரடியாக கலந்துரையாட வாய்ப்பளிக்கப்பட்டது.

இதன்போது கிண்ணியா பிரதேசத்தில் உள்ள அல் அக்ஸா தேசிய பாடசாலை மற்றும் கிண்ணியா மத்திய கல்லூரி தேசிய பாடசாலை ஆகியவற்றுக்கான ஜிம் நிலையம் மற்றும் உள்ளக விளையாட்டரங்குகளை நிர்மாணித்து தர வேண்டும் என அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் கிண்ணியா பிரதேசத்துக்கான பொது ஜிம் நிலையம் மற்றும் கிண்ணியாவில் காணப்படும் பிரதான மூன்று விளையாட்டு மைதானங்களான எழிலரங்கு மைதானம், அல்இர்பான் மைதானம் மற்றும் முனைச்சேனை மைதானம் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்வதற்கான யோசனைகளும் இளைஞர்களால் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு, கிண்ணியாவில் சட்டபூர்வமாக அனுமதி பெறாமல் சுமார் 26 விளையாட்டு கழகங்களை கையாண்டு நடாத்தி செல்லும் கிண்ணியா கிரிக்கெட் மன்றக்குழுவை சட்டபூர்வமாக இலங்கை கிரிக்கெட் குழுவில் இணைத்து அதனை அரச அனுமதியுள்ள ஒரு மன்றக்குழுவாக அனுமதி பெற்றுத் தருமாறு வேண்டி ஒரு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்கான ஒரு கட்டடம்மும் அத்துடன் இணைந்தவாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் தொழில் பயிச்சி நிலையம் ஒன்றையும் பெற்றுத் தர வேண்டும் எனவும் அமைச்சரை வேண்டிக் கொண்டனர்.

மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரை திருமலை மாவட்ட இளைஞர் பாராளுமன்ற ஒருங்கிணைப்பு குழு அமைச்சர் ஆர். முகம்மது சபான் இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரிடம் கையளித்தார்.








பேருவளை சீனன் கோட்டை எகொடவத்தை பகுதியில் ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்டுள்ள போட் கோட் பெட்மின்டன் உள்ளக ஸ்டேடிய விளையாட்டு தொகுதியை பாராளுமன்ற உறுப்பினரும் சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்க தலைவருமான மர்ஜான் பளீல் கடந்த சனிக்கிழமை திறந்து வைத்தார். சீனன் கோட்டையைச் சேர்ந்த பிரபல இரத்தினக்கல் வர்த்தகர் ஸுஹைல் ஸுபைர் தனது சொந்த நிதியின் மூலம் இந்த பூ பந்து விளையாட்டு தொகுதியை அமைந்துள்ளார்.
பேருவளை பகுதியில் இவ்வாறான விளையாட்டுத் தொகுதியொன்று இல்லாமல் இருந்தது. இந்த புதிய பூ பந்து விளையாட்டுத் தொதி அமைக்கப்பட்டதன் மூலம் இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படுகிறது. பிரதேச இளைஞர்களின் வேண்டுகோளின் பேரில் இரத்தினக்கல் வர்த்தகர் ஸுஹைல் ஸுபைர் இதனை அமைத்துக் கொடுத்துள்ளார். சகல நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த விளையாட்டுத் தொகுதி மூலம் பேருவளை மற்றும் களுத்துறை மாவட்ட இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் பெறும் பலனடைவர்.
திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் இங்கு உரை நிகழ்த்தும் போது கூறியதாவது : இளைஞர்கள் தமது ஓய்வு நேரங்களை வீணான செயற்பாடுகளில் பயன்டுத்தாது இது போன்ற விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த வர்த்தகர் ஸுஹைல் ஸுபைறின் பாராட்டுவதோடு இதன் வளர்ச்சிக்காக பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னால் முடியுமான அனைத்து உதவிகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்வேன் என்றார்.
இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த சில்வா சார்பில் அவரது புதல்வர் மற்றும் பேருவளை பிரதேச சபைத் தலைவர் மேனக விமல ரத்ன, விளையாட்டுத் தொகுதி ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான மர்ஸுக் அஷ்ரப் உட்பட சீனன் கோட்டை பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் இந் நிகழ்வில் பங்குபற்றினர். படங்கள் பேருவளை விஷேட நிருபர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.